62

ஸ்ரீ:

# பாண்டிய மன்னர்

## பகுதி-2

பொள்ளாச்சி

முனிசிபல் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

'வித்துவான்'

பண்டித - நா. கனகராஜையர்

இயற்றியது.

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர், மதுரை.

பதிப்புரிமை] 1930 [விலை அணா, 8.

THE B.N. PRESS
1922
PRINTERS MADRAS.

ஸ்ரீ:

# முகவுரை

தமிழ் நாட்டிலே முன்னாளில் இறைமை பூண்டிருந்த முடிமன்னர் மூவகையார். அவருட் பண்டையர் என்ற பெயர்க்குரிமை பெற்றவர் பாண்டியரே. பாண்டியருள் இந்நாளில் யாம் பெயரளவால் அறியத் தக்கவர் பலருளர். சங்க நூல்கள் உலகிலே வளருமாறு தமிழ்த் திருப்பணி புரிந்து புகழ் படைத்த சங்க காலத்துப் பாண்டியருட் சிலர் வரலாறேனும் தெளிவுற விளங்குமாறில்லை. இந்நிலைக்குக் காரணம் பண்டை வரலாறுகள் என வழங்குவனவற்றுட் பெரும்பாலன இயற்கை நெறிக்கு மாறாகவுள்ள அநேக செய்திகளைக் கொண்டிருப்பதும், அறிஞருள் எவரும் உண்மை வரலாறுகளை ஒரு கோவைப்படத் தொகுத்து எழுதி உதவாமையுமேயாம். எட்டுத் தொகை நூல்கள் எல்லாம் இக்காலத்தில் அச்சுருவம் பெற்று வெளிவந் துலவுகின்றன. இத்திருப்பணி புரிந்த பெரியார்க்குத் தமிழ் மக்கள் நன்றி என்றும் உரியதே. பத்துப் பாட்டும் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றிரண்டொழிந்தனவும் நல்ல ஆராய்ச்சியுரைகளோடு வெளிவந்துள. இவற்றையெல்லாம் ஒரு சேர வைத்து ஆராய்வதோடு, சாஸனங்கள் என வழங்கும் பண்டையோர் எழுத்துக்களையும் பிற ஆதாரவுகளையுங் கொண்டு ஆராய்வதால், நம் பண்டைய மன்னருட் சிலர் வரலாறேனும் ஒருவாறு துணியப்படலாம்.

பாண்டியர் வரலாறுகளைச் சமீப காலத்தில் ஆங்கில மொழியில் எழுதியுபகரித்த ஸ்ரீமான். நீலகண்ட சாஸ்திரியார்க்கும், தமிழ்மொழியில் சுருக்கம் சுருக்கமாகவேனும் வரைந்துதவிய அம்பா சமுத்திரம் தமிழ்ப் புலவர் அரிகர பாரதியார்க்கும், தமிழ் நாட்டுச்சரித்திரம் அறியும் ஆவலுடையோர் கடமைப்பட் டிருக்கின்றனர். இவ்வாறாகிய பல வகை உதவிகளைக் கொண்டு சங்க காலப் பாண்டியருள் ஓர் ஐவர் வரலாறுகளை விளக்கியுரைக்க இந்நூல் எழுந்தது. இந்நூலின் முதற் பகுதியில் மூவர் பாண்டியரைப் பற்றியும், இரண்டாம் பகுதியில் இருவர் பாண்டியரைப்பற்றியும் கூறப்படும். சங்கச் செய்யுட்களின் ஆதாரவைக்கொண்டு அறியலாகும் வரலாறுகளை இடையிடையே பொருத்தமான முறையில் அக்கால மக்கள் மனப்போக்குக்கும் வாழ்வின் நிலைக்கும் ஏற்ப விவரித்து, முன்னைய வரலாறுகளால் அறியலாகாத சில பாத்திரங்களையும் இடையிடைப் பெய்து, பழமையிற் புதுமை சில கலந்திருப்பினும் பழமைக்கு மாறுபடா வண்ணம் இயன்றவளவு அமைத்து, இந்நூற்பகுதிகள் எழுதப்பட்டுள. 'இவ்வாறு எழுதப்படுவது உண்மை வரலாறு ஆகுமோ?' என்ற கேள்வி எழலாம். உண்மை வரலாற்றின் சில பகுதிகளை நன்கு விளக்க உதவ வேண்டி அயற்பொருள்கள் இடையிடைப் பெய்யப் பட்டுள்ளனவே யொழிய, வேறு எவ்வகையிலும் சரித்திரப் போக்கினை மாற்றவோ மறைக்கவோ செய்யாமையாலும், பள்ளிக்கூட மாணாக்கர் உள்ளத்தினைக் கவர்ந்து அவர்கட்குப் பாண்டியர் ஐவர் வரலாற்றினை விளக்கும் அரும்பணி பூண்பதாலும், இஃது உண்மை வரலாற்றோடு பெரும்பாலும் ஒத்ததே. இவ்வைவரை வரிசைப்படுத்தியது கால வாராய்ச்சி செய்து உண்மை

தெளிந்த மனவுறுதியினு லன்று; சங்க நூல்களிற் காணப்படும் சிற்சில வரலாறுகளின் உதவியாலேயே யாம். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, மாங்குடி மருதனுர் பாடிய மதுரைக் காஞ்சியில், முற்காலத்து அரசன் எனவும் நல்லோர் சேர்க்கையாற் பேரின்பம் பெற்ருன் எனவும் புகழப்பட்டுளான். நிலந்தரு திருவின் நெடியோன் என்ற பெயர் அச்செய்யுளில் அதனை யடுத்து வந்துளது. தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனுர் பாடிய பாயிரத்தில் வரும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற பெயரும் முதுகுடுமியை நெட்டிமையார் பாடிய செய்யுளில் வரும் முந்நீர் விழவின் நெடியோன் என்ற பெயரும் அதனேடு பொருத்தி ஆராயத் தக்கன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடும் பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளத் தென்றிசை யாண்ட தென்னவனும் அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தியவனும் இந்திரன் இட்டமாலை பூண்டோனும் மேகத்தைச் சிறை செய்தவனும் ஆகிய ஒரு பாண்டியன் முந்நீர் விழவின் நெடியோன் என்று முன்னே கூறப்பட்டவனு, அவனின் வேருு என்று ஆராய்வதும் அவசியமே. திருவிளையாடற் புராணத்தால் அறியப்படும் உக்கிர குமார பாண்டியன் இச்செயல்கள் செய்திருப்பதாய் அப்புராணத்தின் உதவியால் விளங்கு மாகையால், இவ்வளவு பெருமையும் படைத்தவன் உக்கிரப் பெருவழுதியாய் இருக்கலாமோ என்று சிலர் கூறுகின்றனர்.

அகநானூறு தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதி யென்பது அந்நூல் வரலாற்ருல் விளங்குகிறது. இவ்வுக்கிரப் பெருவழுதிக்கு நண்பனுயிருந்த சோழன் இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பான், பின்னு

ளிலே தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழி யனால் வென்று சிறைப்படுத்தப்பட்ட கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை என்ற சோழனால் போர் புரிந்து வெல்லப்பட்டிருக்கிறான். உக்கிரப் பெருவழுதியால் தொகுப்பிக்கப் பெற்ற அகநானூற்றில் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் வரலாறு தெரிவிக்கும் செய்யுட்கள் ஒன்பது உண்டு. உக்கிரப் பெருவழுதி காலத்தில் அரங்கேற்றப் பெற்ற திருக்குறளின் செய்யுட்கள் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்றை விளக்கிய இளங்கோவடிகளாலும் மணிமேகலை யாசிரியர் சீத்தலைச் சாத்தனாராலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றால் உக்கிரப் பெருவழுதியென்பான் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்குப் பிற்காலத்தவனா, ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முற் காலத்தவனா என்பதும் விளங்கவில்லை. இறையனார் அகப்பொருள் உரை கேட்டவன் உக்கிரப் பெருவழுதி யேயோ, வேறு பாண்டியனோ என்பதும் விளங்கவில்லை. நக்கீரர், புறநானூற்றிலே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியிருக்கிறார்; இறையனார் அகப் பொருளுக்குப் பொருள் உரைத்திருக்கிறார். உருத்திர சன்மன் அந்நாளில் ஐயாட்டைப் பிராயத்தானாய் இருந் தான் என்பது அவ்வுரையிற் காணும் செய்தியாம். அவனே அகநானூறு தொகுத்தான். இந்நக்கீரரே, நெடுநல்வாடை பாடித் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் புகழ்ந்தவர். கூல வாணிகன் சாத்தனார் மணிமேகலை பாடிய காலத்திருந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைத் தவிரப் பாண் டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனையும் பார்த்துப்

புகழ்ந்தவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனாற் சிறைப்பட்ட கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை கபிலருக்கு நண்பனாவன். அவர் பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தைச் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன்மீது பாடினர். அவன் முன்னவனுக்கு என்ன முறையானோ! தலையாலங்கானத்துப் போரில் இறந்தசேரல் இவ்விருவர்க்கும் என்ன முறையானோ!

இவ்வாறு பல அரசர் பெயரும் முன்பின் அறியலாகா வண்ணம் பிணைந்து கிடக்கும் செய்யுட்களிலிருந்து உண்மை வரலாற்றை ஊகித்துணர்வது மிகவும் சிரம சாத்தியமே. உக்கிரப் பெருவழுதியும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் இரு வேறு அரசர் அல்லர், ஒருவனே என்று துணிந்தாரும் உளர். சங்க நூற் குழப்பத்துக் கிடையில் அவர் துணிவுக்குக் கிடைத்த ஆதரவு என்னவோ என்பது அறியலாவதாயில்லை.

இந்நிலையில் இவ்வைவர் பாண்டியர் வரலாறுகளை அவ்வவரைப் புகழ்ந்து புலவர் பாடிய செய்யுட்களில் இருந்து தொகுத்து ஒன்றோடொன்று கலவா வண்ணம் எடுத்து எழுதுவது எளிதோ, பெருமுயற்சியால் இயல்வதோ என்பதை இச்செய்யுட்களை ஆராய்வதே பொழுது போக்காக உடைய அறிஞர் அறிவர். உண்மை வரலாற்றோடு வேறு சிலவற்றைக் கலந்து வைத்தது தொடர்பட்ட சரித்திரமாக இவை தோன்று வதற்கே யன்றி, வேறு கருத்தானன்று.

தமிழ்ப் பயிற்சி பெருகவேண்டும், பண்டை நூல் களில் உள்ளவற்றை ஆராயும் அறிவு வளர வேண்டும் என்று எங்கும் முழக்கமாய் இருக்கும் இந்நாளில்,

பாண்டியர் வரலாற்றை உரைக்க வெழுந்த இச்சிறு நூல் ஆங்கில கலாசாலை மாணவத் தொகுதியினர்க்கும் பிறர்க்கும் சிறிதளவேனும் அம்முயற்சியில் ஊக்கம் பிறப்பிக்குமாயின், அதுவே இதனை யெழுதியதாற் பெற்ற பெரும்பயனாக நினைக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

போள்ளாச்சி,
4—9—'30.

நா. கனகராஜையர்,
தமிழ்ப் பண்டிதர்.

---

## உள்ளுறை

---


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. உக்கிரப் பெருவழுதி | ... | 1 |
| 2. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் | ... | 47 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 5 | இறப் | இராப் |
| ஷை | 7 | என்றும் | என்று |
| 23 | 6 | என்றூர் | என்றூர். |
| 24 | 17 | திரை | திறை |
| ஷை | 19 | வெளிக்கும் | பிறர்க்கும் |

பிழைகளை முன்னரே திருத்திக்கொள்க.

# உரிமையுரை

வழுதியரா மோரைவர் வள்ளன்மை போற்ற
எழுதியவிந் நூலுரிமை யேற்கத்—தொழுதெனது
தாயாம் மதுரைத் தமிழ்ச்சங்கத் தெய்வத்தை
வாயாற் புகழ்வன் மகிழ்ந்து.

மக்கள் மழலைமொழி மாநிலத்துத் தாயர்க்கு
மிக்க இனிமையுற மேவுதலால்—மக்கள்
இனத்துட் சிறியேன் எனதுமொழி யெந்தாய்
மனத்துள் அடைப்பள் மகிழ்ந்து.

பாண்டியர் ஓரைவர் பண்டைவர லாறுசொல
வேண்டிய இந்நூல் மிகுபுலமைப்—பாண்டிய
பாண்டித் துரைவளர்த்த பைந்தமிழின் சங்கத்தை
வேண்டிப் புகுதும் விழைந்து.

நா கனகராஜ அய்யர்.

# பாண்டிய மன்னர்

## (பகுதி—2)

### 1. உக்கிரப் பெருவழுதி

உலகம் என்பது எல்லாவற்றையும் தனக்குள் அடக்குவதாம். எண்ணிறந்த வகையான உயிர்களும் உடல்களும் உலகத்துள் அடங்கும். இவையெல்லாவற்றினும் சிறப்பாய் மேன்மைப் பிறப்புப் பெற்ற மனிதனும் உலகத்துள் அடக்கமே. உலகம் ஒன்றைச் செய்யவும் மற்றொன்றைப் பேசவும் வேறொன்றை நினைக்கவும் ஆற்றல் உள்ளது. உலகத்துக்கு மனம் வாக்குக் காயம் என்ற திரிகரணங்கள் உண்டு. பெரிய அளவிலே பேசப் படும்போது உலகம் தனது திரிகாணங்களால் எல்லா வுயிர்க்கும் பொதுவாகிய நலத்தை யெண்ணிப் பேசி யியற்றுகிறது. சிறிய அளவிற்பிரிக்கப்படும்போது தனித் தனி ஒவ்வோர் உயிர்க்கும் அதனதன் இனத்துக்கும் உறையும் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ற வண்ணம் தொழிற்படுகின்றது. இதனால், ஞானியர் உலகம், அஞ்ஞானியர் உலகம், ஆடவர் உலகம், பெண்டிர் உலகம், இளஞ்சிறார் உலகம், பொதுவர் உலகம், சிற்றுயிர் உலகம், பேருயிர் உலகம், வீணர் உலகம், உழவர் உலகம்,

கற்ருர் உலகம், கல்லார் உலகம் எனப் பல தோன்ற லாயின. ஆயினும், இயற்கை நெறி பற்றிச் சிந்திப் போமாயின், தன்னை யொழிந்த பிற வுயிர்களை யெல் லாம் தனது அறிவின் மாட்சியால் அடக்கி யாளவல்ல மனிதனே உலகம் என்ற சொல்லில் அதிக வுரிமை பெறுவா ஞகின்ருன். அவ்வினத்துள்ளும், அறிவே சிறப்பாகையால், உலகம் ஒன்று கூறுகிறது, எண்ணு கிறது, செய்கிறது என்ருல், அறிவிற் சிறந்தார் இயல் பையே விளக்குவது அவ்வாக்கியங்களின் நோக்கமாம். இம்முறையை விளக்கவன்ருே, 'உலகம் என்பது உயர்ந் தோர் மாட்டே,' என்று பெரியார் கூறினர்?

இவ்வாறுள்ள உலகத்துக்கு இயற்கை இரு வேறு வகையாம்: சிலர் செல்வத்தாற் சிறந்திருப்பர்; சிலர் அறிவின் நுட்பத்தால் உலகு புகழத் தக்கவராய் இருப் பர். இவ் விருதிறத்தாரும் உலகின் உடம்பாவர். உல கத்திலே சில காலம் செய்யும் செயல் எல்லாம் செல்வ முடையார் சிந்தித்தவாறே செல்லவும், சில காலம் அறிவுடையார் கருதியவாறே அமையவும் காண்போம். நாகரிகம் மிக்க தேசங்களிலே இவ்விரு திறப் போரும் இன்றும் காணப்படுகின்றன.

'அறிவுடையோனூறு அரசும் செல்லும்,' என் பது உண்மையாமாயினும், இந்நாளிற் பல நாடுகளிலும், 'பொருளுடையோன் வழிப் புரவலன் செல்லும்,' என்ற மொழியே முழங்கக் காண்கின்ருேம். இத ஞல் உலகம் இந்நாளிலே பொருளாளர் இடையிற் புகுந்து அடங்கிவிட்டது என்று கூறலாம். ஆனல், அபூர்வமாகச் சில விடங்களிலே பொருளும் அறிவும்

பொருந்திவிடுவதுண்டு. அவ்வண்ணம் பொருந்துமிடங்களில் பொருளுடையோன் ஒருவன் சென்ற வழி பலரும் செல்ல, அவன் சொல்வதே உலகச் சொல்லாய், அவன் செயலும் நினைவும் உலகச் செயல் நினைவாய் மதிக்கப்படும் நிலைமை உண்டாகலாம். அறிவும் திருவும் ஒருங்கு படைத்த பெரியார் பலர் கருதுமாறு ஒரு நாடு செல்லல் முறையாம் என்பது இந்நாளில் எங்கும் காணப்படுவதாகையால்,

"நாருத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்
நீருய் நிலத்து விளியரோ — வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ போய்யிலா
நன்மக்கள் பக்கம் துறந்து."
"இருவே றுலகத் தியற்கை: திருவேறு ;
தெள்ளிய ராதலும் வேறு."

என்ற மூதுரைகள் பழமை யெய்தின.

இந்நாளிலன்றி முன்னுளிலும் அரசரிற் சிலர் அருங்கலை விநோதராய்ப் பெரும்புலமைச் செல்வராய் வாழ்ந்திருந்தனர் என்பது, யாம் கேள்வியுறும் உண்மை வரலாறன்றோ ? அவ்வாறு இருந்த புரவலரில் உக்கிரப் பெருவழுதியைப் போன்று சிறந்த புகழ் படைத்தார் எவரும் இலர் என்றே துணிந்துரைக்கலாம்.

வழுதியர் குலத்து விளக்கமாகி, ஏழிசை நூற் சங்கத்திருந்த புரவலப் புலவராகி, இயற்றமிழ் வளர்ச்சிக்கு ஏற்ற துணையாகியிருந்த உக்கிரப் பெருவழுதியின் வரலாறு விரித்துரைப்பது தமிழ் மொழியின் சிறப்பை விளக்குவதேயாம்.

மதுரை நகரின் பெருமையை விளக்கத் தம் புலமையை உதவிய எண்ணிறந்த புலவர்க்குப் புரவலனாகிய உக்கிரப் பெருவழுதி, பாண்டிய நாட்டின் தலைமையையேற்றுக்கொண்டு சிறிது காலம் ஆயிற்று. தன் முன்னோர் புகழினும் தன் புகழ் சிறப்பதால், தன் குடிக்குப் பெருமை அதிகமாம் என்பதே அவன் உள்ளக் கருத்து. அக்கருத்தை நிறைவேற்றி வைக்கத் தக்க ஆராய்ச்சித் திறம் அமைந்த அமைச்சரையும், படைத்தலைவரையும், புலவரையும், பிற பெரியாரையும் அவன் தெரிந்து தெளிந்து, 'இதனை யிதனால் இவன் முடிக்கும்,' என்று ஆய்ந்து, அதனை அவன்கண் விடும் அறிவின் நுட்பத்தால் தூதரையும் ஒற்றரையும் படைத்துக்கொண்டு, அரசியல் நுட்பம் நன்குணர்வானாய், அரசியற்றி வந்தான்.

அந்நாளிலே நாட்டின் தென் பகுதி யெல்லை மிகவும் பரந்திருந்தது. தமிழ் நாடு என்பது, வடக்கில் வேங்கடமும், தெற்கிற் குமரிக் கடலும், கிழக்கிலும் மேற்கிலும் பெருங்கடலும் ஆகிய எல்லைக்குள் அடங்கியதாய் இருந்தது. தெற்கே குமரிக் கடல் என்று கூறப்பட்டது, அந்நாளிலே நிகழ்ந்த கடல் கோளால் உண்டாகிய செயற்கைக் கடலாம். தமிழ் நாட்டின் தெற்கெல்லையில் குமரி என்ற ஒரு மலையும், அம்மலையிலிருந்து பாய்ந்தோடிய குமரி யென்றதோர் ஆறும் இருந்தன. இக்குமரியாற்றுக்கும் தெற்கே எழுநூறு காதம் நிலப்பரப்பு இருந்தது. அங்கு நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. அந்நாடுகளின் தென் கோடியில் பஃறுளியாறு என்ற பேராறு ஓடிக்கொண்டிருந்தது. இறைவன் செய

லாற் பெரியதொரு பிரளய முண்டாகி, இவையனைத்தையும் கடல் விழுங்கிவிட்டது. அதனால், குமரிக்கோடு என்ற பெரிய மலையும் குமரியாறும் இருந்த இடம் தெரியாது அழிந்தபின், குமரிப் பௌவம் என்ற கடல் அங்கு நிலைப்பதாயிற்று.

உக்கிரப் பெருவழுதி இவ்வாறு தன் நாட்டில் நேர்ந்த நஷ்டத்தை அறிந்தான். பெரிதும் வருந்தி, மேலும் கடல் பெருகி வராதிருக்க வழியுண்டோவென அறியுமாறு குமரிக் கடற்கரைக்கு வந்தான். கடல் நீர் தனது காலை நனைக்க நின்றுகொண்டு, எல்லாம் வல்ல இறைவனை நினைந்து, மனமுருகி வாழ்த்தி, வணங்கிப் போற்றினான்; "இத்துணை நிலச் சேதமும் பொருட் சேதமும் உயிரழிவும் நேர்ந்தது போதும்; இனி நேரா திருக்க அருள் புரிக," என்று இறைவனை வேண்டினான். அமலன் திருவருளால் அவ்வளவிலே கடல் அடங்கியது. பிறகு அரசன் மதுரைக்குத் திரும்பினான்; குமரிக் கோடும் பஃறுளியாறும் கடல் கொண்டதால், வடநாடு நோக்கிப்புறப்பட்டான்; வடநாட்டில் பெரியதொரு மலையும் ஆறும் நாடுகளும் கைக்கொள்ளக் கருதிப் போர்க்குச் சென்றான். வழியிடையிலே உள்ள பலநாடுகளிலும் அரசு புரிந்திருந்த அரசர் பணிய, எண்ணிறந்த படைஞரோடும் கங்கைக்கரைக்குச் சென்றான். அங்குஅரசியற்றியிருந்த ஆரியவரசர் ஒருங்கு சேர்ந்து போர் எதிர்த்து நின்றனர். அவரனைவரையும் தன் அரும்போர்த் திறமையாலும் இறைவன் அருளாலும் வென்றான். கங்கைக் கரை நாடுகள் அனைத்தும் அவன் வசம் ஆயின. இழந்த பஃறுளியாற்றுக் கிணையாகக் கங்கை யாற்றைக் கொண்

டான். குமரிக் கோட்டுக் கிணையாக இமய மலையைக் கொள்ளக் கருதி மேற்சென்ருன். அங்கும் அருகிலிருந்த அரசரெல்லாம் பணிய, இமயத்தை யடைந்து, அதன் கொடுமுடிகளிற் சிறந்த வொன்றிலே தான் வென்று அடக்கிய செயலுக்கு அறிகுறியாகக் கயல் பொறித்தான். பிறகு தென்றிசை நோக்கித் திரும்பலாயினன். திரும்புகாலில் முன்னே அடக்கிய பல அரசரும் பணிந்து திறையளக்க, அவற்றைப் பெற்றுக் கொண்டு, அவரவர்க்குத் தக்கவாறு உபசார மொழிகள் கூறி மகிழ்வித்துத் தமிழ் நாடு நெருங்கினன். சேரமான் மாரிவெண் கோவும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் அவனை எதிர் கொண்டனர். தமிழ் நாட்டு மக்களெல்லாம் தங்கள் அரசன் வடநாடு வென்று வரும் மாட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

உக்கிரப் பெருவழுதி, தன் அன்புக்குரியாராகிய அம்மன்னரிருவரையும் உடன் கொண்டு, தன் நாட்டுக்கு வந்து சேர்ந்தான். நாட்டுமக்களிற் பெரியார் பலர் ஒன்று சேர்ந்து வாழ்த்தினர். அருந்தமிழ்ப் புலவராகிய ஔவையாரும் அங்கு வந்திருந்தனர். மூவேந்தரும் ஒற்றுமையாய் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு, அவர் மனம் பூரித்தது. அவர் மூவரையும் ஒன்று சேர்த்து, மனமார வாழ்த்தினர்:

“அரசர்களே, தேவ லோகம் போல மிகவும் பாந்தாய்ப் பல பகுதியுடையதாகிய இப்பாரத தேயம் தமதே யென்று கொண்டு ஒருவர் ஆள்வாராயினும், அவர்க்கு உரிமையாகி நிலையாய் நிற்கும் என்ற உறுதியில்லை. முன்னே உரிமை பெறுதிருந்த அயலாராயினும், தவம் புரிந்த பயனுக அயல்

நாட்டவர்க்கும் உரிமைச் செல்வமாம். ஆகையால், இவ்வுலகில் வாழுமாறு அமைந்த காலம் எல்லாம், யாசிக்கின்ற பார்ப்பார்க்கு நீர் நிரம்பிய கைகளோடு பூவும் பொன்னும் தானம் வழங்கி, அழகிய ஆபரணங்களை அணிந்த பெண்கள் பொற்கலத்திலே தாங்கிய பன்னாடையால் நன்றாக வடிக்கப்பட்ட தேறலை மாந்தி, மகிழ்ச்சி மிக்கு, இரவலராய் வரும் புலவர்க்கும் பிறர்க்கும் அருங்கலங்களைக் குறைவற வீசி, இவண் வாழ்தல் வேண்டும். நல்வாழ்வு அடைய உதவுமாறு செய்த நல்வினையல்லாமல், ஒருவர் ஆழுங் காலத்திற் புணையாக உதவக் கூடியது வேறொன்று மில்லை. உண்மைப் பொருளாகிய ஒன்றை ஆராய்ந்து தெளிந்து அடங்கிய இருபிறப்பாளராகிய அந்தணர், வேள்வித்தீயாகியஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்ற மூன்றும் போலக் காட்சி சிறப்ப அமர்ந்திருந்த வெற்றிக்குரிய வெண்குடை தாங்கிய கொடிச் சீலை யசையும் தேர்களையுடைய வேந்தர்களே, யான் அறியும் செய்கை இவ்வளவே. உங்களை வாழ்த்த யான் அறியும் அளவையும் பின் வருமாறும். வானத்திலே வயங்கித் தோன்றும் விண்மீன்களையும் இம் என்னும் ஒலியோடு பொழியும் பெரிய மழையின் துளிகளையுங்காட்டிலும் சிறந்து அதிகமாய் உம் வாழ் நாட்கள் வளர்வனவாக.

"மும்முடி மன்னர்காள், முத்தமிழும் பரிபாலித்து, அறம் பொருள் இன்பம் என்ற முப்பொருளையும் உலகிற்குதவி, நான்காம் உறுதிப் பொருளை யாவரும் பெறுமாறு இயைவிக்கக் கருதியிருக்கும் நுமது பெருமையை எவ்வாறு பாராட்டுவேன்! நீவிர் இவ்வாறு ஒற்றுமையோடு வாழ்ந்த வரலாறு பிற்காலத்தாரும் அறிய வேண்டுவது முறையாம். தெய்வச் செயலால் தமிழ் நாட்டு மன்னர் மூவரும் இனி யிவ்வண்ணமே வாழ்கவென உமது வழித்தோன்றல்களுக்கு அறிவிக்குமாறு எனது வாழ்த்துரையைச் செய்யுளாற் சொல்கின்றேன்:

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா
வேற்ருே ராயினும் நோற்ருேர்க் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்(து)
இரவலர்க் கருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல(து)
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை.
ஒன்றுபுரிந் தடக்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தீர்,
யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந் நாளே. *

*அரசர் பெருமான் உக்கிரப் பெருவழுதி, தமிழ்த் தெய்வத்தின் திருப்பணியைத் தலை தாங்குங் கருத்தின ஞய் இருந்தாருகையால், சேரனும் சோழனுமாகிய தன் நண்பரோடு தன்னையும் ஒருங்கு வைத்து ஔவையார் என்ற அருந்தமிழ்ப் புலவர் வாழ்த்திய இவ்வாழ்த்தியற் செய்யுளை மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டு, அவர்க்கு ஏற்ற உபசாரங்கள் செய்தான்.*

---

* *புறநானூறு - செய்யுள்*, 367.

பின்னர் அங்குத் தன்னைக் காணும்பொருட்டுக் குழுமியிருந்த பலர்க்கும் அவரவர் தகுதிக் கேற்றவாறு உபசார மொழிகள் கூறி விடை கொடுத்தனுப்பி விட்டுத் தன் அரண்மனைக்குச் சென்று, நட்புப் பூண்ட சேரனோடும் சோழனோடும் அளவளாவ லாயினன் :

வழுதி:—அன்பர்காள், நாம் மூவரும் இவ்வாறு ஒரே யெண்ணம் உடையராய்ப் பகையின்றிக் கலந் திருப்பது, நம் தமிழ் நாட்டுக்கும் தமிழ்த் தெய்வத்துக் கும் நம்மால் இயன்றது செய்ய உதவு மன்றோ ?

கிள்ளி:—அன்பரே, அஃது உண்மையே. நாட்டை அழிக்க வந்த ஆழியை இறைவன் அருளால் அடக்கி, 'ஆழி வடிம்பலம்ப நின்றான்,' என்ற சிறப்புப் பெயர் பெற்றீர். சில்லாண்டுகட்கு முன்னர் இந்நாட்டி லே மழை வளம் சுரவாது போக, மழை பிணித்து, ஆண்டு வசியும் வளமும் சுரந்து பொழிய வைத்தீர். இயல் இசை கூத்து என்ற மூன்று வகையாகிய தமிழ் மொழியின் நலத்தினை நாடெங்கும் பரப்ப வெண்ணி, நம் முன்னோர்கள் நிறுவிய சங்கத்தில் அநேகம் புலவர் களைச் சேர்த்து வைத்து, நூல் இயற்றியும், உரைகள் கூறியும், ஆராய்ச்சிகள் செய்தும், உம்பர் உறையும் பதி யினும் இந்நகரே சிறந்ததென்று அவர்கள் கூறுமாறு செய்து வைத்துளீர். புலமையும் சிறப்பப் பெற்ற புரவலராய் உள்ள உமக்கு யாம் கூறுதற்குளது என்ன? நாம் மூவரும், முத்தமிழ், முப்பொருள், முத்தீ, மும் மறை போல ஒன்று சேர்ந்திருத்தல் நலம் என்பதே ஔவையார் போன்ற அரும்புலவர் அவாவும் சிறப்பாம் என்பது, இன்று அவர் பாடிய செய்யுளாலும் விளங்

கியது. நம்முடைய நட்பு இவ்வாறே வழி வழி பெருக நாம் செயற்குரிய செயல் இன்னது என்று நீவிர் எது கூறினும், யாமும் உடன்படுவோம்.

வழுதி:—அன்பரே, நீவிர் கூறுவது பொருத்தமே. நம் நாடு நலம் பெற வேண்டுமெனின், நம்மூவருக்குள் ஒற்றுமையே முதற்கண் வேண்டும். சேரரே, உமது கருத்தென்ன ?

**சேரன்**:—வழுதி வள நாடரே, யான் கூறுவதற்கு என்னவுளது? இராயசூயம் பெருநற் கிள்ளியார் கூறிய வனைத்தும் எனக்கும் உடன்பாடே. தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்ற முப்பிரிவுகளை யுடையது. இம்மூன்றில் இயல், மற்றவிரண்டையும் தன்னுளடக்கி வைக்க விரும்புவது. இசையோ, பசு, சிசு, மிருகம் என்ற வேறுபாடின்றி, எத்தகையார்க்கும் இன்பம் பயப்பதாதலால், தானே மேலெழக் கருதுகின்றது. நாடகத் தமிழோ, கேள்வியாலும் கல்வியாலும் சிறப்பு எய்தப் பெறாத அறிவிற் சிறியாரையும் வயப்படுத்திக் காட்சி வாயிலாக அரும்பெரும்பொருள்களைத் தெரிவித்து உலகினை மயக்குவது. 'என்னால் அன்றி மற்ற இரண்டும் எழிலும் வளமும் படைப்பதில்லை,' என்று இம்மூன்றும் தனித்தனி கூறும். எஃது எவ்வாறாயினும், இம்மூன்றும் ஒன்றுக்கொன்று பகை கொள்ளாமல் ஒற்றுமையாய் வாழும் வரையில் நாட்டுக்கு நலம் என்பது எவரும் ஐயமற வறிந்ததே. இவ்வுண்மை போலவே, மூவராகிய நாமும் ஒருவர்க்கொருவர் உதவியாய் நட்புப் பூண்டு ஒரே எண்ணத்தோடு வாழ்வோமாயின், நம்மால் நாட்டுக்கு விளையும் நன்மை அதிகம் என்பதில் தடையுளதோ ?

வழுதி:—சேரரே, நீவிர் கருதுவதும் நம் எண்ணத்துக்கு ஒத்ததாகவே யுளது. நான் சொல்லக்கருதியதும் இதுவே. நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் பாடியபாடல்கள் அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் அநேக ஆயிரமாகவுள. இலக்கண நூல்களும் பலவாய் உள. அவற்றை யெல்லாம் ஒரு வான்முறைப்படத் தொகுத்து, உலகம் அனைத்துக்கும் உதவுமாறு நாம் செய்தல் நன்றன்றோ? இக்காலத்தில் நாம் அரசாலும் படையாலும் பெரும்பொருளாலும் பிறவற்றாலும் அடையும் புகழ் எல்லாம் யான் சொல்லும் இச்செயலால் அடையும் புகழ்க் கிணையாகுமோ? இங்ஙனம் செய்வதில் நுமது கருத்தென்னை ?

கிள்ளி:—அரசர் பிரானே, நும் முன்னோர் செய்த செயலையே நீரும் செய்ய விரும்புகின்றீர். அது மிகவும் பாராட்டற் பாலதே. அஃது எமக்கு மிகவும் சம்மதமே. எந்நாட்டுப் புலவர் பலர் செய்துள்ள செய்யுட்கள் எம்முடைய அரண்மனையில் வைத்துக் காப்பாற்றப்பட்டுள்ளன. இங்கும் அவற்றின் பிரதிகள் உண்டு என்று கேள்விப்பட்டுளேன். ஆயினும், நான் அவற்றை அனுப்புகிறேன்.

சேரன்:—யானும் என்னால் இயன்ற உதவிகள் செய்கிறேன்.

வழுதி :—அன்பர்காள், நீவிர் இருவீரும் நான் எண்ணியது முடிக்க இசைந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறே நம் நண்பு பெருக இஃது ஒரு வழியாம்.

சேரனும், சோழனும்:—இனியாம் விடைபெற்றுக் கொள்கின்றோம்; வேண்டுவன செய்கின்றோம்.

## II

புலமை: அருட்புலமை - தெய்வப்புலமை - நல்லிசைப் புலமை - நாடெங்கும் வாழும் மக்களினத்தார்க்கு ஒப்ப நலம் புரியும் நற்புலமை - காற்றையும் விண்ணையும் நீரையும் தீயையும் மண்ணையும் மரத்தையும் கல்லையும் மலையையும் மனத்தினுள் அடக்கி உலகமறியப் புதிய வுயிர் கொடுத்து வெளியிடும் புலமை - நெல்லும் நீரும் உயிர் என்ற புலமை - மன்னன் உலகிற்கு உயிர் என்ற புலமை-'நிலனே நல்லை நீ வாழிய,' என்ற புலமை - இறப்பையும் பிறப்பையும் மறக்க வைக்கும் புலமை. இத்தகைய அரும்பெரும்புலமை எய்தற்கரிய பெரும் பேறேயாம் என்பதில் ஐயமுண்டோ? எளிய பேறு யிருப்பின், ஒரு நாட்டில் வாழும் மாந்தர் அனைவரும் அறிஞராய்விடலாமே! அறிஞராயினர் அனைவரும் புலவர் எனப்பெறும் பேறு பெறலாமே! புலவர் அருளிச் செயலை ஆராய்ந்து இன்புறுதற் குதவிநிற்கும் அறிவின் மாட்சியொன்றே யுள்ள அறிஞரைக்காட்டிலும், அவ்வறிவின் மாட்சியோடு புதிய படைப்புக்கள் படைத்தற்காகும் புலமைத் திறமும் படைத்த புலவரல்லரோ பெரியராவார்? பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பில் எங்கெங்கும் விளக்கமெய்தியுள்ள இயற்கை நலத்தை, தன்மை நவிற்சியை, இனி எங்குக் காண்போம்? 'தொன்று தோன்றிய அனைத்தும் தூயன;

இன்றுதோன்றுறும் அனைத்தும் அவற்றுக்கு இணையில' என்று கூறுதலும் குற்றமே. நான்முகன் எத்துணையோ கோடிக் கணக்கான ஆண்டுகளாகப் படைப்புத் தொழில் இயற்றியும், இன்றும் அதனை மறந்தானிலன்; மேன் மேலும் படைத்துக்கொண்டே யிருக்கின்றான். அவனை யொப்பவே, உள்ள வுலகத்திலே அமைத்துக்கொண்ட வண்ணம் எவ்வகைப் பொருளையும் படைத்து உல கினர்க்கு அறிவூட்டும் ஆற்றல் படைத்த அறிவின் செல் வர் புலமை வள்ளலார் அன்று தோன்றினென்? இன்று தோன்றினென்? அவர் உள்ளத்திலே உதிக்கும் தோற்றம் இன்றும் எவர்க்கும் இன்பம் பயப்பதே; தீ நெறிச்செல்லும் சிந்தையைத் திருப்ப வல்லதே. இந் நாளிலே இயற்கையிலே உள்ளத்தினுள் ஒடுங்காமற் பொங்கியெழும் புலமைச் செல்வத்தைக் காணலரிதாய் இருத்தற்குக் காரணம், இறைவன் செயலோ, மக்கள் மனவமைதியோ, நாட்டின் வீழ் நிலையோ, யாதோ அறி யோம். புலமையின் உதவி பெறுத நாடு உலகினில் நிலைப்பதற்கு உரிமை பெறுது என்பது எவரும் உண ரத் தக்கதாம். இவ்வுண்மையை உணர்ந்தன்றோ, விழுக் குடிப்பிறந்த வேந்தரெல்லாம் தத்தம் காலத்தே தோன் றிய எண்ணிறந்த செய்யுட்களை ஒருசேரத் தொகுத் துப் பெயரிட்டு வழங்குவித்தனர்? அன்னர் செய்த முயற்சி யில்லையெனில், இந்நாளில் நாம் நம் தமிழ்த் தெய்வத்தின் உண்மையுருவத்தை உணர இயன்றிருக் குமோ? இப்பணி புரிந்தாருள் உக்கிரப் பெருவழுதியி னும் சிறந்தார் பிறர் உளரோவென்பதே அறிஞர் ஆராய்ச்சிக்குரியதாம்.

முன்னத்தியாயத்திலே கூறிய வண்ணம் அவன் வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்றிசை யாண்ட தென்னவன் என்றும், மழை பிணித்தாண்ட மன்னவன் என்றும், அறிவு என்னும் அளக்கரை ஆய்ந்து கடந்தும், இறப்பென்னுங் கடலை ஈந்து கடந்தும், புலமைக் கடலிற் புகுந்து துளைந்தும் வாழ்ந்த மன்னர் பிரான் என்றும் உலகுபுகழ் பெருநிலை பெற்றான். தன் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள பல புலவர் களை அழைப்பித்து, அவர் தத்தமக்குத் தோன்றிய பொருள்களைப் பற்றி யெல்லாம் செய்யுட்கள் செய்து, தாமின்புறுவது உலகின்புறக் கண்டு வாழுமாறு செய்து வைத்தான். அகப்பொருளும் புறப்பொருளும் பற்றிய செய்யுட்கள் எண்ணிறந்தனவாய்க் குவிந்தன. அவற்றைக் கோவைப்படுத்தக் கருதினான். சேரனும் சோழனும் அனுப்பிய செய்யுட்களும் வந்துற்றன. அகப்பொருளைப்பற்றிய செய்யுட்களை ஒரு பகுப்பாக வும், புறப் பொருளைப்பற்றிய செய்யுட்களை மற்றொரு பகுப்பாகவும் கொண்டு, செய்யுட்களின் அடியளவு முதலிய காரணங்களால் ஒவ்வொரு தொகையாய் அமைக்கக் கருதினான். தான் கருதிய கருத்தை நிறை வேற்றத் தக்கார் யாவர் எனத் தன்னாட்டுப் புலவர்க் குள்ளே ஆராய்வானாயினன். உப்பூரி குடி கிழார் மகனா ராகிய உத்திர சன்மர் என்ற ஒரு பெரும்புலவர் அந் நாளில் இருந்தார். அவர், தாம் செய்யுள் ஒன்றும் செய் திலராயினும், பிறர் செய்யும் செய்யுட்களிலும் உரை களிலும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடையரா யிருந்தார். செய் யுட்களின் குணம் குறைகளைப்பற்றி அவர் வெளியிடும்

கருத்துக்களே புலவர்கள் அனைவரும் ஒருமனமாய் ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவுரைகளாயிருந்தன. அரசன் அவரை அழைத்துவரச் சேவகரை அனுப்பினன்.

அரசனாணையைச் செவியுற்றதும் உருத்திர சன்மர் அரண்மனைக்கு ஓடோடி வந்தார். உக்கிரப் பெருவழுதி அவரை அன்பொடு வரவேற்று, உபசரித்து, அளவளாவினன்.

உக்கிரப் பெருவழுதி:—உருத்திர சன்மரே, நீரும் நானும் பிறந்த நாட்டுக்குச் சிறந்த புகழ் உண்டாகுமாறு நாம் செய்யத் தக்க அரும்பணியொன்று உண்டு. அதனைப்பற்றி ஆலோசிக்கலாம் என்றே உம்மை இன்று இங்கு அழைத்தேன்.

உருத்திரசன்மர்:—அரசர் பெருமானே, அவ்வரும் பணி யாதோ? எளியேனைக் கொண்டு ஓர் அரும்பணி நிறைவேற்றிக் கொள்ளத் தாமே கருதியுள்ளது என் முன்னோர் செய்த புண்ணியப் பயனே என்று கருதுவேன்.

உக்கிரப் பெருவழுதி:—இந்நாளிலே தம் உள்ளக் கருத்தைச் செய்யுளால் வெளியிட்டு உலகினரை உய்யக் கொண்ட பெருந்தகையார் எத்துணையர் உளர்? அவரது முயற்சியின் பயன் பிற்காலத்தார்க்கு உதவுமாறு செய்ய வேண்டாவோ?

உருத்திரசன்மர்:—அவசியம் செய்ய வேண்டுவதே. அரசருடைய ஆதரவின்றி எதுதான் நிகழும்? முன்னுளிலும் நுமது குடியிற் பிறந்தாரே புலவர் செய்யுட்களைத் தொகுப்பித்திருக்கின்றனர். நற்றிணை நானூறு என்ற அகப்பொருட் செய்யுட்களை நுமது குடிக்கு

விளக்காய்த் தோன்றிய பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பார் தொகுப்பித்தனர். குறுந்தொகை யைப் பூரிக்கோ என்பார் தொகுப்பித்தார். சேர பரம் பரையினராகிய யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும் பொறை யென்பார், புலத்துறை முற்றிய கூடலூர் கிழா ரைக் கொண்டு ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தார். இவ்வாறு அரசர் ஆதரவு பெறுவிடின், புலவர் புகழ் பரவுமாறு எவ்வண்ணம்? ஆகையால், அரசரேறே, தாம் இப்போது செய்யக் கருதி யிருப்பது எதுவோ, அதற்கு என்னால் இயன்ற உதவி செய்யச் சித்தமா யிருக்கிறேன்.

உக்கிரப் பெருவழுதி:—அகப்பொருளைப் பற்றிய பெருஞ்செய்யுட்கள் பல, தொகுப்பின்றி இந்நாளில் இருக்கின்றனவே! அவற்றைத் தொகுக்கவே உமது உத வியை நாடுகிறேன். கபிலர், பரணர், கல்லாடர், ஔவை யார், மருதனிள நாகனார், மாமூலனார் முதலிய பல புல வர் செய்துள்ள செய்யுட்கள் உளவே! அவற்றை ஒரு வரன்முறைப்படுத்தித் தொகுத்துக் கொடுக்க வேண்டு கின்றேன்.

உருத்திர சன்மர் :—அரசர் பெருமானே, இவ் வாறு ஒரு தமிழ்த் திருப்பணி செய்து பிறப்பினாலாகிய பயன் பெற வேண்டும் என்பதே சில நாளாக என் உள் ளத்தில் தோன்றியுள்ள எண்ணமாம். அதற்கிணங்கத் தாமும் ஆணையிட்டீர். அகப்பொருள்களைப்பற்றிய பெருஞ்செய்யுட்களைத் தொகுக்கும் முயற்சியில் யான் ஒன்று கூறி, மேலே வேண்டுவன செய்கின்றேன்: முன் னாளிலே அகப்பொருட் செய்யுட்களைத் தொகுத்தோர்,

நான்கு அடி முதல் எட்டு அடி வரையில் அமைந்தவற்றை ஒரு தொகையாக்கிக் குறுந்தொகை யெனவும், ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையில் அமைந்தவற்றை ஒரு தொகையாக்கி நற்றிணை யெனவும் பெயரிட்டிருக்கின்றனர். தற்காலம் பல புலவர் பாடிய செய்யுட்களாய்ப் பதின்மூன்றடி முதல் முப்பத்தேழடி வரையில் அமைந்த பல அகவற்பாக்கள் ஒரு தொகைப் படாமல் இருக்கின்றன. அவற்றையே ஓர் இனப்படுத்தி முறையே தொகுக்க விரும்புகின்றேன்.

உக்கிரப் பெருவழுதி:—ஐய, புலவரே, நீவிர் கூறும் செய்யுட்கள் நமது அரண்மனைப் புத்தக சாலையில் உள்ள ஏடுகளிலும் சேரரும் சோழரும் அனுப்பிய பல ஏடுகளிலும் காணப்படுகின்றன. அவற்றுட் பெரும் பாலன சமீப காலச் செய்யுட்களே. சில, சென்ற நூற்றாண்டின் செய்யுட்களாம். சங்கத்திலும் இச்செய்யுட்களின் பிரதியுள்ளது. இவற்றை யெல்லாம் ஆராய்ந்து ஒழுங்கு படுத்தித் தொகுக்க வேண்டுகிறேன்.

உருத்திர சன்மர்:—அரசரேறே, யான் அச்செய்யுட்களை யெல்லாம் சேர்த்து வைத்திருக்கின்றேன். அவற்றுள் தமது குலத்துப் பிறந்த மன்னர்களுள் பாண்டியன் அறிவுடை நம்பி, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்பார் பாடிய செய்யுட்களும், தாம் ஒரு காலத்திலே பாடியதோர் அரும்பொருட் செறிவமைந்த செய்யுளும் உண்டு. சேரர் குலத்தோர் ஆகிய இளங்குட்டுவன், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்ற அரசர்

பாடிய செய்யுட்களும் உண்டு. சோழ குலத்தோர் பாடிய செய்யுட்கள் இருப்பதாய்த் தெரியவில்லை.

உக்கிரப் பெருவழுதி:—எமது குலத்தாருட் பூதப் பாண்டியனார் தேவியைத் தெய்வமாகப் போற்றாதார் இலர். புறப்பாட்டுக்களில் பூதப் பாண்டியனார் புகழும், அவர் தேவி பெருங்கோப் பெண்டின் பெரும்புகழும் விளங்கிக் கிடக்கின்றன. அறிவுடை நம்பி யென்பாரும் புலமை காரணமாக எமது குடிக்குப் புகழ் வழங்கிய வரே யாவர்.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டுங் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழும் நாளே."*

என்ற அவரது செய்யுள், மக்கட் பேற்றின் பெருமையை எவ்வளவு அழகாய் விளக்கி நிற்கின்றது! இத்தகைய புலமை வாய்ந்திருந்த புரவலர்கள் பிறந்த குடியிற் பிறந்தேன் என்று கூறிக்கொள்வதே எனக்கும் ஒரு புகழாம். நற்றிணையிலும் எனது செய்யுள் ஒன்று உண்டு.

உருத்திர சன்மர்:—அரசர் பெருந்தகையே, தம் முன்னோர் புகழினும் தமது புகழே பெரிதாம் என்பது எளியேன் கருத்து.

---

* புறநானூறு—செய்யுள், 188.

"என்புகழ் கின்ற தேழை
யெளியனேன் இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
யொளிகளைத் தகர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள்
மரபுளோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்
உயர்குணத் துரவுத் தோளாய்!"

அகப்பொருளைப் பற்றியனவாக அரசர்கள் பாடியுள்ள செய்யுட்களில் மிகவும் உயர்த்துப் பாராட்டத் தக்கவற்றில் தமது செய்யுளும் ஒன்றன்றோ? தலைமகளும் தோழியும் பேசிக்கொள்வனவாக அதில் வந்திருக்கும் கருத்துக்கள் மிகவும் நலமுடையனவையல்லவோ? இனித் தமது குலத்தார் புகழை விரிக்கும் செய்யுட்கள் எத்துணைய வென்பேன்! சோழர் சேரர் புகழும் ஆங்காங்கு அமைந்துள்ளன. அச்செய்யுட்களில் அமைந்த அருங்கருத்துக்களை எடுத்து அளவிடலும் இத்தன்மையன என்று உரைத்தலும் என்னால் இயலுமோ? புறத்திலும் தம்மைப் புகழும் செய்யுட்கள் உளவாமன்றோ?

உக்கிரப் பெருவழுதி:—வேளிர் பெருமையும் பிற வள்ளலர் புகழும் விளக்கும் செய்யுட்கள் சில உள என்று யான் அறிகின்றேன். இவற்றைத் தொகுக்கும் முயற்சியில் என்ன முறை பின் பற்றலாம் என்பது உமது கருத்தாம்?

உருத்திர சன்மர்:—அரசே, சில நாளாக ஆராய்ச்சி செய்ததில் யான் முன்னே கூறிய அளவுள்ள செய்யுட்

கள் ஒரு நானூறு உள என்று அறிந்தேன். இவற்றை மூன்று பகுப்பாகப் பிரிக்கலாம் என்பது என் கருத்து.

உக்கிரப் பெருவழுதி:—மூன்று பகுப்பாகப் பிரித்தற்கு என்ன காரணம்?

உருத்திர சன்மர்:—செய்யுட்களின் நடை, சொல்லமைவு, பொருட் செறிவு முதலிய காரணங்களால் அவை மூன்று இனமாக்கப்படலாம்: ஒன்று களிறுகளின் வரிசை போன்று இருத்தலால் களிற்று யானை நிரை யெனவும், மற்றொன்று மணிகள் மிடைந்த பவளம் போன்று சொல்லமைய வாய்ந்திருத்தலால் மணி மிடைபவளம் எனவும், வேறொன்று தனி முத்துக்களால் ஆகிய கோவை போன்று சொல்லழகு பெற்று விளங்கலால் நித்திலக் கோவை எனவும் கூறப்படலாம்.

உக்கிரப் பெருவழுதி:—ஒவ்வோரினத்தும் எத்துணைச் செய்யுட்கள் உளவாம்? மொத்தத்தில் ஒவ்வொரு திணைக்கும் உள்ள செய்யுட்கள் எத்துணை? அவை எம்முறையால் இயைக்கப்பட்டுள?

உருத்திர சன்மர்—களிற்று யானை நிரையில் நூற்றிருபதும், மணிமிடை பவளத்தில் நூற்றெண்பதும், நித்திலக் கோவையில் நூறும் ஆக அமைகின்றன. பாலைத் திணைக்கு இருநூறு, குறிஞ்சித் திணைக்கு எண்பது, மருதத்திணைக்கும் முல்லைத்திணைக்கும் நெய்தற்றிணைக்கும் தனித்தனி நாற்பது செய்யுட்களாய் அமைகின்றது காண்கிறேன். இவற்றைக் கோவைப்படுத்தியதில் அவ்வத்திணைச் செய்யுளைத் தனித்தனி பிரித்தறிய உதவும்படி ஒரு முறை வைப்புக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். ஒற்றை யெண் பெற்ற செய்யுட்கள் எல்லாம்

பாலைத் திணையாம். குறிஞ்சித் திணைச் செய்யுட்கள் இரண்டும் எட்டும் ஆகிய எண்களைப் பெறுவனவாம். முல்லைத் திணைக்குரியவை நான்கும், மருதத்துக்கமைந்தவை ஆறும், நெய்தற்குரியவை பத்தும் ஆகிய எண்களைப் பெறுவனவாம். இவ்வாறு எல்லாம் நாம் அமைத்து வைப்பதால், பிற்காலத்தார் தாம் கருதும் பொருள்களை எளிதிலே இவற்றில் தேடிப் பெறலாம்.

உக்கிரப் பெருவழுதி:—ஆழமும் அகலமும் உடைய கல்வியைப் படைத்தார் ஒன்று செய்யத் தொடங்குவாராயின், அஃது உலகமெல்லாம் போற்றத் தக்கதாய் இருக்கும் என்பதற்கு ஐயமுளதோ? இவ்வளவு முறை வைப்பு எல்லாம் அமைத்துவிட்டு, இதனால் வரும் பெருமையில் ஒரு பகுதியை நானும் அடையுமாறு செய்த உமது பெருந்தகைமையைப் பாராட்டுகின்றேன்.

உருத்திர சன்மர்:—அரசர் பிரானே, ஒன்று சொல்ல மறந்தேன்: இந்நானூறு செய்யுட்களையும் ஒரு தொகைப்படுத்தி, ஒரு நூல் ஆக்கிவிட்டோம். ஆகையால், இதற்கு முதற்கண் கடவுள் வாழ்த்து ஒன்று வைக்கவேண்டுமன்றோ? பாரதம் பாடிய பெருந்தேவனார் செய்த அகவல் ஒன்று உள்ளது. அது சிவ வணக்கமாய் அமைந்துளது.

“ தேன்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.”*

* திருவாசகம் - திருச்சாழல்.

என்பதற்கு இணங்க, உலகத்து அறிவுடையுயிர்களாகிய மக்களினத்தார்க்கு அகப்பொருள் பற்றிய நானூறு செய்யுட்களை உதவும் இத்தொகை நூல், உலகத்தில் அகப்பொருளின் வாழ்வையும் வளர்ச்சியையும் அருள் புரியும் திருக்கோலத்தோடு விளங்கும் சிவபெருமானது வாழ்த்தினையே முதற்கண் பெற்றிருப்பது நன்றன்றோ?

உக்கிரப் பெருவழுதி:—அவ்வாறே ஆகுக. இன்று நீவிர் செய்த திருப்பணிக்கு என்ன கைம்மாறு இயற்றப் போகின்றேன் !

உருத்திர சன்மர்:—எவனுக்கு எவர் கைம்மாறு இயற்றுதல் ? எல்லாம் அவன் செயல். எண்ணிய எண்ணம் நிறைவேற அவன் அருள் வேண்டும் அன்றோ ?

உக்கிரப் பெருவழுதி:—உருத்திர சன்மரே, இறையனார் களவியலுக்கு உரை கண்டார் பலரும் தத்தம் உரையே சிறந்தது என்று வாதிட்டு நிற்கத் தமது இளமைப் பருவத்திலே அவற்றுள் நக்கீரனார் உரையே சிறந்தது என்று நீர் ஆராய்ந்து அறிவித்து, அங்கு இருந்த புலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தீர் என்று கேட்டிருக்கிறேன். இப்பொழுது அகப்பொருளைப்பற்றிய நானூறு செய்யுட்களை உலகம் கொள்ளத் தொகுத்து உதவினீர். நீர் செய்த இவ்விரண்டு செயல்களுள் எதனைச் சிறந்ததென்று பாராட்டுவேன் ? இவ்வளவும் செய்து இந்நூற்குப் பெயரிடும் வேலை எனதாக விட்டீர் போலும் ! இன்னும் பெயர் இன்னதாய் இருக்கலாம் என்று நீவிர் கூறவில்லையே !

உருத்திர சன்மர்:—பெயர் கூறும் விஷயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகிறது. ஆகையால்தான்

ஒன்றும் சொல்லாதிருக்கின்றேன். இதற்கு முன் தொகுக்கப்பெற்ற தொகைகள் பலவிதக் காரணங்களால் பெயர் பெற்றுள. நாம் தொகுத்த தொகைக்கு மற்ற வற்றைக் காட்டிலும் வேறான சிறப்புக் காரணம் ஒன் ருற் பெயரிட வேண்டும். கலிப்பாக்களாலாகிய தொகை யைக் கலித்தோகை யென்றார் சிறிய செய்யுட்களால் ஆகிய இரு வகைத் தொகைகளில் ஒன்று ஐவர் புலவ ரால் திணைக்கு நூறாகச் செய்யுட்களைப் பெற்றதால் ஐங்குறு நூறு என்று பெயர் பெற்றது. மற்றொன்று குறுந்தோகை யெனப்பெற்றது. புறப்பொருளைப் பாடிய நானூறு செய்யுட்களைத் தொகுத்த தொகை புறம் என்றும் புறநானூறு என்றும் கூறப்பட்டது. மக்களினத்தார்க்கமைந்த சிறந்த ஒழுக்கத்தை யுணர்த் தும் பணியைப் பூண்டதால், மற்றொரு தொகை நற் றிணை யெனப்பட்டது. நமது தொகையைக் குறுந் தொகைக்கு மாறாக நெடுந்தோகை என்போமா? புறத்துக்கு மாறாக அகமென்போமா? அகநானூறு என்றே கூறுவோமா? என்று இம்மூவகை எண்ணங் களும் என்னுள் உதித்தன. இன்னும் ஒன்றும் உறுதியாகவில்லை.

உக்கிரப் பெருவழுதி:—அகப்பாட்டுக்களுட் பெரிய அளவுள்ள செய்யுட்களைப் பெற்ற இந்நூலை நெடுந் தொகை யென்றே கூறலாம். குறுந்தொகையும் நானூறு செய்யுட்களையுடையது. இதுவும் நானூறு செய்யுட்களை யுடையது. நற்றிணை இவ்விரு நூற் செய் யுட்களுக்கும் இடைப்பட்ட அளவுள்ள செய்யுட் களைப் பெற்றதால், அது வேறாயிற்று. அகம் என்று

அமைத்தல் இதற்குச் சிறப்பையே விளக்கும். அக நானூறு என்றலும் அவ்வாறே. ஆகையால் இந்நூற்கு இம்மூன்று பெயர்களும் வழங்கக் கடவன என்பதாக யாம் உறுதி செய்வோம்.

உருத்திர சன்மர்:—அரசர் பிரானே, இன்று வெகு நேரம் வரையில் இந்நூற் பெருமை ஒன்றைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். இதனால் தமக்குத் தமிழ் மொழியினிடமும் அதனைப் பயின்ற புலவரிட மும் உள்ள அன்பின் அளவு அறியப்படும். அரசியற் றுறையிலே தேர்ந்த அமைச்சரும், சேனாபதியரும், பிறரும் தம்மை எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருக் கின்றனர். அவர்களை வரவேற்று, வடவிமயம் முதல் தென் குமரிவரை செல்லும் நாட்டில் அரசு முறை செலுத்தற்கு ஆவன செய்யவும், அறம் பொருள் இன் பம் என்ற முப்பொருளையும் நாட்டவர் முறையே துய்ப்பதற்கு இடையூறு செய்வார் எவரேனும் இருப் பின், அவரை அறிந்து அடக்கவும், திரை செலுத்த வந்து திருமுன்பு வரப்பெறாமல் காத்திருக்கும் அரசர்க் கும் வெளிக்கும் அருள் புரியும் அரசியல் மண்டபத் துக்குச் செல்ல வேண்டிய தமக்கு இன்னும் யான் இங்கே சிரமம் கொடுக்க விரும்பிலேன். விடை பெற் றுக் கொள்கின்றேன்

உக்கிரப் பெருவழுதி:—அவ்வாறே போய் வருவீ ராக. இன்று நீர் இங்குச் செய்த திருப்பணியால் தமிழ் உலகம் உம்மையும் என்னையும் சேர்த்தே உவப்போடு புகழ்ந்து வாழ்த்தும் பேறு பெற்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருட்பயனே இஃது என்று எண்ணுகின் றேன். திரும்பவும் விரைவிலே அளவளாவ நேரிடலாம்.

## III

திருக்கானப் பேர் என்ற ஒரு சிற்றூரில் வலியதோர் அரண் அமைத்துக்கொண்டு, வேங்கை மார்பன் என்ற சிற்றரசன் வாழ்ந்து வந்தான். அவன் தன் அருகில்இருந்த பல வீரரையும் தனக்குத் துணையாய்ச் சேர்த்துக்கொண்டான். அவ்வவ்வீரர்க்குரிய சிற்றூர்களிலும் சிறு சிறு அரண்களை எழுப்புவித்தான். அதனால், கானப்பேர் எயில் பல சிறு குன்றுகள் சூழ்ந்த பெருங் குன்றுபோன் றிருந்தது. படைஞர் உதவியும் துணை நிற்கும் சிற்றரசர் உதவியும் தனக்கு இருந்ததால், உக்கிரப் பெருவழுதி யென்ற பாண்டிய மன்னனைப் பணியாதிருக்கவும் தைரியம் கொண்டான்.

கானப்பேர் என்ற எயிலின் தலைவன், வேங்கை மார்பன், இவ்வாறு அறியாமையால் மதங் கொண்டிருத்தலை உக்கிர பாண்டியன் அறிந்தான். அறிந்ததும் அவனுக்கு அறிவு புகட்ட என்ன வழியுளது என்று ஆராயலாயினன். அமைச்சரும் போர்த்தலைவரும் அவனோடு போர் செய்து அவனை அடக்குவதே சிறந்ததென்று உரைத்தனர். ஆயினும், உக்கிரப் பெருவழுதி தான் நேரிலே சென்று பெரும்படையின் உதவிகொண்டு அவனோடு போராடுதல் தன் பெருமைக்கு இழிவாம் என்று கருதினன். தூதன் ஒருவனை அனுப்பி வேங்கை மார்பன் உள்ளக் கருத்தை உணர விரும்பினன். அதற்

கிணங்கத் தூதரிலக்கணம் நன்கு அமையப்பெற்ற ஒரு வன் அங்கு அனுப்பப் பெற்றுன்.

வேங்கை மார்பன், அத்தூதன் வருகையை அறிந் தான் அவனை நேரிலே கண்டு பேசும்பொருட்டுத் தன் நண்பர் சிலரையும் உடன் கொண்டு தன் மாளிகையின் முன் மண்டபத்துக்கு வந்தான். அங்கு உக்கிரப் பெரு வழுதியின் தூதன் உரிய மரியாதைகளோடு காத்திருந் தான். வேங்கை மார்பன் ஓர் உயர்ந்த ஆதனத்தில் அமர்ந்தான். அவன் நண்பரும் அவன் அருகில் அமர்ந் தனர். பிறகு பின் வருமாறு தூதனோடு பேசலாயி னன் :

**வேங்கை மார்பன் :**—ஐய, வழுதியர் தூதரே, நீர் இப்பொழுது இங்கே வந்திருக்கும் காரணம் ஒருவாறு நான் ஊகிக்கக் கூடும். ஆயினும், உமது வாக்காலேயே அதனை வெளியிட வேண்டுகிறேன்.

**வழுதி தூதன்:**—ஐய, தலைவரே, எம் அரசர் பெரு மான் ஆணையைத் தெரிவித்து மறுமொழி பெற்றுப் போக வந்துளேன். நீவிர் கூறும் மறுமொழிக்கு ஏற்ற வண்ணமாக எமது முடிவு கூறப்படும்.

**வேங்கை மார்பன் :**—ஐய, உம் அரசர் ஆணை என்ன ? அதை யான் கேட்கலாமோ ?

**வழுதி தூதன்:**—ஐய, தலைவரே, இதுவே எம் அர சர் ஆணை :

" நீர் சில அற்பரது சேர்க்கையால் முன்னே நம்மரசுக்கு அடங்கித் திறையளந் திருந்ததை மறந்து, இப்பொழுது சில காலமாகத் திறை தராதிருப்பதோடு, எமக்குப் பகையாகப் படைகள் சேர்த்துப் போர் செய்யச் சித்தப்படுத்திக்கொண்

டிருப்பதாகவும் அறிகின்றோம். இன்னும் ஏழு தினங்களுக்குள்ளாக, நேரிலே மதுரை நகர்க்கு வந்து சென்ற ஆறு ஆண்டுகளாகக் கொடாதிருக்கும் கப்பப் பணத்தைக் கொடுத்து விடுவதோடு, நமது ஆணைக்கீழ் அடங்கி நடப்பதற்கு அறிகுறியாக, ஓலக்கமண்டபத்திலே நமது அரியணையில் உம் முடிபட வணங்கிச் செல்லவும் வேண்டும். இவ்வண்ணம் செய்யத் தவறினால் இன்னும் பதினைந்து தினங்களுக்குள்ளாக வழுதி வளநாட்டுப் படைஞர் உமது சிற்றூர்க்கு வந்து, உமது பெருமிதத்தை அடக்கிச் சிறை செய்து வருவர். பின் விளைவைப் பற்றி நாம் ஒன்றும் கூற வேண்டா.'

எம் அரசர் என்னை இங்குத் தெரிவிக்கச் சொல்லியது இன்னது என்று கூறினேன். இனி வேறு ஏதேனும் என்னிடம் அறிய விரும்பின், எடுத்துரைக்கச் சித்தமாயிருக்கிறேன்.

வேங்கை மார்பன்:—ஐய, வழுதி வள நாட்டுத் தூதரே, நீர் தூதராகையால், நுமது பேச்சை இதுவரை மௌனமாய்க் கேட்டிருந்தேன். ஆயினும், நும் அரசர் இவ்வளவு கேவலமாய் எம்மை எண்ணியிருப்பது தவறாம். அதனை அவர்க்குத் தெரிவிக்கவும் விருப்பம் உடையேன். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறேன்.

தூதன்:—ஐய, தலைவரே, எல்லாம் அறிந்த உமக்கு யான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? யானை பெரியதே யாயினும், அது மதங் கொண்டு மலையொடு பொருது முட்டுமாயின், அதற்கு நஷ்டம் விளையுமா, மலைக்குக் கேடு உண்டாகுமா? ஆறு பெரியதே யாயினும், கடலின் அலையை அடக்க வல்லதாமா? உம்மையும் உமக்கு உதவியாயுள்ள வீரரையும் பாண்டிய நாட்டார் அறியாதவரல்லர். உம்முடைய இச்சிற்றூரைப்

பெரியதோர் அரசு என்றெண்ணி உம்முன்னோர் சென்ற வழிக்கு மாறான வழியில் நின்று பாண்டிய வேந்தர் பிரானது பகையைத் தேடிக்கொள்கின்றீர். இன்றே வணங்குவீராயின், உம் பின்னோரெல்லாம் உம்மைப் புகழும் நிலை பெற்று வாழலாம். எதிர்ந்தால், இன்னது விளையும் என்று யான் கூற அறியேன்.

வேங்கை மார்பன்:—ஐய, உம் அரசர் பெருமை யான் அறிவேன்; என் சிறுமையையும் அறிவேன். ஆயினும், யான் கூறுவது ஒன்று உண்டு: பாண்டிய வேந்தர் நாடாள்வதால், நாம் நாடாளுதல் முறையன்று என்று கருதி, மற்ற மன்னரெல்லாம் கடலில் ஒளித்து விட்டனரா? தாமரை மலர்வது கண்டு, கொட்டி கூம்பிவிடுமோ? மாணிக்கக் கல் வாழும் இடத்தில் யாமும் வாழ்வதா என்று மண்ணும் கல்லும் மறைந்து விடுவதில்லையே? செம்பொன் சிறக்கும் நாட்டில் எமக்கு என்ன பணியுள்ளது என்று வெண்பொன்னும் கரும்பொன்னும் வேற்று நாட்டுக்குப்போய் விடுவதில்லையே? சோழரும் சேரரும் அவரொத்த அரசு பூண்டவராய் வாழ்கின்றனரே! மேலும் அவ்விருவரும் நும் அரசாது நட்பும் பெற்றிருக்கின்றனரே! எனது குடியும் இந்நாட்டிலே தலைமை வகித்திருந்த மிகப் பழையதொரு குடியாம் என்பது நீவிர் அனைவரும் அறிந்ததே. அவ்வாறிருக்க, எமது குடிப்புகழ் குன்றுமாறு யான் வேறு எவர் துணையின்றேனும், நும் அரசர்க்குப் பணிந்து வாழ ஒருப்படேன். இதுவே என் முடிவான மறுமொழி.

துணைவருள் ஒருவன்:—ஐய, கானப்பேர்க் காவலரே, "துணையின்றேனும்' என்று நீர் கூறவேண்டா! வாழ்வி

னும் தாழ்விலும் எம் குடிகளும் யாமும் உமக்கு வேண்டும் உதவி செய்யப் பின்னிடையோம் என்பதை முன் பல முறை கூறியுள்ளோம் ஆயினும், இப்பொழுது இத் தூதன் முன்பு உறுதியாகக் கூறிப் பாண்டியர் பகைக்கு யாம் சிறிதும் அஞ்சுகின்றிலோம் என்பதை உறுதியாய்த் தெரிவிக்கின்றேன்.

மற்றவன்:—யானும் அதனையே தெரிவித்துக் கொள்கிறேன். பாண்டிய நாட்டுப் படைப் பெருக்கு நாம் அறியாததன்று. அவர்கள் படைஞரை ஒன்று சேர்த்து நம் திசைநோக்கித் திருப்புதற்குக் குறைந்தது ஒரு மாதம் ஆகும். அதற்குள் நாம் நம நாட்டவர் அனைவரையும் போர்க் கோலம் பூணுவித்துப் பயிற்சியும் செய்வித்துப் பகைஞரை எதிர்ப்பார்க்கலாம். தீது விளையினும் விளைக; நன்மை விளையினும் விளைக. யாமும் எம் படைஞரும் நுமக்கு எக்காலத்தும்வேண்டும் உதவி யியற்ற முன் வருவோம் என்பதை உறுதியாய்க் கூறுகிறேன்.

**வேங்கை மார்பன்**:—தூதரே, யாம் கூறும் மறு மொழி இன்னதென்றறிந்துகொண்டீ ரன்றோ? இன்னும் என்னவுளது?

தூதன்:—வேங்கை மார்பரே, எமது அரசர் பெருமானது குணப்பெருமையை அறியாது அவரொடு பகைத்துக்கொண்டீர். ஆற்றுப் பெருக்கிலே தலைசாய்ந்த புல் பிறகு நிமிர்ந்து நிற்கவும் எதிர்த்துநின்ற பெருமரம் வேரோடு சாயவும் கண்டதில்லையா? சிறந்த போர்த் திறமையும் அரசியலறிவும் படைத்த உம்மை, எம் அரசர் பெருமானை நீர் வணங்குவீராயின், நல்ல நிலையி

லேயே நிறுத்த எண்ணியிருந்தார். உமது எண்ணம் வேறாயிருப்பதால், யாம் இனி யொன்றும் சொல்லற்கில்லை.

வேங்கை மார்பன்:—சுயேச்சையாய்த் திரியும் சிங்கத்தைப் பிடித்துக் கூட்டில் அடைத்து, ஆகாராதிகள் கொடுத்துத் தன் வசப்படுத்திக்கொண்டு, பிறகு அதற்குப் பல வகை அலங்காரங்கள் செய்து ஆட்டங்கள் காட்டுவார்போல, உம் அரசர் எனக்குப் பதவி தர விரும்பினாரோ! பொன்னால் இடும் விலங்காயினும், பிணிப்பதில் இருப்பு விலங்கிற் கிளைத்ததில்லையே! ஒருவர் தம் உரிமையை இழவாது வாழும் வாழ்விலே வெளிப்பகட்டாகிய உயர்வு இல்லை யெனினும் அதுவே உயர்ந்த வாழ்வாம். பிறர்க்குக் கீழ் அடங்கி வாழும் வாழ்வில் எவ்வளவு பெருமை யிருப்பதாய்த் தோன்றினும், அதெல்லாம் சிறுமையேயாம். ஆகையால், யாம் உம்மரசருடன் போர் செய்து எதிர்ப்பதால் இவ்வாழ்வையே இழக்க நேரிடினும், அந்நிலைக்கும் சித்தமாயிருக்கிறோம் என்று அங்கே தெரிவிக்கலாம்.

தூதன்:—அவ்வாறாயின், யான் விடை கொள்கின்றேன். இரண்டு வாரங்களுக்குள் பாண்டியன் மறவர் போர்க் கோலத்தோடு இந்நாட்டுட் புகுவர். அவரை உரிய முறையில் எதிர்கொள்வீர். எல்லாம் இறைவன் செயல்.

அதன்மேல் அத்தூதன் புறப்பட்டு, மதுரைக்கு வந்தான்; அரசர் பிரான் உக்கிரப் பெருவழுதியை அமைச்சர் குழுவிற் கண்டான்; கானப்பேரில் நிகழ்ந்த செய்தியைக் கூறினான். அதைக் கேட்டதும் பாண்டி

யன், "அப்படியாயின் நம் படைஞரெல்லாம் இன்றைக்குப் பதினைந்தாம் நாள் இங்கிருந்து போர்க்குப் புறப்படும்படி வேண்டுவன செய்க," என்று தண்டத் தலைவற்கு ஆணையிட்டான்.

பிறகு மதுரை நகரிலும் அடுத்த வூரிலும் உள்ள கொல்லுலைகளில் வீரர்க்கு வேண்டிய வாளும் வேலும் வடிக்கப்பட்டன. அவை யெல்லாம் அரண்மனைப் படைச் சாலையிற் குவிந்தன. படைஞர் எல்லாம் தத்தம் தகுதிக்கேற்ப வில்லும் அம்பும் வேலும் வாளும் கைக்கொண்டனர். நிமித்திகர் கூறிய நன்னாள் ஒன்றிலே கிழக்கு நோக்கிக் கொடி நாட்டிப் போர் முரசு அறைந்தனர். அரசர் ஆணை பெற்றுத் தண்டத் தலைவர் படைஞருட் பெரும்பகுதியை அழைத்துக்கொண்டு புறப்பட்டனர். உக்கிரப் பெருவழுதியும் முன்னணி புறப்பட்டுப் போன பிறகு கூழைப் படைக்கு முன்னே போர்க் கோலம் பூண்டு புறம் போந்து படைக்கடலின் நடுவில் வந்தான். வழியிடையிலே அன்பராவார் பலரும் தத்தம் படையோடு வந்து சேர்ந்தனர். பாண்டிய நாட்டுப் படையின் முன்னணி திருப்பூவணத்தை நெருங்கும்போது, பின்னணி மதுரையில் இருந்தது. திருப்பூவணம் சேர்ந்து படைஞர் எல்லாம் ஓர் இரவு இருந்தனர். பூவண நாதரை வணங்கிப் பூவும் புகையும் கொண்டு வழுதியர் குலத்தோன்றல் பூசை புரிவித்தான். இறைவன் அருள் பெற்று மறு நாட் காலையில் அங்கிருந்து புறப்பட்டான். வழியிடையிலே வேம்பற்றூர்ப் புலவர் பலர் அரசனைக் கண்டு பாடிப் பரிசில் பெற்றேகினர். பிறகு படைஞரோடு வேகமாய் நடந்து

சென்று வானர வீர மதுரையை யடைந்து சோமநாத ரைத் தரிசித்து, அவரருள் பெற்றுச் சிவ கங்கை சேர்ந்து, இராத் தங்கிப் பின்னிரவிலேயே புறப்பட்டு விரைந்து நடந்து, கதிரவன் உதித்து நான்கு நாழிகைப் பொழுதுக்குள்ளே படைப்பெருங் கடலோடு போர் முரசு முழங்கக் கானப்பேரை நெருங்கினன். படைஞர் எல்லாம் முறையே அணி வகுத்து நின்றனர். வழுதியர் தலைவன், போர் தொடங்குவதாகக் கூறி வருமாறு ஒரு தூதனை அனுப்பினன். வேங்கை மார்பனும் தன் அரணுக்குள்ளே வேண்டுவன எல்லாம் தருவித்து வைத்துக்கொண்டு, தன் படைஞர்க்கெல்லாம் நொச்சி மாலை சூட்டி எயில் காக்குமாறு ஆணையிட்டுத் தானும் அவ்வாறே அவர்கட்குத் தலைமை பூண்டு அரண் காவல் செய்தான்.

பாண்டியன் படைஞர், தம்மரசன் வேம்பினோடு தும்பை மாலையும் சூடிப் போர் புரிவது கண்டு, தாமும் அவ்வாறே தும்பை சூடி அவ்வரணைத் தாக்கினர். இரவொழிய மூன்று தினங்கள் போர் நிகழ்ந்தது. அரண் இறுதியிலே பல பக்கங்களிற் பிளக்கப்பட்டது. வேங்கைமார்பனும் அவனுக்கு உதவியாய் நின்றோரும் தம்மால் இயன்றவளவு படைஞரைத் தூண்டிநின்றனர்; பாண்டியன் மறவர் உட்புகுந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் வேறு வழியில்லை யென்று கண்டு, அருநிதியங்களை மறைத்துவிட்டு, நுழைவழிகள் வழியே வெளியேறி, அருகில் உள்ள காடுகளிற்சென்று மறைந்தனர்.

கானப்பேரெயிலைக் கைக்கொண்ட வுடன் படைஞர் பேராரவாரம் செய்தனர். உக்கிரப் பெருவழுதி

அவர்களை அழைத்து வேங்கை மார்பனைத் தேடிப் பிடித்து வர ஆணையிட்டனன். பல திசைக்கும் படைஞர் சென்றனர். வழுதியர் பிரான் வேங்கை மார்பன் மாளிகைக்குட் சென்று, அங்குப் போரின் பொருட்டுச் செய்திருந்த செயற்கை யலங்காரங்களை அழிக்குமாறு ஆணையிட்டுப் பெரியதொரு மண்டபத்தில் அமைச்சரும் தண்டத் தலைவரும் உடன் வரப் புகுந்தனன்; அங்கிருந்ததொரு பளிங்குப் பீடத்தின்மேல் அமர்ந்தனன்.

அரசர் போர்க்குப் போகுங் காலங்களிற் புலவர் உடன் போம் வழக்கம் அந்நாளில் இருந்ததற் கேற்ப, ஐயூர் மூலங் கிழார் என்ற புலவர், தம்மோடு ஒத்த வேறு சில புலவர்களோடு அங்கு வந்திருந்தார். அரசர் பிரான் போர் வென்று பீடத்தில் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டதும், அவர்க்கு அவனை வாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவ்வண்ணமே அங்கிருந்த அறிஞர் பலரும் மகிழுமாறு வாழ்த்துவாராயினர் :

"நின்னைப் பாடுவாரது அறிவின் எல்லையைக் கடந்த புகழமைந்த தலைவ, நிலவெல்லையைக் கடந்து பாதலத்தேயுற ஆழ்ந்த இடத்தையுடைய அகழியையும், உயர்ச்சியால் வானத்தை முட்டுவது போன்றிருக்கும் மதிலையும், அவ்வானத்திடத்து விண்மீன் தோன்றினாற் போன்று விளங்கும் அழகிய சிகரங்களையும், வெயிற்கதிர் நுழையாத மரம் நெருங்கிய காவற் காட்டினையும் உடையதாய்ப் பகைத்தவர் அணுகற்கரிய சிற்றரண்களாற் சூழப்பட்ட கானப்பேர் என்னும் எயில், வலிய கையையுடைய கொல்லனாற் செந்தீயின்கண்ணே மாட்டப்பட்ட இரும்பு உண்ட நீரினை மீட்பினும் மீட்டற்

கரிதாம் என்று அறிந்து வேங்கை மார்பன் வருந்துமாறு, நாடோறும் வெற்றி பெருகத் தழைத்த தும்பை மாலை யணிந்தாய், புலவர் பாடும் துறைகளை யெல்லாம் முடித்த வெற்றி வேந்தே, நின்னை மதியாத பகைவருடைய புகழும் அவரும் பொன்றுவதாக. நினது வேற்படை வெற்றிப் புகழுடனே விளங்கிப் பொலிவதாக.

"அரசர் பிரானே, புலமை பூண்ட புரவலன் ஆகையால், நின் முன்னே யாம் செய்யுள் செய்ய அஞ்சுகின்றோமாயினும், இத்தகைய பெரிய சந்தர்ப்பத்தில் எம் செய்யுளால் உலகமறியச் செய்யாது நழுவ விட்டோம் என்ற பெயர் எங்கட்கு வரலாகாது. ஆகையால், இப்பொழுது யாம் நினக்குக் கூறிய வாழ்த்து மொழிகளைச் செய்யுளாய்ச் செப்புகின்றோம். செவி சாய்ப்பாயாக:

"புலவரை யிறந்த புகழ்சால் தோன்றல்,
நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி,
வான்றோய் வன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயில்,
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்,
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினும் மீட்டற் கரிதென
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே,
இகழுநர் இசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே." *

* புறநானூறு-செய்யுள், 21.

ஐயூர் மூலங் கிழார் இப்பாடலைப் பாடியதும் அரசன் மிக்க மகிழ்ச்சி யடைந்து, அவருக்குத் தக்க பரிசில் அளித்தனன். பின்னர்ச் சிறிது நேரம் அமைச்சரோடும் பேசியிருந்து, வேங்கை மார்பனைப் பற்றி வரச் சென்ற வீரர் திரும்பி வராமையாற் சில படைஞரையும் ஒரு படைத் தலைவனையும் அங்கு நிறுத்திவிட்டு, எஞ்சிய படைகளோடு மதுரை நோக்கித் திரும்பினன். வழியெல்லாம் குடிகள் பல திசைகளிலிருந்தும் வந்து வாழ்த்தி வணங்கவும், புலவர் பலர் புகழ்ந்து செல்லவும் இறைவன் எம்பெருமான் திருவருள் இருந்தவாற்றை வியந்து மகிழ்ந்து, இரண்டு தினங்களில் மதுரை வந்து அடைந்தான்.

போர் வெற்றியின் பொருட்டு உதவி செய்த படைஞர்க்கும் தலைவர்க்கும் உரிய சிறப்புக்கள் செய்து அவரவர் ஊர்களுக்கு அனுப்பிவிட்டுத் தண்டத் தலைவரும் அமைச்சரும் மனமகிழ உபசார மொழிகள் கூறி விடை கொடுத்தான். பிறகு அரண்மனைக்குட் சென்று, புத்தக சாலையை யடைந்து, அருங்கலை யாய்ந்தும் புலவரோடு அளவளாவியும் பொழுது போக்கும் வழக்கம் போலச் சில நாள் மனவமைதியோடு வாழ்ந்து வந்தான்.

# IV

தமிழ் நாட்டுக்குள்ள சிறப்பு இரண்டு மூன்று காரணங்களால் அமைவதாம்: மேல் பாலும் கீழ் பாலும் மலைகளும் கடல்களும் இடையிலே காவிரி முதலிய நதிகளும் அமைந்து, வேழம், நெல், முத்து என்ற பொருள்கள் எளிதிற் பெற வல்லதாயும் சான்றோர் வாழ்விடமாயும் அமைந்திருப்பது அதற்கு இயற்கைச் சிறப்பாம். கபிலர், பரணர், ஔவையார், சீத்தலைச் சாத்தனர், இளங்கோவடிகள் முதலிய சான்றோர் செய்யுளைப் பெற்றிருப்பது மற்றொரு வகைச் சிறப்பாம். இவை எல்லாவற்றினும் சிறந்த பெருமை ஒன்று உண்டு: உலகில் வாழும் மக்கள் அனைவரும் கொள்கை வேற்றுமை மொழி வேற்றுமை கருதாது, 'எமக்குரியது; எமக்கும் உரியது,' என்று பாராட்டி ஏற்றுக்கொள்ளுமாறு அமைந்த திருக்குறளைத் தன் செல்வமாகப் பெற்றதே தமிழ் நாட்டுக்குப் பெருஞ்சிறப்பாம். மற்றைப் பெருநூல்கள் நம் நாட்டளவில் அடங்கிவிட்டன. திருக்குறளோ, உலக மெங்கும் பரவுகின்றது. ஆகையால், எல்லா அளவாலும் பிற புலவர் செய்யுட்களைக்காட்டிலும் இது கனிமிகு பெருமையுடையதேயாம். ஆகையால் அன்றோ, சமீப காலத்துப் புலவ ரொருவர்,

"வள்ளுவன் றன்னை யுலகினுக் கேதந்து
வான்புகழ் பெற்ற தமிழ்நாடு."

என்று மனமுருகிப் பாடினர்? திருவள்ளுவர் என்ற தெய்வப் புலவர் செய்தருளிய தமிழ் வேதமாகிய திருக் குறளை அரங்கேற்றி உலகிலே பரவச் செய்யும் பேறு உக்கிரப் பெருவழுதிக்கு வாய்த்தது.

அந்நாளிலே திருமயிலாப்பூரிலே கற்பிற் சிறந்த பெண்மணியாகிய வாசுகி யென்ற மனைவியோடிருந்து இல்லறம் நடத்தி வந்தார் திருவள்ளுவர். வசிட்டர் பத்தினியாகிய அருந்ததி தேவியும் அத்திரி முனிவர் பத்தினியாகிய அநசூயா தேவியும் புகழ்தற்கொத்த வாசுகியோடு வாழ்ந்திருக்கையில், அவர் சிறந்த புலமைத் திறம் எய்தி, உலகிற்குப் பொதுப்பட வுதவும் பொது நூல் ஒன்று செய்ய விரும்பினர். ஆயினும், தாம் மேற்கொண்டிருந்த நெய்வுத் தொழில் பகலெல்லாம் தமக்கு அவகாசம் இன்றியிருக்கச் செய்ததால்,இரவிலே அவகாசம் கிடைத்த காலங்களிலே அந்நூலை இயற்ற லாயினர். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களில் அந்நூல் முற்றுப் பெற்றது. அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுப்பாக அமைத்தார். அறத்துப் பாலிலே முப்பத் தேழு அதிகாரங்களும், பொருட்பாலிலே எழுபத்தோ ரதிகாரங்களும், காமத்துப் பாலிலே இருபத்தைந்து அதிகாரங்களும் இயன்றன. ஒவ்வோர் அதிகாரத் துக்கும் பப்பத்துக் குறட் செய்யு ளாயின.

அக்காலத்திலே தமிழ் நாடெங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்த அருந்தமிழ்ப் புலவர் பலரிடமும் திரு வள்ளுவர் தம் நூலைக்காட்டினர். அவரனைவரும் பார்த்து மகிழ்ச்சியும் வியப்பும் எய்தி, ஆசிரியரை மனமுறப்

பாராட்டினர். பிறகு தம் செய்யுளை மதுரை நகர்க்குக் கொண்டு போய் உக்கிரப் பெருவழுதியின் முன்னிலையில் சங்கப் புலவர் அவைக் களத்திலே அரங்கேற்ற வேண்டு மென்ற எண்ணம் கொண்டார். புறப்பட்டுச் செல்ல உரிய காலம் அமைதற்குள் தம் மனைவியை இழந்தார். அதனால், பெரிதும் வருந்தி,

“ அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றூங்கு மென்கண் எனக்கு ?”

என்ற செய்யுளைப் பாடினர்.

பிறகு சில நாள் திருமயிலாப்பூரில் இருந்தார். நாளாக ஆகத் திருக்குறளைச் சங்கத்தில் அரங்கேற்றி விட வேண்டும் என்ற எண்ணம் உறுதியாயிற்று. நன்னாள் ஒன்றிலே மதுரை நகர்க்குப் புறப்பட்டு வந்தார். திருவள்ளுவர் செய்யுட்டிறம் அக்காலத்து அங்கு இருந்த பல புலவர்க்கும் தெரியு மாகையால், உக்கிரப் பெருவழுதி அவர் வருகையை அறிந்ததும் உரியமுறையால் வரவேற்றான்; சங்கப்புலவர் பலரோடும் திருவள்ளுவரை எதிர் கொண்டான்; சங்கமண்டபத்துக்கு அழைத்துச் சென்றான். திருவள்ளுவர்க்கு ஒரு சிறந்த பீடம் அமைக்கப்பட்டது. அரசன் அரியணைமீது அமர்ந்தான். சங்கப் புலவர் அனைவரும் சூழ அமர்ந்திருந்தனர்.

திருவள்ளுவர் தமக்கென்றமைத்த ஆதனத்தில் அமர்ந்து திருக்குறளை ஒவ்வொரு செய்யுளாக எடுத்துரைத்து, விளக்க லாயினர். மூன்று மாதகாலம் விரிவுரை நிகழ்த்தினர்.கேட்டிருந்த புலவரும் அரசரும் அடைந்த

மகிழ்ச்சிக்கு அளவில்லை. பிறகு அங்கிருந்த புலவர் எல்லாம் தத்தமக்குத் தோன்றியவாறு சில வினாக்களை எழுப்பினர். அவற்றுக்கு உரிய முறையால் திருவள்ளுவர் விடை கூறினர். அரசனும் சில கேட்க லாயினன். அவனைப் பின்பற்றிப் பிற புலவரும் பேசினர்.

உக்கிரப் பெருவழுதி:— ஐய, புலவரேறே, அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகை உறுதிப் பொருள்களை அடைதற்குரிய நெறியைத் தெரிவித்தல் நீதி நூல்களின் நோக்கமாமன்றோ? அவ்வாறிருக்கவும், உலகினர்க் கெல்லாம் பொதுவாக அமையுமாறு தாம் செய்திருக்கும் இச்செய்யுள் நூலிலே வீட்டின்பத்தைப்பற்றி ஒன்றும் பேசப்படவில்லையே! அதற்கு என்னகாரணம்?

திருவள்ளுவர்:— அரசரேறே, வீடு என்பது மற்ற மூன்று பொருள்களையும் போல, 'இன்னது; இத்தன்மையது; இவ்வளவினது,' என்று அறுதியிட்டுரைக்கக்கூடாததாகையாலும், சிந்தையும் மொழியும் செல்லாத நிலைமைத்தாகையாலும், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றின் ஒழிவே அதுவா மாகையாலும் இந் நூலிலே விளக்கிக் கூறப்படவில்லை. ஆயினும், துறவறம் அதற்குக் காரணமாம். ஆகையால், துறவறத்தின் பெருமை கூறும் இடங்களிலும் பிற இடங்களிலும் வீட்டின் இயல்பை விளக்கியிருக்கின்றேன். வெளிப்படையாக இன்னதென்று வரையறுத்து உரையாமையால், அதற்கென்று வீட்டின்பால் என ஒரு பகுதி வகுக்கவில்லை.

உக்கிரப் பெருவழுதி :— பொது நூல் செய்யப் புகுந்த புலவரேறே, நுமது நூலுக்கு ஏற்புடைக் கடவுள் என்று எக்கடவுளைக் கூறி வணக்கம் செய்துளீர்?

கடவுள் வாழ்த்துச் செய்யுட்களைப் பார்த்தால் எப்பக் கமும் இழுக்கலாம்போ லிருக்கின்றனவே!

திருவள்ளுவர்:— அரசரே, என் செய்யுள் இன்ன நாட்டுக்கு இன்ன காலத்துக்கு இன்ன மொழிக்கு இன்ன மதத்தினர்க்குத்தான் பயன்பட வேண்டும்; பிறர்க்கு ஆகாது என்ற கருத்தோடு அமையவில்லை. ஆகையால், அதற்கு ஏற்புடைக் கடவுள் இன்னன் இவன் என யான் கூறவேண்டுமோ? இதுவே பொருள் என்று எவர் எது கூறினும், ஏற்பது எது? அதுவே பொருள் என்று அறிந்துகொண்டேன். அப்பொருள் எவர்க்கும் பொதுவே என்றாலும் பொருந்தும். எல் லோர்க்கும் பொதுவில் யாவ ருள்ளத்திலும் எல்லாப் பொருள்களினுள்ளும் கரந்தும் வெளிப்பட்டும் வைகும் எல்லாம் வல்ல எல்லாம் அறிந்த அப்பொருளையே இந் நூற்கு ஏற்புடைக் கடவுளாகக்கொண்டு வாழ்த்தினேன்.

உக்கிரப் பெருவழுதி :—புலவரே, பொருட்பாற் செய்யுட்களை மிகுதியாயமைத்து, அறத்துப் பாலிலே குறைவாகவும் காமத்துப் பாலிலே அதினும் மிகக் குறை வாகவும் செய்யுட்களை அமைத்ததேன்? உலகிலே துய்க்கும் இம்மூன்றில் ஒன்றற்கொன்று உயர்வு தாழ் வுண்டோ?

திருவள்ளுவர்:—உலகவேந்தே, அவ்வாறு அமைத் தது தக்கதொரு காரணத்தாலேயாம். உலகில் வாழ் வார் அடைந்து அனுபவித்தற்குரிய மூவகை உறுதிப் பொருள்கள் அறம் பொருள் இன்பம் என்பன. அவற் றுட் பொருள் இல்லையென்றால் மற்ற இரண்டும் இருத் தற்கு இடமில்லை. பொருளே அறத்தையும் இன்பத்

தையும் வளர்ப்பதாம். அன்றியும், அரசும் அங்கமும் பொருளாற் பிறந்து வளர்வதால், உலகிலே உள்ள எல்லாம் பொருளிற் பிறந்துவிடும் என்று கூறலாம். இன்னோன்ன காரணங்களாற் பொருட்பால் சிறப்புடைமை கருதி, அதில் அதிகாரங்கள் அதிகமாயின. பொருளால் எய்துவதே அறமும் இன்பமும் ஆயினும், அவற்றுள் தனக்கே பயன்படும் இன்பத்தைக்காட்டினும் பிறர்க்கும் தனக்கும் ஒப்பப் பயன்படும் அறமே சிறப்புடைத்தாம் என்ற கருத்தால், அறத்துப் பாலைப் பெரிதாகவும் காமத்துப் பாலைச் சிறிதாகவும் அமைத்துளேன்.

உக்கிரப் பெருவழுதி:—அருந்தமிழ் அறிஞரே, கருதியபொருளைத் தெளிவுற விளக்கவேண்டிய வளவுக்குச் சுருங்கிய சொல்லும் விரிந்த பொருளும் உடைத்தாய் அமைந்துள்ள திருக்குறளைப்பற்றி யான் எவ்வாறு புகழ்வேன்! அகநானூற்றைத் தொகுப்பிக்க அமைந்த தமிழ்த் தெய்வத் திருவருள் திருக்குறளைச் செவியேற்கவும் அமைந்தது. நுந்தம் செய்யுள் என் முன்னிலையில் அரங்கேறியதால் எனக்கு வாய்த்த புகழே அதிகம் என்பேன். இனி நுமது செய்யுட் பெருமையைப் பற்றி யான் கூறுதற்கு என்னுளது?

நான்மறையின்மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னி;வாய் வாழ்த்துக; நன்னெஞ்சம்
சிந்திக்க; கேட்க செவி.

திருவள்ளுவர்:—அரசரே, இவ்வாறு புகழப்படுவதற்கு என்னூல் தகுதியுடையதாய் இருக்க வேண்டும்

என்பதே யான் இறைவனை வேண்டுவது. இத்துணைப் புலவர் பெருமக்களுக் கிடையில் இவ்வாறு எளியேனைப் பாராட்டியது எனக்கே நாணம் தரும்.

உக்கிரப் பெருவழுதி:—புலவரே, மற்றைப் புலவர்களும் தத்தம் கருத்தைக் கூறுவர். எனக்காக அவர் கருத்து மாறுபடாது.

கபிலர்:—அரசே, புலவர் பெருமானே, யாம் கூறுதற்கு என்ன உளது? தினையளவுக்கும் பற்றாத சிறிய புல் நுனியில் உள்ள நீர், சூரிய உதய காலத்தில் நீண்டதொரு மலையையும் தனக்குள் அடக்கிக் காட்டுமாறு போல, மிகச் சிறிய உருவத்தில் அமைந்த இக்குறட்பாக்கள் அருங்கருத்துக்கள் பலவற்றையும் அடக்கியிருத்தல் பாராட்டத் தக்கது.

உக்கிரப்பெருவழுதி:-பரணரே, நும்கருத்தென்னை?

பரணர்:—அரசரே, திருமாலும் காசிபர் குமாரனாக வாமனனாகத் தோன்றி, மாவலியின் யாக சாலையில் வளர்ந்து இரண்டு அடிகளால் மண்ணுலகையும் விண்ணுலகையும் அளந்தான். அறிஞராகிய திருவள்ளுவரும் தம் குறள் வெண்பாவில் இரண்டடிகளால் உலகத்தார் மனத்துள் உள்ளுவனவற்றை எல்லாம் அளந்தார்.

மாமூலனார்:—அரசரே, அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களின் திறத்தை இன்னது என அறிந்துரைத்த தேவரை அறியாமையால், 'இழி குலமாகிய வள்ளுவக் குலத்தே பிறந்தார்!' என்று ஒருவன் கூறுவானாயின், அவன் அறிவில்லாப் பேதையே. அவன் வாய்ச் சொல்லை அறிவுடையோர் கொள்ளார். குலப் பிறப்பால் ஒருவர் அடையும் உயர்

வும் இழிவும் உறுதியல்ல; கல்வியாலும் அறிவாலும் தவத்தாலும் அவை இன்மையாலும் அடையும் உயர்வு இழிவுகளே உறுதியானவை.

கல்லாடனார்:—உலகத்திலே பல வகைச் சமயங்கள் உள. ஒரு சமயத்தார் ஒன்று பொருள் என்றால், வேறொரு சமயத்தார் வேறொன்று கொள்வர்; வேறொன்றினைக் கொண்டால் அன்றென்றும் ஆமென்றும் வாதிப்பர். இத்தகைய மாறுபாடு கொண்ட கொள்கையினையுடைய பலரும், 'திருவள்ளுவர் திருக்குறள் எமக்கும் பொருந்தும்; எமக்கும் பொருந்தும்,' என்று ஒன்றாகக் கூறுவர். இதைக்காட்டிலும் இந்நூற்கு வேறு என்ன பெருமை வேண்டும்?

சீத்தலைச் சாத்தனார்:—வேந்தர் வேந்தரே,

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கோடியும்-மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்?"

வெள்ளி வீதியார்:—பாவல ரேறே, புலவ ரேறே, யான் பெண்பாலே யாயினும், என் கருத்து இச்செய்யுளைப் பற்றியவளவில் இன்னதென அறிய நீவிர் விரும்புவதால், யான் கூறுவது இதுவே: ஒருவராலும் செய்யப்படாதனவாய் இறைவன் அருள் வயத்தால் அமைந்த நான்மறைக்கும் திருவள்ளுவர் பாடிய பொய்யா மொழியாகிய திருக்குறளுக்கும் பொருள் ஒன்றே. ஆயினும், செய்யா மொழிக்குரியர் அந்தண ரொரு வகுப்பாரே என்ற குறை அதற்கு உளது. இப்பொய்யா மொழிக்குரியர் அல்லாதவர் எவரும் இலர். ஆகையால், இஃது அதனினும் சிறந்தது என்றே கூறுவேன்.

மாங்குடி மருதனார்:—புரவலப் புலவரே, புலமைப் புரவலரே,

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு."

மதுரைத் தமிழ் நாகனார்:—அரசரே,

"எல்லாப் பொருளும் இதன்க ணுள;இதன்கண்
இல்லாத வெப்பொருளு மில்."

இடைக்காடர்:—

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

இவ்வாறு பல புலவரும் தத்தம் கருத்தைத் தெரிவித்தனர். அதனைக் கேட்ட மன்னனும் திருவள்ளுவரும் மகிழ்ச்சி பூத்தனர். அரசன் அங்கிருந்த புலவர் பலர் முன்னிலையில் திருவள்ளுவர்க்கு அவரது நிலைமைக்கும் புலமைக்கும் ஏற்ற வண்ணம் சிறப்புக்கள் செய்தான். பிறகு சில நாள் அப்புலவர் பெருமான் மதுரை நகர்ப்புலவர்களோடு அளவளாவி அங்கு உறைந்திருந்தார். அந்நாளிலேயே அப்புலவர்கள் தத்தம் செய்யுட்களில் திருவள்ளுவர் சொல்லையும் பொருளையும் அமைத்துக்கொண்டு, அவ்வாறு செய்வதைப் பெருமையாகக்கருதிக் கொண்டனர். தம்கண்முன்பாகவே சிறந்த புலவர்கள் தம் செய்யுளை இவ்வாறு பாராட்டுவதைக் கண்ட திருவள்ளுவர் இறைவன் செயல் இருந்தவாற்றை வியந்து, பிறகு தம்மூர்க்குத் திரும்பினார்.

உக்கிரப் பெருவழுதி, வட நாட்டிலும் குட நாட்டிலும் இருந்து வரும் திறைப்பணங்களால் புலவர்கட்கெல்லாம் மனங் கொண்ட மட்டும் பரிசில் ஈந்தனன். அவனை அவர்கள் மேன்மேலும் வாழ்த்துவாராயினர்கள். இவ்வாறு வாழ்ந்து வருகையில், என்றும் இளையனாய் இருப்பான் போல நூலாராய்வதிலேயே பொழுது போக்கிக்கொண்டிருந்த அவ்வேந்தனுக்கும் முதுமைப் பருவம் குறுகியது. இளம்பருவத்திலே பயின்றிருந்த புலவர் வேறாகவும் அந்நாளிலே நெருங்கிப் பயின்றோர் வேறாகவும் ஆயினர்.

அமைச்சரும் தம் அரசனுக்கு அதிக சிரமம் உண்டாகாதவாறு அரசியற் பொறையை வகித்திருந்தனர். இவ்வாறு இருக்கையில், கானப் பேரரண் தலைவனாயிருந்த வேங்கைமார்பன், தான் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிவந்து,பாண்டிய நாட்டுட்புகுந்து மதுரை நகரை அடைந்து, உக்கிரப் பெருவழுதியைக் கண்டு வணங்கினன். வழுதியர் பிரான் அவனுக்குத் தக்கவாறு அறிவுபுகட்டி அவன் தலைமையை அவன்கையில் அளித்துத் தனது பாண்டிய நாட்டுப்படையிலும் ஒருகௌரவ சேனாதிபதி உத்தியோகம் கொடுத்தனுப்பினன்

வட நாட்டு ஆரிய வரசரும் முறை பிறழாது திறை செலுத்தி வந்ததால் மகிழ்ந்து, அவர்க்கும் உரிமை வழங்கி அருள் புரிந்து அனுப்பினான். தமிழ் பயில்வார்க்கும் பயிற்றுவார்க்கும் உதவுமாறு பல கட்டடங்கள் கட்ட அரசிறைப் பணத்தில் ஒரு பகுதியை உதவினான். அற நிலயங்களை மேன்மேலும் சிறப்புச் செய்வித்தான்.

முதுமைப் பருவத்தை உள்ளவாறு பயன்படுத்தக் கருதி, எங்குமாய் நிறைந்த இறைவனை உள்ளத்தால் உன்னி வாக்கால் துதித்து மூன்று காலங்களிலும் தலையால் வணங்கிவந்தான். இறைவன் திருவருளால் கவலையற்ற மனத்தைப் பெற்றுச் சில நாள் வாழ்ந்திருந்து, பிறகு இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

அகத்தைத் தொகுப்பித் தறமுதன் முப்பால்
அகத்துக் கொளுநூல் அறிஞர்—முகப்ப
அரங்கேற்றி யீந்த வரசன் புகழை
ஒருங்கேற்றுக் கொள்ளும் உலகு.

## 2. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

### I

"உருவுகண் டெள்ளாமை வேண்டும்; உருள்பெருந்
அச்சாணி யன்னார் உடைத்து." [தேர்க்(கு)

குடிப்பிறப்பு-ஆண்மையும் திண்மையும்தறுகண்மையும் வண்மையும் புலமையும் வாய்ந்த குடிப்பிறப்பு. அத்தகைய குடிப்பிறப்பு வாய்க்கப் பெற்றோர், பிறர் உதவியும் போர்ப்பயிற்சியும் உலக அனுபவமும் பெறா தவராயிருப்பினும், தம் முன்னோர் உதிரம் தம் உடம்பி னுள் ஓடிக்கொண்டிருக்கும் காரணத்தால், இத்தகைய ஆற்றல் அமைந்திருக்கும் என்று எவரும் எதிர் பார்க்க லாகாத இளம்பருவத்திலேயே, நினைத்தது முடிக்கும் திறம் வாய்ந்தவரா யிருப்பர். சிங்கக் குருளை பெருங் களிற்றைக் கண்டு அஞ்சுவதுண்டோ? தன் பிறப்பின் தன்மைக் கேற்றவாறு பாய்வதன்றோ அதன் இயல்பாம்? பெரும்புலவர் குடியிற் பிறந்த இளஞ்சிறாரும் கல்விப் பயிற்சி பெறாமுன்னரே செய்யுள் செய்யும் திறம் பெற் றிருத்தல் காண்பது உண்டன்றோ? பலவகைப் பொருள் களை ஓரிடத்தில் வைத்துப் பல குடியிற் பிறந்த குழவி களைத் தத்தமக்கு விருப்பமானவற்றை யெடுக்கச் சொல் லின், அவ்வக்குழவியின் குலப் பிறப்புக்கும் குடிச் சிறப்

புக்கும் ஏற்ற பொருள் அதனதன் கையில் இருக்கக் காண்போமன்றோ? இவ்வாறு அமையக் காரணம், முன்னோர் இயல்புக்கேற்பவே பின்னோர்க்கும் மனம் அமையுமென்ற இயற்கை விதியேயாம்.

நெடுஞ்செழியன் என்பான் பாண்டியர் குல விளக்காய்த் தோன்றித் தன் முன்னோர் தேடிய செல்வமாகிய தமிழ் நாட்டுத் தலைமையை மிகவும் இளம்பருவத்திலே ஏற்றுக்கொண்டான். சேரரும் சோழரும் பிற தமிழ் நாட்டுச் சிற்றரசரும் அக்காலத்திலே பாண்டிய னாட்சிக்குள் அடங்கி யிருந்தனர். அவர்க்கு அவனது தலைமைக் கீழ் அடங்கி யிருத்தல் இழிவெனத் தோன்றியதால், சேர நாட்டில் எல்லாரும் ஒன்று கூடி ஆலோசிக்கலாயினர். அந்நாளில் சேர நாட்டில் அரசு தாங்கி யிருந்தவன் சேரல் என்பவனும். அவனே பாண்டியர் ஆதிக்கத்திற் பெரிதும் வெறுப்புக் கொண்டனன்; தன் நண்பனுகிய சோழனது நாட்டுக்குச் சென்று பலமுறை அவனைப்போர்க்கெழுமாறு தூண்டினன். அவன் தானே தனித்துப் போர்க்குச் சென்றால் தோல்வி வரும் என்பதை அறிந்திருந்ததால் சேரன் சூழ்ச்சிக்கு இசைந்தான். இவ்விரு பேரரசரும் ஒன்று சேர்ந்ததால் சிற்றரசராகிய திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற ஐவரும் இவர்க்குத் துணையாய்ச் சேரத் துணிந்தனர். இவ்வெழுவருமே சேர நாட்டிற் கூடி ஆலோசிக்கலாயினர். செய்த ஆலோசனை அங்கு நிகழ்ந்த பேச்சால் விளங்கும்:

சேரன்:—சோழ வேந்தரே, அன்பர்காள், நாம் அனைவரும் இங்கே கூடியிருப்பதன் காரணம் நீவிர்

அறிந்ததே. ஆயினும், நாம் நம் முயற்சியை எவ்வாறு தொடங்கி நிறைவேற்றுவது என்பதே இப்பொழுது ஆலோசிக்கவேண்டுவதாம். 'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு,' என்பது பெரியார் கருத்தாம். ஆகையால், நாம் எழுவர் ஒன்று சேர்ந்தும் தோல்வி வருமாறு நேரிடக் கூடிய நிலையில் நாம் இருத்தலாகாது. ஆகையால், வேண்டுவன எல்லாம் இங்கேயே ஆராய்ந்துவிட வேண்டும்.

சோழன்:—ஆம்; அஃது உண்மையே. எனக்கும் வெகு நாளாய் இந்த எண்ணம் உண்டு. நெடுஞ்செழியன் இளமைப்பருவம் உடையனாய் இருத்தலால், நமக்கு அவனை எதிர்க்க இதுவே தக்க சமயம். 'இளைதாக முண்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்தவிடத்து,' என்பது பெரியோர் கருத்தன்றோ? அவன் ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்து போர்த்திறமும் பெற்றுக்கொண்ட பிற்பாடு நாம் எழுவர்சேரினும் அவனை எதிர்த்து வெல்ல இயலாது என்பது என் எண்ணம். முடி அவன் தலையில் உறுதியாய் நிலைக்கு முன்பே நாம் கழற்றிவிட முயல்வோம். பாண்டிய நாட்டை நம் வசப்படுத்திவிட்டாற் பிறகு நாம் நிர்ச்சிந்தையாய் வாழலாம்.

இருங்கோ வேண்மான்:— அரசர் பெருமக்காள், நாம் நம் படைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து அனுப்புவதா? சிறிது சிறிதாகப் பல பகுதிகளாகப் பிரித்து அனுப்புவதா? சோழ நாட்டின் பக்கத்திலிருந்து பாண்டிய நாட்டைத் தாக்குவதா? அல்லது இச் சேர நாட்டின் பக்கத்திலிருந்தே தாக்குவதா? இரண்டும் இல்லையென்றால், நம் படைகளை நான்கு பகுதி

களாய்ப்பிரித்து, மதுரை நகரின் நான்கு வாயில்களையும் முற்றுகையிடச் செய்வோமா? தங்கள் கருத்து என்னவென்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

சேரன்:— நம் படைகள் அனைத்தும் மதுரைக்குப் போய் அரணை முற்றுகையிடுதல் நலம் என்பது என் எண்ணம்.

சோழன்:— நம்முள் யாரேனும் இப்படைகள் அனைத்துக்கும் தலைமை பூண வேண்டும். எழுவராய் இருப்பதால், நம்முள் மன மாறுபாடு உண்டாகாதிருக்குமாறு, ஒருவர் ஆணையை நாம் அனைவரும் பின்பற்றல் நலம்.

எருமையூரன்:— எங்கள் படைகள் மிகவும் சிறியவையே. எங்கட்குப் பெரும்போர்களை முன்னின்று நடத்தும் பயிற்சியும் இல்லை. அரசர்களாகிய உங்கள் இருவரில் ஒருவர் தலைமை வகித்தால், நாங்கள் அனைவரும் உங்களைப் பின் பற்றுவோம்.

எழினி:— என் படைஞர் தொகையாற் குறைந்தவரே யாயினும், வில் வேல் வாள் என்ற படைப்பயிற்சியில் எவர்க்கும் தாழ்ந்தவரல்லர். படையனைத்துக்கும் எவர் தலைமை வகிப்பினும், நான் அவர்க்கு அடங்கி என் படைஞரை நன்கு போரியற்றச் செய்கின்றேன்.

பொருநன்:— போர் என்றால் மனம்மகிழ்ந்து முன் வரும் படைஞர் ஆயிரவர் என்னிடமும் இருக்கின்றனர். முன்னே நாங்கள் பல சிறு போர்களைச் செய்திருக்கின்றோமாயினும், இப்பொழுது பேரரசராகிய உங்கள் இருவர் கருத்துக்கிணங்க, எமக்கெல்லாம் தலைமை பூண்டிருக்கும் பாண்டியனை எதிர்க்கத் துணிந்தோம்.

இப்போரில் நாங்கள் உங்கள் கருத்துக்கிணங்க வந்து முன்னிற்பதால் அடைய விரும்பும் பயன் ஒன்று உண்டு. அஃது என்னவெனில், நாங்கள் இப்பொழுது தலைமை வகிக்கும் பாண்டியனை எதிர்த்து வெற்றிகொள் வோமாயின், மறுபடியும் வேறொரு தலைமையின் கீழ் அடங்க மாட்டோம் என்பதே. எங்களுக்குப் பேரரசரா கிய உங்களைப்போன்ற வாழ்வு இல்லையெனினும், சுதந் தர வாழ்வு வேண்டும் என்ற நினைவு இருப்பது நியாயந் தானே! பின்னர் உங்கள் இருவரில் ஒருவரும் எம்மை உங்கள் தலைமைக்கு அடங்கி நடக்குமாறு வற்புறுத் தாது இருக்க வேண்டுகிறேன்.

திதியன்:— யானும் என் படைஞரும் போர்க்குச் சன்னத்தராய் இருக்கின்றோம். சேரர் தலைவரே இப் பொழுது இப்போர் நிகழ்த்தற்கு வேண்டிய முயற்சி யைத் தொடங்கினராதலால், அவரே தலைமை வகித்து நடத்துவது பொருத்தமாம்.

சோழன்:— யானும் அதனையே கூறக் கருதினேன். முன்னே சேரர், படைகளோடு புறப்பட்டு, மதுரையர ணைத் தாக்கச் செல்வர். நாம் அனைவரும் அவர்க்கு உத வியாய்ப் பின்னே செல்வோம்.

சேரன்:— இதுவே முடிவு. இன்னும் ஒரு வாரத் துக்குள் நாம் இங்கிருந்து புறப்படுவோம். நீங்கள் அனை வரும் உங்கள் படைஞரோடு வந்து சேருங்கள். அனை வர்க்கும் என் வந்தனம் உரியனவாம். விரைவிலே படை களோடு புறப்பட்டு வாருங்கள்.

சோழன்:— நாங்கள் அனைவரும் விடை பெற்றுக் கொள்கிறோம்.

இவ்வாறு பேசற்குரிய வனைத்தும் பேசி ஒரு தீர் மானத்துக்கு வந்தவுடன் சோழன் சோணாட்டுக்கும் மற்றவர்கள் தத்தம் ஊர்களுக்கும் பிரிந்து போனார்கள். சேரன் தன் நாட்டகத்திலே படை திரட்டு முயற்சியில் இறங்கினான். முதற்கண் அரச விளம்பரம் ஒன்று பிர சுரித்தான். அது, வருமாறு:

"தேச பக்தியிலும் ராஜ பக்தியிலும் சிறந்த குடிமக்களே, இன்னும் ஒரு வாரத்தில் நம் தேசத்தின் முன்னேற்றத்தின் பொருட்டு நாம் ஒரு பெரிய காரியம் செய்ய உத்தேசித்திருக் கின்றோம். நாம் அநேக ஆயிர வருஷங்களாக இந்நாட்டைச் சுயேச்சையாய் ஆண்டு வரும் சேரர் குடியில் வந்தோம் என்பதும், இமய வரம்பன், வான வரம்பன் முதலிய சிறப்புப் பெயர்கள் நம் முன்னோர் உயர்ச்சியை விளக்கும் சான்றுகளாம் என்பதும் நீங்கள் அறிந்த செய்திகளே. சமீப காலத்திலே நம் அரசு பாண்டியர் வசப்பட நேர்ந்தது. சென்ற சில ஆண்டு களாக நம்மால் இயன்றவரை முயன்றும் நாம் அவ்வாதிக்கத்தி னின்று விலகிக்கொள்ள இயலாது போயிற்று. பண்டைப் புகழ் பெற்ற பழங்குடியிற் பிறந்த யாம் சுயேச்சை யிழந்து இவ்வாறு அடங்கியிருத்தல் சிறப்பன்றென்பதை நாம் எடுத்துக் கூற வேண்டா. இதனால், நாம் நம் நாட்டின் சுதந்தரத்தை ஸ்தாபிக்கத் தொடங்கிச் சென்ற ஆண்டு முதல் பாண்டியர்க் குத் திறை யளப்பதை நிறுத்தி விட்டோம். அந்நாட்டவரே முன்போல நம்மை யடக்குவதற்காகப் படையெடுத்து வருதல் கூடும். ஆகையால், அவ்வாறு நேருதற்கு முன்பு நாமே அவர் களை எதிர்த்துத் தாக்க முயலுதல் நலமாம். தற்காலம் பாண்டிய நாட்டில் அரசு தாங்கியிருக்கும் நெடுஞ்செழியன் என்பான் மிகவும் இளைஞனாய் இருப்பதும் போர்ப்பயிற்சியிற் சிறப்படை யாதவனாய் இருப்பதும் நமக்கு ஒரு பெருத்த உதவியாகும்.

ஒரு வாரத்துக்குள் இங்கிருந்து படைகள் புறப்பட்டு மதுரை நகரைத் தாக்க வளைய வேண்டியிருத்தலால், இருபது வயதுக்கு மேற்பட்டவர்களாய்ப் படைப் பயிற்சி பெற்றுள்ள அனைவரும் நம் நாட்டுப் படையிலே சேர்ந்துகொண்டு, தம் நாட்டுக்கும் அரசுக்கும் இயற்றலாகும் கடமையை மேற்கொள்ள விரைந்து வருமாறு வேண்டுகின்றோம். தமது கடமையை நன்கு அறிந்திருக்கும் புகழ்மிக்க வீரர் குடியிலே பிறந்திருக்கும் நம்மவர்க்கு இதைக்காட்டிலும் அதிகமாய் நாம் தெரிவித்தற்குரியது வேறு என்னுளது? வெற்றியால் வரும் பெருமையும் தோல்வியால் வரும் சிறுமையும் சுயேச்சையால் வரும் உயர்வும் பாதந்திர நிலையால் வரும் தாழ்வும் எல்லாம் அரசர்க் கிருப்பதைக்காட்டிலும் குடிகட்கே அதிகமாம் என்பதை யாம் அறிவிக்க வேண்டுமோ?

இங்ஙனம்:

சேரலன்."

இவ்விளம்பரம் சேர நாடெங்கும் பரவியது. சோழனும் தன் நாட்டில் இவ்வாறு ஒரு விளம்பரம் பரப்பிப் படை திரட்டினன். மற்றைத் தலைவர்கள் தத்தம் சிறு நாடுகளிலே அதிக விளம்பரம் செய்யாமலே பிறர் அறியா வண்ணம் படை திரட்டிப் போர்க்கு எழுந்தனர். இவ்வாறு இவரனைவரும் செய்யும் செய்கையைப் பாண்டிய நாட்டு ஒற்றருட் சிலர் அறிந்தனர். சேர நாட்டிலிருந்த ஒற்றர் இச்செய்தியைப் பாண்டியனுக்குத் தெரிவிக்க விரைந்து சென்றனர். சோழ நாட்டு ஒற்றரும் பாண்டிய நாட்டிற் புகுந்து ஆராய்ந்தனர். சேர நாட்டு ஒற்றரும் பாண்டிய நாட்டிற் புகுந்து மறைவிலே பாண்டியன் வலிமையையும் நிலைமையையும் ஆராய்ந்திருந்தனர். பாண்டிய நாட்டு ஒற்றர் தமிழ்

நாடெங்கும் சிற்றரசு பேரரசு என்ற வேறுபாடின்றி எங்கும் பரவியிருந்தனராதலால், சேரவரசரும் பிறரும் ஒன்று சேர்ந்து செய்துள்ள இச்சதியாலோசனையை அறிந்துகொண்டு தம் மன்னனுக்குத்தெரிவிக்க விரைந்து வருவா ராயினர்.

இந்நிலையில் நெடுஞ்செழியன், அரச பதவியை ஏற்றுக்கொண்ட தனக்கும் தன்னைச் சார்ந்த அமைச்சர்க்கும் புலவர்க்கும் சேனைபதியர்க்கும் தூதுவர்க்கும் பிறர்க்கும் பழியுண்டாகாவாறு என்ன செய்யலாம் என்பதைத் தனக்குள்ளே சிந்தித்திருந்தனன். அரண்மனையிலே அந்தரங்க சபையொன்று கூட்டினன். அதன்கண் அமைச்சர் இருவரும் சேனைபதியர் இருவரும் புலவர் இருவரும் வந்திருந்தனர். அங்கு நிகழ்ந்த ஆலோசனை பின் வரும் பேச்சுக்களால் விளங்கும்:

நெடுஞ்செழியன்:—பெரியீர்காள், நல்லாசிரியரை அடுத்துக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெறுதற்குரிய இவ் விளம்பருவத்தில் யான் இவ்வரச பதவியை யேற்றுக் கொண்டது உங்கள் உதவி யுள்ளதென்ற தைரியத்தினாலே யன்றி வேறு காரணத்தினா லன்று. அரண்மனைப் புலவர் இருவரும் அடிக்கடி அரண்மனைக்கு வந்து போகின்றன ராதலால், எனது கல்விப் பயிற்சிக்கு யாதொரு இடையூறும் உண்டாகவில்லை யாயினும், அரசியற் பொறை தோள்மேல் ஏறியதால், முன்போற் கவலையற்றுக் கலைபயில இயலவில்லை. சில நாட்களாகப் போர்ப் பயிற்சி மிகவும் கவனிக்கப்பட்டு வருகிறது. மற்போரும் விற்போரும் வாட்போரும் செய்ய இக் காலத்தில் யான் எவ்வளவு பயிலக்கூடுமோ அவ்வளவும்

பயின்று வருகின்றேன். ஆயினும், என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் உதிக்கிறது: நம் நாட்டுள் அடங்கியிருந்த சேரரும் சோழரும் பிற குறும்பர்களும் சுயேச்சையை நிலை நாட்டி விட்டார்கள் என்று கேள்வியுறுகிறேன். அவ்வளவில் நின்றாலே நாம் அவர்களோடு போர் செய்து முன்போல அடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவ்வளவில் நில்லாமல் நம்மோடு போர் செய்ய வந்துவிடுவார்களாயின் என்ன செய்யலாம்? நம் நாட்டுப் படைகள் தற்காலம் உள்ள நிலையில் அவர் அனைவரும் சேர்ந்து வரினும் தாங்க வல்லவையாய் இருக்குமா? எதிர் பாராத வண்ணம் நாம் ஒரு போரில் நுழைய நேரிடுவதைக்காட்டிலும் எதற்கும் சித்தமா யிருப்பது நன்றன்றோ?

உதவி அமைச்சர்:—அரசரே, சேரன் சோழன் முதலியோர் நமது ஆதிக்கத்தினின்று விலகியது, நமக்குப் பெருங்குறைவே. நாம் அதன் பொருட்டு அவர்களையும் அவர்க்கு உதவியாயினாரையும் தண்டிக்கவே வேண்டும். அம்முயற்சியில் நம் சேனாதிபர் என்ன கூறுவரோ!

சேனாதிபதி:—அரசர் பிரானே, புலவரேறே, அமைச்சர் தலைவரே, உதவியமைச்சரே, யான் கூறுதற்கு என்ன உளது? படைஞர், சமீப காலத்திலே பெரும் போர் ஒன்றும் நேரிடாமையால், தம் தோள் தினவெடுப்பதாய்க் கூறுகின்றார். படைகளும் அடிக்கடி கொல்லுலைக்குப் போய்த் தீட்டியும் பயிற்றியும் வந்தாலன்றிப் பயன்படாது மழுங்கிப்போம். ஆகையால், இப்பொழுதே வேண்டுமென்றாலும் நாம் நம்மை மதியா

திருக்கும் அவர்களை அடக்கி அறிவு புகட்ட அங்குச் செல்லலாம்.

புலவர்:—அரசரே, பிற அரசரை வெல்லுவதும் அடக்குவதும் நம் குடியிற் பிறந்தார்க்கு இயல்பே. ஆயினும், சில ஆராய்ச்சிகள் அவசியம் இப்பொழுது செய்து முடித்துக்கொள்ள வேண்டும்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர், எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

எனவும்,

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

எனவும்,

"தாளாண்மை யென்னும் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னும் செருக்கு."

எனவும், அருளிச்செய்தார் செந்நாப்போதார். ஆகையால் நம்நாடும் நம் அரசும் உயர்ச்சியுறத்தக்க செயல்களை நாம் தக்கவாறு ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதே. பகைஞர் என்ன யோசனை செய்கின்றார் என்பதும் நம் யோசனையை அவர் அறிவாரா என்பதும் ஒற்றரால் நாம் அறியத் தக்க செயலாம். ஒற்றர் வந்த பின்னர் அவ்வந் நாடுகளில் உள்ள தற்கால நிலையை நாம் அறிந்து கொண்டு போர் தொடங்கலாம். 'குலவிச்சை கல்லாமற் பாகம்படும்' என்பதற்கிணங்க, நம் அரசர் போரிலும் கல்வியிலும் சிறந்து விளங்குதல் நாம் அனைவரும் இனிக் கண்டு கேட்டு ஆனந்திக்க வேண்டுவதே.

நெடுஞ்செழியன்:—புலவரேறே, ஒற்றரும் இன்று நம் நாட்டுக்கு வருதற்குரியர்: அவருள் எவரேனும்

வரின், இந்தச் சபைக்கே அழைத்து வருமாறு ஆணையிட்டிருக்கின்றேன்.

முதல் அமைச்சர்:—அரசரே, முன்னே நம் நாட்டுக்கு அடங்கியிருந்து இப்பொழுது சுயேச்சை நாட்ட முயன்றுகொண்டிருக்கும் சேரரும் சோழரும் தம் முன்னோராகிய பாண்டிய மன்னரிடம் நட்புப் பூண்டிருந்தவரே. ஆகையால் முதலிலேயே நான்காவது உபாயத்தை நாம் அனுசரியாமல் முதல் உபாயத்தால் அவர்களை நம் வசப்படுத்தப் பார்த்தலும் நன்று. ஏனெனில், நம் உள் நாட்டு முயற்சியில் நாம் இவ்வாறு சிரமப்படுகிறோம் என்பதைக் கேட்பாராயின் நமக்குக் கீழ் அடங்கித் திறையளந்து வரும் வடநாட்டு ஆரிய மன்னர்கள் நமது ஆளுகையை மதியாமல் விலகிக்கொள்வதோடு நம்மை எதிர்க்கவும் தொடங்குவார்கள். தவிரவும், ராஜ்யாதிகாரம் ஏற்றுக்கொண்டு இவ்வளவு சீக்கிர காலத்திலேயே தாமாகப் பெரும்போர் ஒன்றைத் தொடங்கிவிடலு மாகாது.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

என்பது பொய்யா மொழி. அவர்களாகப் போர் தொடங்கி நம்மை எதிர்க்க வருவாராயின், நாம் நம் நாட்டின் உயர்வையும் நமது குடியின் உயர்வையும் பாதுகாக்கும் பொருட்டு நம் அரண் காவலுக்கு உதவுமாறு தாங்கச் சித்தமாயிருக்க வேண்டுவதே.

நெடுஞ்செழியன் :—அமைச்சர் தலைவர் கூறுவதே என் கருத்துமாம். நாமாகப் போர்க்குச் சென்று அவர்களை அடக்கி அடிப்படுத்த வேண்டுவது நியாயமே

யாயினும் நம் தற்கால நிலைமையில் நாம் ஒன்றும் பதற்ற மாகச் செய்வதற்கில்லை. சேனாதிபதியார் படைஞர் போர்க்குப் புறப்படச் சித்தமாயிருக்கின்றார் என்று கூறு வராயினும் எல்லாவித விளைவையும் எதிர்பார்த்து நாம் இங்குத்தானே சித்தமாய் இருப்போம். சேரரும் சோழ ரும் பிற சிற்றரசரும் யான் சிறியவன் என்று எண்ணியே போர் தொடங்குவர். அவர் நாட்டுள்ளே இருக்கும் போது அவர்க்கு இருக்கக்கூடிய வலிமை நம் நாட்டுக்கு வருங்காலையிற் சிறிது குறையும். சிங்கத்தை அதன் முழையிலேயே தாக்குவது போல அவர்கள் இங்கு வரும்போது நமக்குக் காலமும் இடமும் உதவியாம்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

என்பது அறநெறியன்றோ?

"நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற."

என்ற நீதியும் நமக்குப் பொருந்தும்.

புலவர்:—இப்பொழுது அரசர் கூறுவது மிகவும் பொருத்தமாம். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிய அறநெறியையும் அரசியல் முறையையும் பின் பற்றி வாழ்வார் தம் வாழ்வில் தோல்வியும் பெறுவரோ?

சேனாதிபர்:—அரசர் பெருமானே, இன்னும் ஒற் றர் வந்திலரே! அவர்கள் வந்த பிறகு நாம் என்ன ஆலோ சனை செய்யவேண்டியிருக்குமோ? இருப்பினும், இங் கே இப்பொழுது தீர்மானம் ஆனதற்கு இணங்க, நமது நாட்டுப் படைஞர் அரண்காவலுக்கு உதவுமாறும் போர்

நேரின் சித்தமாயிருக்குமாறும் வேண்டுவன செய்கின்றேன்.

அமைச்சர்:—ஒற்றர் வந்த பின்னர் அரசரிடம் வந்து நம் கருத்துக்களைத் தெரிவித்துப் பிறகு ஆவன செய்வோம்.

புலவர்:—அவ்வாறே ஆகுக. இனி நாம் விடை பெறலாமே!

நெடுஞ்செழியன்:—இனி நீங்கள் விடை பெற்றுக் கொள்ளலாம். வேண்டும்போது அரண்மனைக்கு அழைப்பிக்கின்றேன்.

அதனுடன் சபை கலைந்து அவரவர் தத்தமக்குரிய இடங்களுக்குச் சென்றனர்.

# II

"செய்தக்க வல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

**கா**லமும் கருவியும் இடமும் பொருளும் வினையும் ஆகிய ஐந்தையும் நன்கு சிந்தித்து வேண்டுவன செய்வோரே அறிவுடையோராவர். அரசன் ஒருவன் தன் குடிகளின் அன்பைப் பெறும் பொருட்டும், தன்னைப் பகைத்தாரது வலிமையை அடக்கும் பொருட்டும் செய்தற்குரிய செயல் காலமும் இடமும் அறிந்து நிறைவேற்றப்படின், மிகவும் எளிதாய் முடிவதோடு எதிர் பார்த்ததைக்காட்டிலும் அதிக நன்மையை விளைவிக்கும். அச்சந்தர்ப்பம் தவறிவிட்டால், பிறகு என்ன செய்தாலும் எண்ணிய எண்ணம் நிறைவேறாது இடர்ப்பட நேரிடும். இவ்வுண்மையை யுணர்ந்த நெடுஞ்செழியன் முன்னத்தியாயத்திற் கூறிய தீர்மானங்கள் நிறைவேறிய பிறகு, இரவிலே தன் முன்னோர் வழக்கம் போல மாறு வேடம் பூண்டு நகரி சோதனை செய்து வருவா னாயினன்.

நள்ளிராப் பொழுதில் அருகில் நிற்பார் இன்னார் என அறியலாகா இருளில் அவன் சஞ்சரித்துக்கொண்டு வெளி வீதிகளின் எல்லையைச் சுற்றி வந்துகொண் டிருந்தான்; யாரோ இருவர் மெல்ல நடந்து வருவதாய் உணர்ந்தான்; அவர் அறியா வண்ணம் இருளிலே

நடந்து, அவர் அருகில் நெருங்கினான். ஒருவர், சடைமுடி வளர்த்து விபூதி உத்தூளனம் செய்துகொண்ட ருத்திராக்ஷதாரியாய் இருந்தார். மற்றொருவர், ஒரு சாதாரண நகர் காவலனைப்போல இருந்தார். அரசன் அயல் நாட்டு வியாபாரிபோன்று வேடம் பூண்டிருந்தானாகையால், அவர் அவனை இன்னார் என அறிந்திலர். ஆயினும், அவன் அவர்களை நன்கு அறிந்துகொண்டான்; அவர்கள் கூடவே சிறிது தூரம் சென்றான்; வேறோரிடத்தில் பண்டார வேடம் பூண்ட ஒருவரையும் சாமானிய நகர வாசியைப்போன்றிருந்த ஒருவரையும் கண்டான்; அந்நால்வரும் செல்லும் திசையை நோக்கினான்; அரண்மனையை நோக்கிப் போவதாக அறிந்துகொண்டான்; உடனே அவர்கள் அறியா வண்ணம் வேறொரு சுருக்கு வழியால் அரண்மனையிற் புகுந்து, அந்தரங்க அறை யொன்றை அடைந்தான்.

அந்நால்வரும் தனித்தனியே அரண்மனை வாயிலை அணுகினர். வாயில் காவலன் அவர்களை இன்னாரென அறியாமையால், உட்புகவொட்டாது தடுத்தான். ஒவ்வொருவரும் அரசனால் தமக்குத் தெரிவிக்கப்பட்ட மறை மொழியைக் கூறித் தம்மிடமுள்ள மறைக் குறியாகிய நக்ஷத்திரம்போன்ற ஒரு பொருளைக் காட்டினர். வாயில் காவலன் அதைக் கண்டதும் அவர்களை உள்ளே விட்டான். எல்லாரும் புகும் பெருவழிகளால் உள்ளே புகாது தமக்கென அமைந்த சிறு வழிகளாலும் நுழை வழிகளாலும் நடந்து சென்று, அரசனது அந்தரங்க அறை அடைந்தனர்.

ஆண்டில் இளையனாயினும் அறிவிலும் ஆண்மையிலும் அரசியற்றிறத்திலும் முதியோரினும் சிறந்தவனா

கிய நெடுஞ்செழியன், தனது மாறுவேடத்தைக்களைந்து சாமானிய உடையொன்றணிந்து, அங்கு வந்து அமர்ந் திருந்தான். சித்திர வேலைகள் மிக்கதொரு கட்டிலில் அவன் சாய்ந்திருக்க அவனுக்கு முன்னே பதின்மர்க்கு மேல் அமரத்தக்க ஆதனங்கள் சில அமைந்திருந்ததால் வருவோரை வரவேற்க அதுவே தக்க விடமென எண்ணி உறக்கத்தை மறந்து வலப்புறமும் இடப்புற மும் உயிர் ஓவியம் போன்றமைந்திருந்த தன் முன்னோர் சித்திரங்களைப் பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந் தான். சிறிது பொழுதில் அவ்வறைக்குள் வருவதற்கு மறைவாக அமைக்கப்பட்டதொரு கதவு திறந்தது. ஒருவர் பின் ஒருவராக நால்வர் நுழைந்தனர்.

நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று, அவரவர்க் குத் தக்க ஆதனங்களிலே அமருமாறு கையால் சமிஞ் ஞை செய்தான். நால்வரும் அரசனை உரிய முறையால் வணங்கி ஆதனங்களிலே அமரக் கூசி நின்றனர். அரசன் மறுமுறையும் அவர்களை இருக்கச் சொன்னதும் இருந் தனர். பிறகு பின் வரும் ரஹஸ்ய ஸம்பாஷணை நிகழ்ந்தது:

நெடுஞ்செழியன்:—அன்பர்களே, நீவிர் சென்றிருந்த நாடுகளிலே பல அபூர்வங்களைக் கண்டிருக்கலாம்; சில செய்திகளைக் கேட்டும் இருக்கலாம். அவற்றை யெல் லாம் நம் நாட்டின் நலத்தைக் கருதி இங்கே வெளியிட வேண்டுகிறேன்.

முனிவர்:—அரசர் பெருமானே, என்னைத் தாங்கள் இப்பொழுது காணும் வேடத்தோடு நான் சேர நாட்டி லே ஒற்றாடியிருந்தேன். கண்ட செய்திகள் சில; கேட்

டன பலவாம். சேரன் என்னை என் வேடத்துக்கேற்ப மதித்து ஆதரித்திருந்தான். அவனது அந்தரங்க முயற்சிகள் சில என்னிடம் கூறியதுமுண்டு. சமீபத்தில் அங்குச் சோழனும், எழினி, எருமையூரன், போருநன் முதலிய குறும்பினர்களும் வந்து ஒன்று கூடிச் சில ஆலோசனைகள் செய்தனர். அந்த ஆலோசனை இன்னது என நான் அறிய வியலாது போயினும், மறு நாள் நாடெங்கும் வெளியானதொரு விளம்பரத்தால், அவர்கள் தீர்மானம் இன்னதென்பதை அறிந்தேன். இதுவே சேரவரசன் தன் நாடெங்கும் பரப்பிய விளம்பரமாம்: இப்பத்திரிகையில் அவன் கையொப்பமிட்டுப் பல பிரதிகள் செய்வித்து, அமைச்சர்களைக் கொண்டு தன் நாட்டெல்லைக்குட் பரப்பினன். யானும் வெகு ஜாக்கிரதையாகப் பிறர் அறியா வண்ணம் ஒரு பிரதி எடுத்துக் கொண்டு தங்களிடம் தெரிவிக்கவிரைந்தோடி வந்தேன். இந்த விளபரத்தைத் தாங்கள் பார்ப்பீர்களாயின் நான் சொல்ல வேண்டிய செய்திகள் எல்லாம் தாமாகவே விளங்கும்.

பண்டாரம்:—அரசர்க்கரசரே, யான் சோணாடு சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட விசேஷங்கள் சில: நாடெங்கும் கொல்லர் உலைகளிலெல்லாம் வாள் வேல் என்ற ஆயுதங்கள் செய்யப்படுகின்றன. காட்டோரங்களில் சிறு குடிசைகளில் அமர்ந்திருந்து சில தொழிலாளிகள் வில்லும் அம்பும் செய்கின்றார்கள். ஆகார திரவியங்கள் கிரமமான அளவுக்கு மீறி அரண்மனையிற் சேகரிக்கப்பட்டு இரவிலே மறைவாக எங்கோ செல்கின்றன. அவற்றையும் என் உதவியாளரைக்கொண்டு

சோதிக்கச் செய்தேன். எல்லாம் நம் நாட்டெல்லையை நோக்கி வருவதாய் விளங்குகிறது. இராக் காலங்களில் ஆயுதங்கள் ஒன்றோடொன்று உராயும் ஓசையானது அரண்மனையை யொட்டிய சில பாகங்களிலிருந்து கேட்கிறது. இவற்றை யெல்லாம் சிந்தித்துப் பார்த்தால், சோழ நாட்டார் நம்மோடு பெருத்ததொரு போர் விளைக்கக் கருதியிருப்பதாகவே விளங்கும். இவ்வளவுக்குமேலே ஒரு சொல் கேட்டேன்: இங்கே அதனைச் சொல்லவும் எனக்கு நாவெழவில்லை!

**நெடுஞ்செழியன்:**—அஞ்சாது கூறலாம். எதுவாயினும், கேட்கச் சித்தமே.

**பண்டாரம்:**—மன்னர் மன்னரே, யான் உண்மை உணரும் பொருட்டு இவ்வேடத்தோடு ஒரு நாள் சோணாட்டுத் தலைநகரின் பெருவீதி யொன்றில் பிச்சை யேற்பான் போலப் பாடல் பாடி மெல்ல நடந்துகொண்டிருந்தேன். சோழ நாட்டு மந்திரியார் மனையகத்தில் இருவர் இருந்து பேசிக்கொண்டிருந்தனர். மறைவில் இருந்து கவனித்துப் பார்த்தபோது ஒருவர் அமைச்சர் என்றும் மற்றொருவர் படைத்தலைவர் என்றும் விளங்கியது. அவர்கள் பேசிய செய்தி இதுவே: சோழரும் சேரரும் இன்னும் ஐந்து சிற்றரசரும் சேர்ந்து, அடுத்த வாரத்தில் நம் நாட்டுக்கு வந்து போரியற்றத் துணிந்திருக்கிறார்களாம். பாண்டிய வேந்தராகிய தாங்கள் ஆண்டிலும் அனுபவத்திலும் ஆண்மையிலும் அறிவிலும் மிகவும் சிறியராய் இருக்கின்றீர்களாம். ஆகையால் தங்களை எளிதில்வென்று சோணாட்டுச் சிறையிலே அடைத்துவிட்டு, நம் நாட்டைத் தம் நாட்டோடு

சேர்த்து விடலாம் என்பதாகப் பேசிக்கொண்டனர். சேரன் நாட்டிற் பங்கு கேளாவண்ணம் அவனை நம்மோடு முன்னே தனித்துப் போர் செய்ய அனுப்பிப் பின்னிருந்து பார்ப்பதற்கும் துணிந்திருப்பதாய்க் கூறிக் கொண்டனர். இதைக் கேட்டதும் நான் தங்களுக்கு இச்செய்தியைக் கூறுவதற்காக ஓடோடி வந்தேன். சோழ நாடெங்கும் ஒரு விளம்பரம் பரப்பிக்கொண்டு வருகிறார்கள். அதிலும் இப்பொழுது நான் தெரிவித்த செய்திகளே உள்ளன.

நெடுஞ்செழியன்:—நம் பகைஞர் முயற்சி இந்நிலையில் உள்ளதா! இனி உங்கள் செய்திகள் என்ன?

நகர்காவலன்:—அரசர்பிரானே, நான் இந்நாட்டுள்ளே நுழைய உதவுமாறு இவ்வேடம் பூண்டுகொண்டேன். சாதாரணமான வியாபாரியைப்போல வண்டிகளிலே சரக்குக்களைப் போட்டுக்கொண்டு சிற்றரசர் நாட்டுக்கெல்லாம் போவது என் வேலை. இப்பொழுது இங்குச் சாமானிய நகர வாசியைப்போல வந்திருக்கும் நண்பர் எனக்கு உதவியாய் இருந்து அந்நாடுகளில் வேலை செய்து வருகின்றார். நாங்கள் அந்நாடுகளிலே சஞ்சரிப்பது மிகவும் சிரம சாத்தியமே. எங்களை ஒற்றர் என்று அறிந்தால், திரும்பிவரா வழிக்கு அனுப்பிவிடக் கூடிய சகல சௌகரியங்களையும் அந்நாட்டார் செய்து வைத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வளவுக்கும் இடையில் எங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் நாட்டுக்கே அர்ப்பணம் செய்துவிட்டோம் என்ற மனவுறுதியால், பல மறைவிடங்களிலும் தக்க வுதவிகளால் ஆராய்ந்தோம். நாங்கள் சென்ற சிறு நாட்டுப் படை

கள் போர்க்கு ஆயத்தமாக நம் நாட்டை நோக்கிப் புறப் பட்டு வந்துகொண் டிருக்கின்றன. அங்கும் விளம்பரங் கள் பரவியுள்ளன. விளம்பரங்களில் சொல்லும் முக்கிய விஷயம், 'பாண்டிய மன்னன் இளைஞ னாகையால், அவனை இப்பொழுதே எதிர்த்து எளிதில்வென்று அவன் நாட்டைக் கைப்பற்றுவோம்,' என்பதே. இச்சொல்லைக் கேட்டல் எங்கள் செவிகளைச் சுட்டதாயினும், அவசிய சந்தர்ப்பத்தில் மனக்கருத்தை வெளியிடா முகத்தோற் றத்தோடிருத்தல் எங்கள் உத்தியோகத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்று ஆகையால், அவ்வாறு அடங்கியி ருந்து, சமயம் பார்த்து இங்கு வந்தோம்.

நகர வாசி:—அரசர்க்கரசரே, என் நண்பரே நான் சொல்லற்குரியவற்றையும் சொல்லிவிட்டார். இனி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

நெடுஞ்செழியன்:—ஒற்றர்களே, நீங்கள் அறிந்து வந்த செய்தி என் மனத்தில் ஒருபால் கோபத்தையும் மற்றொருபால் மகிழ்ச்சியையும் எழுப்புகின்றது. நீங்கள் கொண்டு வந்த விளம்பரங்களின் பிரதிகள் என்னிட மே யிருக்கலாம். சேரரும் சோழரும் நம் முன்னோரி டம் வேண்டிய உதவி பெற்றுக்கொண்டு நட்புப் பா ராட்டியிருந்ததை மறந்தார் போலும்! சிற்றரசுகளுக்கும் எவ்வளவு துணிவு பிறந்துவிட்டது! இறைவன் செயல் இன்னதென நாம் அறியோம். ஆயினும், அவன் அருள் அறநெறிக்கு மாறாக நடப்பார்க்கு வாயாது என்பதே நாம் அறிந்ததாம். இந்நாள்வரை நம் அரசுக்குக் கீழ் அடங்கியிருந்ததால் இவர்கட்கு வந்த இழிவென்னை? நம் ஆதிக்கத்தினின்று விலகியதோடமையாமல், நம்மை

வென்று அடிப்படுத்தக் கருதியிருக்கும் எண்ணத்தால் இவர்க்கு வந்த உயர் வென்னை? எது விளையினும் விளைக! நம் நாட்டின் பெருமையைக் காக்க வேண்டுவது நம் கடமையேயன்றோ? இப்பொழுது இரவு அதிக நேரம் ஆய்விட்டது. நீங்கள் உங்கள் இல்லங்களுக்குச் சென்று சிரம பரிகாரம் செய்துகொள்ளுங்கள். நாளைக்காலையில் நம் நாட்டுப் பெரியோர் பலரும் கூடியிருக்கும் இராஜ சபையில் இதனைப்பற்றி நான் சில அபிப்பிராயங்கள் தெரிவிக்க நேரிடும். அச்சமயம் நீங்களும் அங்குச் சாமானிய நகரவாசிகளைப்போல வந்திருந்து இனி நான்செய்ய உத்தேசித்திருக்கும் செயலைத் தெரிந்துகொள்ளலாம். முனிவரே, இனி நீர் உமது வேஷத்தைக் களையலாம்; பிறகு வேண்டும்போது வேறு வேஷம் போட்டுக் கொள்ளலாம். நீர் வயதிற் பெரியவராயினும், உடம்பின் தளர்ச்சியைப் பாராட்டாது, நாட்டின் பொருட்டு இவ்வரும்பணி யியற்றியதற்காக உமக்கு வந்தனம் செலுத்துகின்றேன். மற்றவர்கள் நான் தனித்தனி வந்தனம் செலுத்த வேண்டும் என்று எதிர் பார்க்கமாட்டார்களாதலால் எல்லோர்க்கும் ஒப்ப வந்தனம் கூறி விடைகொடுக்கின்றேன்.

ஒற்றர் அனைவரும் பிறகு தாம் வந்த வழியே வெளியேறினர். நெடுஞ்செழியன் அந்தரங்க அறையில் தனித்திருந்தான். அவன் உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள் எண்ணிலவாயின. அவன் தனக்குள்ளே பின் வருமாறு பேசிக்கொண்டான்:

"எம்பெருமானே, எல்லாம் வல்லவன் உன்னையல்லாமல் யாரே? யான் சிற்றறிவன். நீ முற்றறிவினை. என் மனத்

தில் உள்ள எண்ணங்கள் அனைத்தையும் யான் அறியேனாயி னும், நீ அறிவாய் அன்றோ ? உனது உண்மைத் திருவருள் வாய்க்கப்பெற்றிருந்த என் முன்னோர் எனக்கு வைத்த பிறப் புரிமை யென்ன ? தமிழ் நாட்டின் தலைமையும், பிறநாடுகளின் ஆளுகையும், தமிழ் மொழித் திருப்பணியும், பண்டையர் வழி யில் வந்த பெருமையும் அல்லவோ ? பண்டையர் வழியில் வந்தேன் என்று யான் கூறிக்கொள்வது எவ்வாறு ? இமயத் திலே கயல் பொறித்ததும் கங்கை கொண்டதும் ஆரியரைப் பணிவித்ததும் யவனரை வாயில் காவற்கு நியமித்ததும் என் முன்னோர் செயல் அன்றோ ? இத்தகைய பெருமை படைத்த குடியிற் பிறந்த என்னிடம் தற்காலம் என்ன குறை கண்டு இவர் எல்லாம் எதிர்க்கத் தொடங்கினர் ? நான் அரசுரிமை யேற்றுக்கொண்ட இந்த இரண்டாண்டுகளுக்குள் எவ்வளவு உண்மைகளை உணரத் தொடங்கியுள்ளேன்! இந்நாட்டில் வீரம் இல்லையா ? ஆண்மை யில்லையா ? முயற்சி யில்லையா ? ஊக்கம் இல்லையா ? யான் வயதிற் சிறியவனாய் இருப்பதால், என்னிடம் இக்குணங்கள் இல்லாமற் போமா ? சேரர்க்கும் சோழர்க்கும் நான் செய்த தீங்கு என்ன ? படைத் தலைவர் உடனே போர் செய்யப் புறப்படலாம் என்று நேற்றுக் கூறி னர். புலவரும் அமைச்சரும் பதற்றமாகாது என்று கூறிய தால், அடங்க நேரிட்டது. என்ன விருப்பினும், நம் முயற்சி யை நாம் செய்வோம். அவர்கள் எழுவரும் சேர்ந்து வரினும், வருக; ஒருவர் ஒருவராய் வரினும், வருக. நாமாக நாட்டி னின்று வெளியேறி முதற்போர் செய்யப் போவது நமக்குப் பெருமையே யாமாயினும், நம் ஆணை நம்மை மதியாது ஒரு வர் முற்றுகையிட வரும்போது அவரை வென்று நாட்டைக் காப்பதும் பெருமையிற் குறைந்ததன்று. இதுவே எனது கன்னிப் போர். இறைவன் திருவருட் செயலால் எனது கன்னிப் போரே பெரும்போராய் மூண்டது. பல்யாகசாலை

முதுகுடுமிப் பெருவழுதியும், உக்கிரப் பெருவழுதியும் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனும், பிற பெரியோர்களும் தாங்கிய செங்கோன்மை என் கையகத்த தாயிற்று. அவர்கள் முடி என் தலையகத்ததாயிற்று. அவர்கள் வழி வந்த பெருமை என் உடம்பினுள் ஊறுகின்றது. அவர்கள் நாட்டி வைத்த தலைமையும் பெருமையும் என்னளவில் வந்து குறையுற வேண்டும் என்று இறைவன் திருவருள் இருக்குமோ! முயற்சி செய்தார்க்கன்றே முன்னவன்றன் முழுமைத் திருவருட் செல்வம் கைவரப் பெறும்! என் முன்னோர் குடை நிழல் எங்கெல்லாம் பாவியிருந்ததோ, அங்கெல்லாம் இன்றும் பாண்டியர் குடைநிழல் பாவவேண்டுவதே. என்றால் அதற்கு ஒரு குறையும் நேரிடாமல் நான் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இறைவன் திருவருள் கூட்டி வைக்க.''

அவன் இவ்வாறு தனக்குட்பேசியதும் மனவமைதி பெற்றான்; உடம்பின் சிரமம் தீரும்படி சிறிது இளைப்பாறும் பொருட்டு அரண்மனையின் மற்றொரு பக்கம் உள்ள பள்ளியறை சென்று படுத்துக்கொண்டான். அந்தரங்க அறைக்கும் பள்ளியறைக்கும் வரப் போக வுள்ள வழி பரம்பரையாய் அரசர்க்கே அறிவிக்கப்படுவதாதலால், மற்றவர்க்குத் தெரியாது. அரசன் பள்ளியறையில் துயில்கின்றான் என்று காவலர் எல்லாரும் நினைத்து நிம்மதியோடு இருக்கையில், அவன் நகரி சோ.தனை செய்துகொண் டிருப்பான். நெடுஞ்செழியன் அரண்மனையில் உள்ள இத்தன்மையான சௌகரியங்களை மிகவும் பயன்படுத்தி வந்தான். ஒற்றரோடு பேசும் அறை இருக்கும் இடம் அமைச்சர்க்கே தெரியாதென்றால், வேறு சொல்வானேன்?

# III

காலை ஞாயிறு எழுந்தது. கமலங்கள் மலர்ந்தன. குமுதங்கள் குவிந்தன. திருக்கோயிலிலும் அரசன் கோயிலிலும் காலை முரசம் இயம்பியது. பறவைகளும் மிருகங்களும் தமக்கு இயல்பாய் உள்ள முயற்சியைச் செய்யலாயின. மக்களினத்தாரும் தத்தம் நிலைக்கேற்ற பணிகளைப் புரியக் கருதினராய், அவரவர் மனப்பான்மைக் கேற்றவாறு கடவுள் வழிபாடு செய்து தொடங்கலாயினர். அரண்மனையிலிருந்து பல சேவகர் புறப்பட்டு நகரிற் பல விடங்களிலிருந்தும் அரசர் ஆலோசனை சபைக்கு வருதற்குரிய நல்லோரை அழைத்து வருவாராயினர். அரண்மனையில் உள்ள பெரிய சபா மண்டபம் நாற்புறங்களிலும் பெரிய காவல்களையுடையதாய்ப் பல்லாயிர மக்கள் வந்து அமர்தற்குரிய இடம் உடையதாய் விளங்கியது.

அரசனாணை பெற்ற பலரும் தத்தம் நிலைக்கேற்ற உடைகளை அணிந்து, தமக்கென அமைந்த ஆதனங்களில் வந்து அமர்வா ராயினர். ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தாரும் அரசன் அமரும் அரியணைக் கருகில் தத்தம் நிலைமைக்கேற்றவாறு அமர்ந்திருந்தனர். அமைச்சர் தலைவரும் மாங்குடி மருதனார் முதலாகிய புலவரும் தமக்கென அமைந்த இடங்களில் அமர்ந்தனர். வருதற்குரியார் அனைவரும் வந்து அந்தச்

சபா மண்டபம் நிரம்பியதும், அரசன் அரியணைக்குப் பின்பால் மறைவாய் அமைந்திருந்த சில வாத்தியங்கள் முழங்கின. அதுவே அரசன் சபா மண்டபத்தில் வந்து புகுதற்கு அறிகுறியாம். ஆகையால், அங்கிருந் தார் அனைவரும் எழுந்து நின்று,

"வாழிய வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழிதோ றுலகங் காக்க.'

என்று ஒரு முகமாக வாழ்த்துக் கூறினர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் வந்து அரியணைமீது அமர்ந்தான். புலவரும் அமைச்சரும் எழுந்து நின்று மனமார வாழ்த்தினர். பிறகு சபை தொடங்கியது.

அமைச்சர் தலைவர்:—பாண்டிய மண்டலாதிபதி, பாரத தேச மகிபதி, தமிழ்த் தெய்வத் திருத்தொண்டர், தலைவர் முதலிய விருதுகள் தாங்கிய மன்னர் பிரானே, தமிழ் நாட்டுக் குடி மக்களுள் தலைவர்களே, இன்று காலையில் நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கும் காரணம் யாதெனை அறிய உங்களுக்கு ஆவல் இருப்பது இயல்பே. இங்கு நாங்கள் வருவதற்கு முன் அரச மந்திராலோசனை சபையில் சில விஷயங்கள் பேசப் பட்டன. அவற்றை உங்கள் அனைவர்க்கும் அறிவித்து உங்கள் சம்மதம் பெறவே இந்தப் பிரஜா மண்டல மஹா சபை கூட்டப்பட்டது. சமீப காலத்தில் நம் நாட்டின் பெருமையைக் குலைக்கும் கருத்தோடு அயல வர்களால் சில யோசனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம் ஒற்றர்களால் அவ்விஷயங்கள் நம் அரசர் பிரான் செவிக்கு எட்டின. அதனால், அவர் மிகவும் மனஸ்

தாபம் அடைந்திருக்கிறார். அவர் செய்திருக்கும் தீர்மானம் என்ன என்பதை அவர் வாய்மொழியாலேயே நாம் அனைவரும் அறிவோம்.

புலவர் தலைவர்:—அவ்வாறே ஆகுக. எல்லோரும் அமைதியாய் இருந்து செவி சாய்க்க வேண்டுகிறேன்.

நெடுஞ்செழியன்:—அறிஞர்களே, அமைச்சர் தலைவரே, புலவர் பெருமக்களே, இப்பொழுது யான் குடிகளுட் பெருமக்கள் அனைவரும் நிறைந்திருக்கும் இப்பேரவையில் தெரிவிக்க விரும்பும் விஷயம் ஒன்று உண்டு. அஃது எனக்கு மிகவும் மன வருத்தம் தருவதாயினும், உங்கள் முன்னிலையில் கூறியதன் பிறகே யான் இன்னது செய்வது என்று தீர்மானிக்க வேண்டியவனாய் இருக்கிறேன். பிறந்த நாட்டிடத்தும் அந்நாட்டையாளும் அரசர் குடியினிடத்தும் சிறந்த பக்தி பூண்ட உங்கள் அபிப்பிராயம் அறியவே இந்தச் சபையைக் கூட்டினேன். என் முன்னோர்களால் ஆளப்பட்ட இந்நாட்டில் யான் தலைமை வகிப்பதும், என் முன்னோர்களால் அடக்கப்பட்ட நாடுகளில் யான் திறைபெறுவதும் சிலர்க்குப் பொறுக்கவியலாதனவாய்த் தோன்றுகின்றன. அவர்கள் தங்கள் படைப் பெருக்கின் அளவும் ஆண்மையின் சிறப்பும் நம் நாட்டில் உள்ளவற்றைக்காட்டிலும் அதிகம் என்றுஎண்ணியிருக்கின்றார்கள். எழுவர் ஒன்று சேர்ந்து என்னை வெல்லக் கருதியிருப்பதாய் அறிகிறேன். அவர்கள் என்னிடம்கூறும் குறை யென்னவெனில், யான் இளைஞனாய் இருக்கின்றேன் என்பதே. என்னை எதிர்க்க வந்திருக்கும் எழுவரில் இருவர் தலைவர்கள். அவர்

சேரரும் சோழருமே. சேரர் தம் முன்னோர்கள் இளமையிலேயே நாடெல்லாம் வென்று அடக்கியாண்ட சரிதையை மறந்தாரோ! சோழர் தம் மூதாதையாகிய கரிகாற் பெருவளத்தான் சரித்திரத்தை மறந்தாரோ! அச்சோழன்,

"இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வரவோன்"

எனவும்,

"உரைமுடிவு காணன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

எனவும் புகழப்படுவதை இங்குள்ளார் பலரும் அறிவீர்கள். 'இளமையிலே அறிவு நிரம்பப் பெறுதல் ஆண்மை நிறையப் பெறுதல் அரசியற்றிறம் அமையப் பெறுதல் சேரர் சோழர் குடிகட்கே யுண்டு; பாண்டியர் குடிக்கு இல்லை,' என்று எண்ணிக்கொண்டனரா? இவ்விருவருக்கும் உதவியாய் என்னை எதிர்க்க ஒன்று சேர்ந்த ஐவர் சிற்றரசர் ஆண்மையை என்னென்பேன்! அவர் நம் நாட்டுப் படையில் படைஞராய்ச் சேர்ந்து போர் இயற்றவும் தகுதியில்லாத தம் சிறுமையை அறியாததேனோ? இவ்வெழுவரும் என் நாட்டில் என் நகரில் என்னை யெதிர்த்துச் சிறைசெய்யக் கருதி யிருக்கின்றனராம். இவர்கள் எண்ணம் என்ன! எனக்கு இதற்குமேற் பேசத் தோன்றவில்லை. மனவெழுச்சியின் மிகுதியினால் என் வாயிற் புறப்படும் சொற்கள் செய்யுளாய் எழு

கின்றன. அன்பர்களே, இதுவே நான் கூறும் வஞ்சினம். செவி சாய்க்க:

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்!
இளையன் இவன்என வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்
றுறுதுப்(பு) அஞ்சா(து) உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ(டு)
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக.
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே."*

"இனியான் அதிகம் சொல்வதற்கில்லை. யான் புரிய நேரிட்டிருக்கும் இக்கன்னிப் போர்க்கு உங்கள் ஆதரவை எதிர் பார்க்கிறேன்."

நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்தான். சபையோர் அனைவரும் ஒரே குரலாகத் தமது மனத்தின் உருக்கம் விளங்க,

* புறநானூறு - செய்யுள், 72.

"எங்கோ வாழிய! எமைப்புரந் தருள்க!
எழுவர் பகைப்பினும் எளிதினில் வெல்க!
வாழிய வூழி! வாழிய
பாண்டிய நாடு பண்போடு பொருந்தவே!''

என்று வாழ்த்துக் கூறினர்.

சிறிது பொழுதில் சபை அமைதியடைந்தது. புலவர்குழுவின் நடுநாயகமாய் விளங்கிய மாங்குடிமருதனார் எழுந்தார். சபையோ ரனைவரும் அவர் முகத்தையே பார்ப்பா ராயினர். அவர் பின் வருமாறு பேசினர்: "அரசர் பிரானே, அறிஞர்களே, அமைச்சர்களே, ஆன்றோர்களே, இந்த மகா சபை கூட்டப்பட்ட காரணம் நாம் முன் அறியோம்; இப்பொழுது அறிந்தோம். நம் அரசர் சொல்லிய செய்தியைக் கேட்டதும் மிகவும் வயது முதிர்ந்தவனும் போர்ப் பயிற்சி சிறிதும் பெறாதவனும் ஆகிய எனக்கே நம்நாட்டின் மானத்தைக் காக்கும் பொருட்டுப் போர் செய்ய எழலாம் என்று தோன்றுகிறது. தமிழ் மக்களாகிய பரம்பரை வீரர்களாகிய உங்களுக்கு என்ன தோற்றம் உண்டாகும் என்று நான் கூற வேண்டுமோ? இன்று நம் அரசர் பெருமான் இந்த மஹா சபையின் முன்பு, மனவெழுச்சியால் தூண்டப்பட்டுப் பாடிய பாடல் நாம் அனைவரும் நன்கு கவனிக்கத் தக்கதே. அதன் கருத்து இன்னதென முதலிலே சுருக்கிக் கூறுகிறேன் :

" 'இவனது நாட்டைச் சிறப்பித்துப் பேசுபவர் நம்மாற் சிரிக்கத் தக்கார். இவன் இளையன் என்று யான் மனம் வெறுப்பச் சொல்லி, மணிகள் இரட்டும் யானையும் தேரும் குதிரையும் படைப் பயிற்சி சிறந்த

வீரரும் உடையேம் யாம் என்று எண்ணி எனது ஆண்மைக்கும் வலிமைக்கும் அஞ்சாது சினம் பெருகிப் புன்சொற்கள் சொல்லிய வேந்தரை அவர் தாங்கற்கரிய பெரும்போரின்கண்ணே சிதறப் பொருது, அவாது போர் முரசங்களோடு அவரைச் சிறை செய்யேனாயின், எனது குடை நிழலில் வாழ்வார் எனது அரசின் கேட்டால் இங்கு வாழவழியின்றிச் சென்று வாழவும், வேறு நிழல் காணாது எம்முடைய வேந்தன் கொடியன் என்று கருதிக் கண்ணீர் சிந்திப் பழி தூற்றும் கொடுங்கோலையுடையேனாகுக. உயர்ந்த தலைமையும் சிறந்த கேள்வியும் உடைய மாங்குடி மருதன் முதலிய புலவர், பாடாது என் நிலவெல்லையை விட்டு நீங்குக. என்னாற் காப்பாற்றப்படும் கேளிர் துயரமுற இரப்போர்க்கு ஈய லாகாத வறுமையை யான் அடைக.'

"தமிழ் நாட்டுத் தலைமக்காள், இச்செய்யுளில் உள்ள வஞ்சினத்தைச் சிறிது கவனியுங்கள்: 'குடிபழி தூற்றுங் கோலேனாகுக' என்பதொன்று; 'புலவர் பாடாது வரைக' என்பதொன்று; 'யான் இன்மையுற' என்பதொன்று. இம்மூன்றும் மூன்று மணிகளாம். சிறு சொற் சொல்லிய சிறுமையுடையாரைச் சிறை செய்யாதொழியின், இம்மூன்று நிலைகள் தனக்கு வருக என்ற பெருமையைப் பாராட்டுதல் என்னளவில் அமைவதன்று. என்னையோர் பொருளாக்கி எத்துணையோ நல்லிசைப் புலவர் வாழ்ந்து வரும் இந்நாட்டில் நம் அரசர் பிரான் சூளுறவுக்குப் புலவருள் தலைவனென்று என்னைக் குறித்தனர். அவ்வுரையை என்னிடம் கொண்ட அபிமானத்தாற் கூறியதாகக் கொள்கிறேன். என்னினும் புலமை

சிறந்தார் எண்ணிறந்தார் உளர் என்பதை யானே அறிவேன். இது நிற்க. அரசர் பெருமான் புலவர் பெருமக்களிடம் கொண்டிருக்கும் உண்மை யன்பைத் தெரிவிக்க அமைந்த இடமும் காலமும் பொருளும் என் உள்ளத்தை உருக்குகின்றன. நம் அரசர் பெருமான் குடிகள் பழி தூற்றத் தக்க கொடுங்கோலராகக் கூடும் எனவும், இரப்போர்க் கீயலாகாத இன்மையை யுறுவார் எனவும் நாம் என்றேனும் கனவு காணவும் போகின்றோமா? பல்லாயிர ஆண்டுகளாகப் புலவர் புகழுமாறு வாழ்ந்துவரும் பழங்குடியிற் பிறந்த நெடுஞ் செழியரை யாங்கள் பாடாது நாடு விட்டேகும் காலமும் வருமா? எங்கள் மனப் பூர்வமான கோரிக்கையும் உங்கள் கருத்தும் அந்நிகழ்ச்சியை எதிர் பார்ப்பனவல்ல என்பதை எதனாற் காட்டலாம்? இந்நாட்டிலே ஆண் மகன் என்ற பதம் பெற்றான் ஒவ்வொருவனும் தனது ஆண்மையைத் தன் நாட்டுக்கு அரசுக்கு அர்ப்பணம் செய்வதாலன்றோ? படைப் பெருக்கம் மிகுதியென்று பிறர் கொள்ளும் எண்ணத்தையும், நம் அரசர் இளைஞர் என்று அவர்கள் கருதும் கருத்தையும் நாம் அகற்றுவது எவ்வாறு? நம் ஆவியைக் கொடுத்தேனும் அரசின் பெருமையைக் காப்பதா லன்றோ? வயதால் இளையவர் இளையர் எனவும், அதனால் முதியவர் முதியர் எனவும் கருதுவது அறிவிலார் செயலே என்பதையும், ஆண்மையும் அறிவும் புலமையுமே ஒருவர் பெருமைக்குக் காரணம் என்பதையும், இளையரே யாயினும் அவை யுடையார் உரிய பருவம் பெற்றவரே என்பதையும் இந்தப் போரின் மூலமாக நாம் பிறருக்குத் தெரி

விக்க வேண்டும். தொடக்கத்திற் கூறியதுபோல யானும் இப்போரிற் படை தாங்கிப் புறப்படச் சித்தமா யிருக்கின்றேன். அரசர் என்னைப் படைஞர் இனத்துட் சேர்த்துக்கொள்வ தொன்றே யான் வேண்டுவது. அன்பர்களே, நம் பெருமை நாடறிய 'இதுவே சமயம். நம் அரசர் பெருமை உலகம் அறிய இதுவே சமயம்."

அவைக் களத்தார் அனைவரும் மாங்குடி மருதனார் பேசிய மொழிகளைக் கேட்டுப் பல திறப்பட்ட மன வெழுச்சிகளை அடைந்தனர். அமைச்சர் தலைவர் எழுந்து, சிறிது கையமர்த்திப் பேச லாயினர்:

" அரசர் பெருமானே, நும்மை இளையன் என்று கூறியவர், தாமே நீர் புரிய விருக்கும் கன்னிப்போரில் இளைப்பார். நீர் இளையீர். புலவர் பெருமானும் போர்க் கோலம் பூணத் துணிந்தனரென்றால் நம் நாட்டில் உள்ள பிற ஆண் மக்களைப் பற்றிப் பேசுவானேன்! நம் நாட்டு மறவர் பிற வீரர்க்குச் சிறிதும் போரில் இளையார். நம் பகைஞர் கருதியவாறு நாம் அவர்க்கு எவ்வகையிலும் இளையாராகவே இருப்போம். சேனாதிபதியார் இரண்டு தினங்களின் முன்பு கூடிய மந்திராலோசனை சபையிற் கூறியவண்ணம் படைஞரைத் தக்க பயிற்சியோடு சித்த மாய் வைத்திருக்கின்றார். விழித்திருக்கும் அரியேற்றை அதன் குகையில் நரிகள் சில எதிர்க்கத் தொடங்கியது போல நம் பகைஞர் செய்யும் முயற்சி உலகம் நகைக்கத் தக்கதே."

பிறகு சேனாதிபர் எழுந்து, தம் கருத்தைப் பின் வருமாறு வெளியிட்டார்:

"அரசர்க்கரசே,விற்போரும்மற்போரும் வாட்போரும்பல்வகையாலும்நன்குபயின்ற எண்ணிறந்தபடைஞர் வேம்பன்தொகுப்பு, பஞ்சவர் அணி, வழுதி வகுப்பு முதலிய பல வகையாய் அமைந்து நம்நாட்டின் சிறப்பே தம் நாட்டமாகக் கொண்டு, 'எப்பொழுது பிற நாடுகளோடு போர் விளையும்? நம் போர்ப் பயிற்சியை என்று நம் அரசர் அறிய வெளியிடலாம்?' என்று சமயம் எதிர்பார்த்து மிகவும் ஆத்திரத்தோடு காத்திருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பம் வாய்த்தது, அவர்கள் பாக்கியமே என்பேன். அரசர் பெருமான் ஆண்டில் இளையார் என்று அயலவர் கருதியதற்கு மாறாக அவரே ஆண்மையில் இளையார் என்பது விளங்கப் படையனைத்தையும் முன்னின்று நடத்திப் போர்செய்து வருவார்க்குத் தக்க அறிவு புகட்ட மனங் கொண்டுளார்.இவ்வகைச் சமயம் வாய்ப்பது அரிது.நாட்டில் படைப் பயிற்சி பெற்றுள்ள பலரும் படைஞரோடு சேர்ந்துகொள்ள விரும்பின், வேண்டும் சௌகரியங்கள் செய்விக்கின்றேன்."

பின்னர் அங்கு வந்திருந்த நகர மாந்தரில் முதியாரொருவர் எழுந்து, 'அரசே, எண்ணிய எண்ணியாங் கெய்துக,' என்று கூறி அமர்ந்தார். அரசர்க்குப் பின்னிருந்த வாத்தியங்கள் முழங்க லாயின. அக்குறியறிந்து எல்லோரும் எழுந்து நின்றனர். நெடுஞ்செழிய வேந்தன் மெய் காவலர் பலர் புடை சூழ அரண்மனைக்குட் சென்றான். சபைக்கு வந்திருந்தோரெல்லாம், அமைச்சர் தலைவர், 'எல்லோரும் இனி விடை பெற்றுக் கொள்ளலாம்' என்று கூறியதன்மேற் புறப்படலாயினர். ஒரு நாழிகைக்குள் சபை கலைந்து பொது மக்கள் அனை

வரும் போய்விட, அமைச்சரும் படைத்தலைவரும் புல வரும் பிற அரசியல் அதிகாரிகளும் தத்தம் கார்ய ஸ்தலங்களுக்குச் சென்றனர். குடி மக்கள் எல்லோரும் தத்தம் சக்திக்கியன்றவாறே இப்பெரும்போரில் உதவி செய்யலாம் என்ற துணிவு கொண்டு தம் மனையகம் சேர்ந்தனர்.

பாண்டிய நாடு முழுவதும் போர் முழக்கமும், படைஞர் இயக்கமும் பரவின. நாட்டின் ஆளுகைக்கு அடங்கிய சிற்றரசர் தம் படைகளோடு இரண்டு தினங் களில் வந்து சேர்ந்தனர். உதவி செய்யும் கருத்துள்ள பல வகை வீரரும் தத்தம் பயிற்சிக்கேற்ற படைகளிற் சேர்ந்துகொண்டனர். ஐந்து தினங்களில் போர் முயற்சி யெல்லாம் நிறைவேறிப் பாண்டிய நாட்டார், 'பகைவர் எவர் வரினும், யாம் தாங்கி நிற்போம்!' என அரணுக்குள் இருந்தனர். அரணுக்கு வெளியில் உள்ள அகழியைத் தாண்டிக் காவற்காட்டை அடுத்ததொரு மறைவிடத்திற் படைஞரிற் பெரும்பகுதியார் இருந் தனர். கடிமரத்தின் உச்சியிற் சிலர் இருந்து, அயலார் வருகையை எதிர் பார்த்திருந்தனர். இவ்வாறு இவர் கள் எதிர்பார்த்திருப்பதை அறியாத சேரர் படை, மறு நாள் பாண்டிய நாட்டு எல்லையை அடைந்து, எங்கும் தடைப்படாது வந்து, பாண்டிய நாட்டு மதுரை நகர் அரணுக்கு வெளியே உள்ள அகழியின் புறத்ததாகிய காவற்காட்டை அணுகியது. அப்படையை நடத்தி வந்த சேரவரசன் சிறந்த வீரனேயாயினும் எண்ணிறந்த படைஞரோடும், சோழனும் ஐவர் வேளிரும் ஆகிய உதவியாளரோடும் வந்திருந்தானாயினும், அங்கு மறை

விலே பாண்டியன் படைஞர் இருப்பர் என எதிர் பாராமையால், போர் தொடங்கும்போதே பெருத்த நஷ்டம் அடையலானான். பெரும்போர் மூண்டது. இரு திறத்துப் படைஞரும் ஆங்கிருந்த பறந்தலையில் அணி வகுத்து நின்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் தன் படையை இரு பகுப்பாக்கி முன்னணியில் தான் நின்றுகொண்டு, சேரலனைத் தாக்கினன். யானை வீரரும், இவுளி மறவரும், வாட்படைஞரும், வேல் வல்லாரும், வில்லினரும், பிற பொறிகள் தாங்கிய போர் வீரரும் இரு திறத்துப் படையிலும் அறப் போர் நெறி வழுவா வண்ணம் எதிரெதிர் நின்று போர் இயற்றினர். சேரர் படையை நடத்தி முன் வந்த சேரலன், சிறுவன் எனப் பலர் முன்பு தான் எள்ளிய நெடுஞ்செழியன் விடும் படைகட் காற்றாது கலங்கினன்; இயன்றவரையிற் படைஞரை ஊக்கினன். பதினைந்து நாழிகைக்குள் சேரர் படை பின்னடையலாயிற்று. உதவியாய் வந்து கொண்டிருந்த சோழர் படையும் வேளிர் படையும் அச் சமயத்தில் அங்கு வந்துற்றன. பாண்டிய மன்னன் எழுவர் படைக்கும் ஈடு கொடுத்துத் தன் படைஞரும் தலைவனும் தானும் அற நெறி பிழையாத போர் இயற்ற முன்னின்று ஊக்கினன்.

எழுவர் படைகளும் ஒரே தொகுப்பாய்ப் புயல் போல வந்து மோதின. பாண்டியன் படை அத்தாக்கை மலைபோலத் தாங்கி முன்னேறியது. எழுவர் படை பின் செல்லலாயிற்று. ஒழுங்கு குலையாமற் பின் வாங்கிப் போர் செய்துகொண்டே சென்றுகொண்டிருந்த அப் படைஞரைப் பின் பற்றிப் பாண்டியனும் அவன் படை

யும் செல்ல லாயினர். இரண்டு தினங்கள் இவ்வாறு நடையிலேயே ஓய்வின்றிப் போர் நிகழ்ந்தது. எழுவரும் இளைஞனாகிய ஒருவனே தம்மைஇவ்வாறு அடர்ப்பதை எண்ணி யெண்ணி எவ்விதச் சூழ்ச்சியாலேனும் வெல்ல வேண்டும் என எண்ணிக்கொண்டே சென்றனர். பாண்டியன் படைஞர் நாட்டெல்லை கடந்து சோழ நாடு அடைய நேரிடுவதை அறிந்த அமைச்சர் தலைவர், படைஞர்க்கு வேண்டுமளவு உணவுப் பொருள்களைச் சுமந்து செல்லும் வண்டிகளைப் பின்னே அனுப்பினர். எழுவர் படை பின் வாங்கியே முன் சென்று வலி நிலையாய் உதவத்தக்க சோணாட்டுக்குட் புகுந்துகொண்டது. சோழ நாட்டிற் படை தாங்க ஆற்றல் படைத்த ஆண் மக்கள் எல்லாம் விருப்பத்தோடும், விருப்ப மின்றேல், வலிந்தேனும், படைஞர் ஆக்கப்பட்டனர். அவ்வாறு ஆக்கிய படைஞரொடு கூலிக்கு வேலை செய்யும் படைகள் சிலவும் சேர்க்கப்பட்டன. என்னென்ன வகையால் தம் படைப் பெருக்கை வளர்க்கலாம் என அவர்கள் ஆலோசனை செய்துகொண்டே, அருகிலிருக்கும் வேளிர் நாடுகட்குத் தூது போக்கி, அவர்கள் உதவிய படைகளையும் பெற்றுக்கொண்டார்கள். அவ ரனைவரும் அறத்தின் உதவி தமக்கு இன்றேனும், மறத்தின் உதவியால் மாறனை வெல்ல மனங் கொண்டனர். அவன் அறம் ஒன்றே துணையாய்ப் பின் தொடர்ந்து வந்தான். சோழ நாட்டில் வழியில் உள்ள பல இடங்களிலும் சிறு சிறு போர்கள் நிகழ்ந்தன. இறுதியில் ஆலங்காடு என்னும் இடத்தில் இருந்த பெரியதொரு பறந்தலையில் எழுவர் படைகளும் தங்கின. பாண்டியன்

மறவர் அனைவரும் அவரைப் பின்றொடர்ந்து வந்து போர் தொடங்கினர். மூன்று தினங்கள் இரவொழியப் பகலெல்லாம் போர் நிகழ்ந்தது. நெடுஞ்செழியன் படைஞருட் சிலர், பகைவர் படைக்குட் பாய்ந்து, பலவாறு வீரச்செயல் புரிந்து, இறுதியில் தாமும் வீர சொர்க்கம் புகுந்தனர். எழுவர் படைஞரோ அக்காட்சிகளைக் கண்டும் இளம்பருவ வேந்தல் பாண்டியன் நெடுஞ்செழியன் படை நடத்தும் திறமையும் போர் செய்யும் ஆண்மையும் கண்டு இறும்பூது எய்தி, இன்னது செய்வது என அறியாது நின்றனர். நெடுஞ்செழியன்ஒருவன் நிற்கும் இடத்தில் எழுவர் தலைவரும் சூழ்ந்து நின்று, அவனை எழு, ஈட்டி, விட்டேறு முதலிய படைக்கலங்களாலும் அம்பினாலும் வாளாலும் தாக்கினர். அவர் அனைவரையும் பாண்டியன் திரிபுராந்தகன்போலப் புன்னகையோடு எதிர்த்து நின்று அமராடி, இரண்டு நாழிகைப் பொழுதில் விண்ணுலகேற்றினன். பின்னர் அவ்வவரும் பற்பல விதமாகச் சேர்த்த படைஞரும் தலைவரை யிழந்தமையால், இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர். வெற்றித் திருவேம்பன் புயங்களில் வீற்றிருப்பாளாயினள். எழுவர் வேந்தரது வெற்றி முரசங்களும் பாண்டியனாற் கைக்கொள்ளப்பட்டன. அவரது குடையும் கொடியும் உரியமுறையால் எடுத்துக்கொள்ளப்பட்டன. சேரனும், சோழனும், திதியனும், எழினியும், இருங்கோவேண்மானும், எருமையூரனும், பொருநனும் அக்களத்திலே தம் புகழைப் போட்டுத் தம் முன்னோர் வாழ்ந்த வீர சுவர்க்கம் புக்கனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் இவ்வாறு தான் இயற்ற நேர்ந்த கன்னிப்போரை நிறைவேற்றிக்கொண்டு, அப்போர்க்களத்தே மறக்கள வேள்வி செய்தான். புலவர் பலர் அவனைத் தொடர்ந்து வந்திருந்தனர். அவர் அனைவரும் அவனது மறக்கள வேள்விச் சிறப்பைப் புகழ்ந்து பகைஞர் யானைகளுள் இறந்தன போக எஞ்சி நின்றவற்றைப் பரிசிலாகப் பெற்றனர். அன்று பெற்ற வெற்றியின் பயனாக வேந்தர் பிரான், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். புலவரால், அவன் அன்று பெற்ற புகழ் உலகெங்கும் பரவுவதாயிற்று.

# IV

புலவர் பாடும் புகழ் புரவலர் எவர்க்கும் எளிதிற் பெறற்காகும் பேறன்று. புலவராற் பாடப் பெறுது இகழ்ச்சி பெற்ற நன்னன் போல்வாரும் உளர். தானும் புலமை சிறந்து புலவராலும் புகழப் பெறும் நிலைமை பெறுவோன், எவனே யாயினும், அவன் உலகினர் பாராட்டுக்குரியவனே யாவன். மிகவும் இளமைப் பருவத்திலே அரசுரிமையை யேற்று அறிஞர் உவப்ப ஆள்வதோடு, எழுவர் எதிர்த்து நின்ற பெரும்போரில் வெற்றி பெறவும் தகுதியுடையனுய் இருந்தவன் ஆன்ற புலவர் பலராற் புகழப்படுதற்கு ஐயமுளதோ ?

நெடுஞ்செழியனைத் தொடர்ந்து போர்க் களஞ் சென்ற புலவர், பலராவர். அவருள் ஒரு சிலர் அவனை அங்கே பாடிப் புகழ்ந்தனர். மற்றுஞ் சிலர் பாண்டிய நாட்டுக்கு வந்த பிற்பாடு புகழ்ந்தனர். போர்க் களத் தின்கண்ணே புகழ்ந்து பாடியவருள் இடைக்குன்றூர் கிழார் என்பவர் ஒருவர். இவர் பாண்டியன் போர் செய்து வென்ற பெருமையைக் கண்டார்; பரவசங் கொண்டார்; அவனைப் பலபடப் புகழத் தொடங் கினர்:

“கிண்கிணியைக் கழற்றிய காலிலே ஒளி மிக்க பொன் மயமாகிய வீரக் கழலை அணிவித்துக் குடுமி யொழித்த தலையிலே வேப்பந் தளிரும் உழிஞைத்

தளிரும் சூடிச் சிறிய வளைகள் கழற்றிய கைகளில் வில் லும் அம்புங் கொண்டு, நெடுந்தேர் ஒன்றில் அமர்ந்து, அதன் கொடுஞ்சியைப் பற்றி அழகு பெற நின்றவன் யார்? அவன் யாரேயாயினும், அவனது வேப்பமாலை வாழ்வதாக. தார்பூண்டிருப்பினும் ஐம்படைத் தாலியை இன்னும் அவிழ்த்திலன். பாலையொழித்து உணவும் இன்றுதான் உண்டனன். முறை முறையாக வெகுண்டு எதிர்த்து மேல்வந்த வீரரை மதித்துமிலன்; அவமதித்து மிலன்; அவரனைவரையும் கொன்று விண்ணேற்றியதற் காக மகிழ்தலும் தன்னைப் பாராட்டிக்கொள்ளுதலும் செய்தானிலன். தனது பழைய நகரின்கண் குளிர்ச்சி மிக்க பொய்கையிலே மூழ்கி மன்றத்திடத்து வளர்ந் துள்ள வேம்பின் தளிரைச் சூடிக்கொண்டு, தெளிந்த ஓசையோடு கூடிய போர்ப்பறை முன்னே முழங்கக் களிறுபோலப் பெருமிதத்தோடு நடந்து போர்க்கு வந் தான் நெடுஞ்செழியன். அவனொடு பகைத்த புதிய மறவர் பலரே. அவர்க்குரிய ஆயுட் காலம் குறுகிய தாகையால், எவரேனும் மிஞ்சி உயிரோடு மீள்வரோ? ஒருவரும் மீண்டாரிலர்! பல வித வளைவுகளோடு நிறுத்தப்பட்டிருக்கும் படைத்தொகுப்புக்களால் விளங் கும் போர்க்களத்தில் நிலை தளராத மனவுறுதியையும் மிக்க வலிமையையும் உடைய என் இறைவன், முழை யிற் கிடந்த புலி, தான் விரும்பியதோர் இரையை நோக்கி வந்தாற்போல உள்ள தன் உரத்தின் வலியை மதியாராய் ஆர்த்து எழுந்து, “யாங்கள் படை வலியாற் பெரிதும் சிறப்புடையேம்; எம்மொடு பொர வந்தவன் மிகவும் இளையன் ஆவன். ஆகையால், யாம் பெறக்கூடிய

கொள்ளை பெரிதாம்," என இகழ்ந்து வந்த வீரரைப் புன்மை விளங்கும் கண்களோடு வீரம் இழந்து நின்ற இடத்தில் நில்லாது புறம் போகப் பாண்டிய நாட்டுப் போர்க்களத்திலே கொல்ல விரும்பானாய், அவர் பரம்பரையாய் வாழ்ந்த தந்தைதம் மூரிலே அவரது பெண்டிர் வெட்கத்தால் இறந்துபடுமாறு போர்ப்பறை முழங்கச் சென்று கொன்றான்.

"ஒருவனை ஒருவன் கொல்லுதலும், ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் புதியவல்ல. இந்த வுலகத்து அவ்வாறு போர்நிகழ்ச்சியுண்டாதல் பண்டுதொட்டு உள்ள இயல்பே. மன்றத்தில் உள்ள பெருத்த அரையையுடையவேம்பிலே தோன்றிய தளிரையும் உழிஞைத் தளிரையும் கொடியாகச் செய்து அணிந்துகொண்டு, பல வகை மாலைகளும் சூடிக்கொண்டு, போர்ப்பறை ஒலிப்பக் கண்டோர்க்கினிதாக நாட்டுச் செல்வம் படைத்த பசும்பொற் பூண் அணிந்த நெடுஞ்செழியனை இன்னபெருமையுடையான் என அறியாது தம்முட் கூடிப் போர் புரிவோம் என்று தன்னிடம் வந்த வீரக் கழல் புனைந்த அடியினராகிய இரு பெருவேந்தரும்ஐம்பெரு வேளிரும் ஆகியஎழரசர் முன்னேகொண்ட வெற்றித் திருவையும் இழந்து வருந்தத் தான் ஒருவனாய்நின்று எதிர்த்துக்களத்திலே வெற்றி பெறுதல் புதுமையே. இன்றையின் முன்பு இத்தகைய போர்ச் சிறப்பைப் பற்றி எங்கும் கேட்டறியேம்."

அவர் இவ்வாறு கூறி, அவனது மார்பிலே தம் மார்பைச் சேர்த்து, இறுகத் தழுவிக்கொண்டார். பின்னும் திருப்தி யடையாமல், அவனைப் புகழத் தொடங்கினர்:

"அலை முழங்கும் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் தமிழ்ப் படைஞர் கை கலந்த தலையாலங்கானத்துக்கண் உயிர்களின் பன்மையும் அவற்றைக் கொள்ளும் கூற்றுவனது ஒருமையும் நின்னொடு சீர் தூக்கிக்காட்டிய வெற்றிவேற் செழிய, "கலங்கி மலைக்கண்ணே தங்கிய குருவியினம்போல அம்பு சென்று தைத்த புண் மிக்க யானையினது பெருந்துளையினையுடைய தும்பிக்கை வாயோடு துணிந்து வீழ்ந்து கலப்பைபோல நிலத்தின் மேலே புரள வெட்டிப் போர்க் களத்திலே வீழ்த்த ஏந்திய வாள்வலம் பெற்றோராய் எமது புன்றலைப் புதல்வர் எம் தலைவனொடு கிடந்தார். இப்பெற்றியுள்ள வெற்றியும் நமக்கு உளதோ!" என்று கூறி மறக்குடியிற் பிறந்த வீரப் பத்தினிமார் இன்புற்று, உவகை மிகுதியால் அழ, அதனைக் கண்டு கூற்றம் நாணி இரங்கத் தக்க அச்சமிகும் போர்க்களத்தின்கண்ணே எழுவாது வெற்றியையும் புகழையும் அழித்த எம் தலைவ, பெரும்புலியைக் கொல்லும் வேட்டுவன் எந்திரம் அறிந்து கொளுத்திய பெருங்கல்லையுடைய அடார் போலும் என விரும்பி நினது முத்தாரம் அணிந்த மார்பை யான் புல்லினேன் அல்லனோ?"

இவ்வாறு அவர் தம் மனமார வாயாரப் புகழ்ந்து, அரசனது உபசாரம் பெற்று அகன்றார். பிறகு அங்குக் கல்லாடனாரும், மாங்குடி கிழாரும் வந்தனர். அவ்விருவரும் அரும்போர் செய்து வெற்றி பெற்ற அண்ணலைக் கண்டு மகிழ்ந்து, மாறி மாறிப் புகழ்வா ராயினர்:

கல்லாடனார்:—வெண்மையில்லாத வலிய வயிரக் கம்பங்கள் நாட்டிய கூடத்தில் நிற்றல் விரும்பாது யானைகள் சென்று படிந்து நீருண்டதாற் கலங்கிக் கிடக்கும் நீர்த்துறைகளைக் கண்டேன்; கடம்ப மாலை யணிந்த முருகன் படைஞரை யொத்த நின் படைஞர் தம்மாற்

கைக்கொள்ளக்கூடியவற்றைக் கொண்டு ஒழிந்தவற்றை மாற்ருர்க்கு உதவா வண்ணம் அழித்த நிலங்களையும் கண்டேன்; கோடாலியால் வெட்டுண்டு ஊர்கள்தோறும் காவற் காட்டில் உள்ள காவல் மரங்கள் அழிந்த காட்சியையும் கண்டேன்; பெரிய நகரங்களில் மனையக வாழ்வு அழிவுறுமாறு தீயால் அழிந்த வீடுகளையும் பிறவற்றையும் கண்டேன். இவற்றைக் கண்டதும் இத்தன்மையான பல வகைத் தண்டனைகளை இன்னும் செய்ய வல்லவன் எவரும் அணுகற்கரிய சூழ்ச்சித் திறமையுடையோன் என அறிந்து, ஆலங்கானத்து அமர் வென்ற காலன் போலும் வலிமையுடைய உன்னைக் காண வந்தேன். எங்கும் உன் போரால் நிகழ்ந்த செயல்களைக் கண்டேன். ஆதலால், உன்னைக் கண்டு வந்தேன் என்றே கூறலாகும். அரசே, யான் வந்த வழியில் வேருெரு காட்சியும் கண்டேன். அது யாதெனில், கொம்பொடிந்த பெரியதொரு கலைமான் புலியாற் பற்றப்பட்டது கண்ட அதன் பெண்மான் தனது சிறிய குட்டிகளை அணைத்துக் கொண்டு பூளைச்செடி நிறைந்த பாழிடங்களில் வேளைப் பூவைக் கடித்துக்கொண்டிருந்த துயரக் காட்சியேயாம்.

மாங்குடி கிழார்:—அரசே, கல்லாடனூர் கண்ட காட்சியாய்க் கூறிய செய்தியில் ஒரு குறிப்புப் பொருள் விளங்குகிறது. அது கவனிக்கத் தக்கது. நீ நின் பகைஞரைக் கொன்ற நாடுகளில் அவர்தம் மனைவிமார், தம் இளம்புதல்வரைப் பாதுகாத்துத் தமது குடியை விளக்கும் கருத்தால், தாம் தீயிற் பாய்ந்து இறந்துபடாமல் வேளையிலை தின்று பாழிடங்களிலே கைம்மை நோன்பு பூண்டு உயிர் வாழ்ந்து வருகின்ருர் என்பதாம்.

கல்லாடனார்:—இன்னும் சில யான் சொல்கின்றேன்: இளம்பெரு வேந்தே, செவி சாய்த்தருள்க: நக்ஷத்திரங்கள் விளங்கும் ஆகாயத்திலே பரவிய இருள் நீங்க ஒளி செய்யும் ஞாயிறும் திங்களும் நிலத்தில் விழுந்தாற்போல வலி சிறந்து வஞ்சினங் கூறிய இருபெரு வேந்தரைப் போர்க் களத்திலே தோற்பித்து, அவரது வீர முரசத்தைக் கைக்கொண்ட காலத்து, நின்ற நிலையில் நின்று நீ எறியும் வேல் நின்னைச் சூழ்ந்து நின்ற பகைஞர் மேற் பாய்ந்து, அவர் மகளிர் கைம்மைக் காட்சியைக் கண்டு மழுங்கியது.

மாங்குடி கிழார்:—அரசர் பெருமானே, யான் கூறுவதும் கேட்க வேண்டுகின்றேன்: பெரிய கடலில் ஆழம் மிக்கதோர் இடத்தில் புயற்காற்று மோதுவதால் மரக்கலம் நீர் கிழித்து ஓடுவதுபோல, நின் படையிலே உள்ள களிறுகள் முன் சென்று போர்க் களத்திலே இடம் உண்டாக்க, அவ்வாறு அமைந்த இடத்தில் வேல் ஏந்தி, வேந்தர் படப் போர் புரிந்து, மறக்கள வேள்வி செய்த செழிய. ஐம்புலனடங்கிய விரதமும் ஆன்றமைந்த கல்வி கேள்விகளும் நால்வேதம் ஓதிய பயிற்சியும் உடைய அந்தணர் பலர் சூழ்ந்திருக்க, வேந்தர்கள் ஏற்ற வண்ணம் உதவி செய்ய அறக்கள வேள்வி செய்த வேந்தே, யாவரும் தெளிவாக அறிய நின் பகைஞரே தவஞ் செய்தார். நினக்குப் பகைவர் என்று பெயர் பெற்று நின்னொடு போர்செய்யமாட்டாது இறந்தாராயினும் சுவர்க்க பதவியை அடைந்தாரன்றோ!

கல்லாடனார்:—அரசரேறே, புலவர் தலைவரே, இக்கருத்துக்கள் செய்யுளாய் அமைதல் சிறப்புடைத்தாம் அன்றோ?

நெடுஞ்செழியன்:—யானும் அதுவே எண்ணினேன்.

மாங்குடி கிழார்:—செய்யுளாகவே கூறுகின்றேன். அரசர் பிரானே, அருந்தமிழ் வள்ளால், செவி தருக:

"நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய வெஃகேந்தி
அரைசுபட அமருழக்கி
உரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி உலைக்கொளீஇத்
தோடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய!
ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!
நோற்றோர் மன்றநின் பகைவர்; நின்னொடு
மாற்ற ரென்னும் பெயர்பெற்(று)
ஆற்ற ராயினும் ஆண்டுவாழ் வோரே."*

கல்லாடனார் :—அரசர் பிரானே, சொல்லும் பொருள் ஒன்றே யாயினும், செய்யுள் உரையினும் சிறந்ததன்றோ?

நெடுஞ்செழியன்:—அதற்கு ஐயமுளதோ ! இனி நீவிர் இருவிரும் பரிசில் பெறுமின். போர்க் களத்தில் நுந்தம்நிலைக்கு ஏற்றவாறு நான் கொடுக்கவியலாதேனும் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

* புறநானூறு - செய்யுள், 26.

# V

நூல்கள் பல ஆய்ந்துணர்ந்து, கேள்விச் செல்வம் படைத்து, அறிஞர் நடுவண் இருக்கும் பேறு பெற்ற அரசன், அமைச்சர் சொற்கேட்டு, அற நெறி வழுவாது அரசியற்றலையே தன் அரும்பணி யெனப் பூண்பன். போர் பல எழுமேனும், பகைவர் பலரை அடக்கி, எண்ணிறந்த வுயிர்களின் அழிவுக்குத் தான் காரணமாய் இருக்க நேரிடு மேனும், அமைச்சர் சொற் கேட்கும் அரசன், பழி ஒன்றும் எய்தான். குடிகள் நன்மை யொன்றே கருத்தாகக் கொள்ளும் அரசன், தீங்கு செய்தாரை ஒறுத்தலாற் பாவம் எய்துவது இல்லை யன்றோ? இவ்வற நெறியை ஒருங்குணர்ந்த நெடுஞ் செழியன் அமைதிபெற விரும்பினனாயினும், இறைவன் செயலால் அவன் மேலும் போர்களே செய்ய நேர்ந்தது.

எழுவர் நல்வலம் அடங்க வென்ற ஏந்தல் புகழைக் கேட்டு மடங்காத சிலர் இருந்தனர். சோழ நாட்டின் ஒரு பகுதியிலே மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் என்ற இரண்டு சிறு நாடுகள் இருந்தன. மிழலைக் கூற்றத்தில் தலைமை தாங்கி யிருந்தவன், பெருங்கொடை வள்ளலாகிய வேள் எவ்வி என்பானாம். முத்தூற்றுக் கூற்றம், நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழித் தோன்றிய நாற்பத்தொன்பது வேளிருள் ஒரு குடியினர் வழி வந்த வேளிர் தலைவனால் ஆளப்பட்டு வந்தது. இவ்விரு

வரும் தம் இனத்தவராகிய ஐவர் வேளிரை அழித்து வெற்றி கொண்ட பாண்டியனை எதிர்த்து நின்று, தம் குடிப் பழி நீக்கக் கருதினர்.

சேரலன் இறந்ததாற் பழி யெய்திய சேரர் குடியிலே அரசு தாங்கிய கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை யென்பானும் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்க்க எண்ணினன். சோழ நாட்டில் வேளிர் இருவர் பாண்டியனை எதிர்க்கச் சித்தமாய் இருப்பதை அறிந்து இவனும் சோழ நாட்டுக்குப் பெரும்படையோடு வந்தான்; சோணாட்டு அரசாய் இருந்த கிள்ளியை வென்று தன் படையைப் பெரிதாக்கிக்கொண்டான். வேளிரும் உதவியாயினர். பாண்டியன் மறு முறையும் இங்குப் போர் இயற்ற வந்தான்

மூன்று நாட்கள் கொடும்போர் நிகழ்ந்தது. இறுதியில் சேரவரசன் சிறைப்பட்டான். வேளிர் நாடுகள் பாண்டியன் கைவசப்பட்டன. இவ்வாறு போரில் வெற்றி பெற்று நெடுஞ்செழியன் பாசறையி லிருக்கையில், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும், மாங்குடி கிழாரும் அங்கு வந்தனர். தம் அரசன் பெருமையைக் கண்டு மகிழ்ந்த அவ்விரு பெரும் புலவரும் அவனைப் பலபடப் புகழ்ந்து பாடுவாராயினர்.

**மாங்குடி கிழார்:**—அரசர் பெருமானே, யான் புறப்பொருள் பற்றியும் நக்கீரர் அகப் பொருள் பற்றியும் செய்யுள் செய்துளோம். அவற்றை யேற்றுக்கொள்க.

**நெடுஞ்செழியன்:**—புலவர் வாய்ப் புகுந்து வருவது எப்பொருள் ஆயின் என்! இன்பம் பயப்பதே.

நக்கீரர்:—யான் நெடுநல் வாடை என்ற பெயராற் பெரியதொரு செய்யுள் செய்திருக்கின்றேன். அரசர் பெருமானே, நீர் அதனைத் தோளில் அணிய வேண்டு கின்றேன்.

மாங்குடி கிழார்:— அரசரேறே, இப்பொழுது இப்பாசறையில் போர் முயற்சி யொன்றே கருதித் தனித்திருக்கும் நினக்கு அச்செய்யுளைச் செவிக் கொள்ளுதல் மிகவும் பொருத்தமே.

நக்கீரர், நெடுநல்வாடைச் செய்யுள் முழுவதை யும் கூறினர். புலவரும் அரசனும் அதைச் செவியேற்று ஆனந்தித்தனர். நக்கீரர் அதில் உள்ள பொருள்களை விளக்கியுரைத்து, மேலும் இன்பம் ஊட்டினர்.

நெடுஞ்செழியன்:—மதுரை நகரிலே தமிழ்ப்பெரும் பயிர் வளர்க்கும் கணக்காயர் குடிப் பிறந்த நல்லிசைப் புலவரே, நும் செய்யுளின் இயற்கை நலத்தினையும் சொற் செறிவையும் பொருட்பொலிவையும் என்னென் பேன்! இறுதிப் பகுதியை மீண்டும் ஒரு முறை கூற வேண்டுகிறேன்.

நக்கீரர்:—அரசரே, செவி சாய்த்தருள்க:

"விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து,
முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நிலைஇய
வுரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்போடு வதியும் நலங்கிளர் அரிவைக்(கு)
இன்னா வரும்படர் தீர விறல்தந்(து)
இன்னே முடிகதில் லம்ம மின்னவிர்

ஓடையோடு போலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதோறும் நுடங்கித்
தெற்கோர்(பு) இறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமோடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியோடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகில் இடவயிற் றழீஇ
வாள்தோட் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரோடு திரிதரும் வேந்தன்
பலரோடு முரணிய பாசறைத் தொழிலே."*

மாங்குடி கிழார்:—*வாடை, நக்கீரனார் வாக்கு நயத்தால் நெடுநல்வாடை ஆகியது மிகவும் இன்பம் பயக்கின்றது. பாசறைக்கருகில் இரவில் போர் நினைவொடு திரிதரும் அரசன் இயல்பு கூறியது மிகவும் நயம்பட அமைந்துளது. விழுப்புண்படப் போர் புரிந்து பாசறையின் அருகிலிருக்கும் வீரரைப் பார்க்கும்பொருட்டு இரவிற் பல*

---

* பத்துப்பாட்டு -நெடுநல்வாடை.

விளக்குக்கள் வாடைக்காற்றால் தெற்கு நோக்கி அசைத லும், வாள் தாங்கும் காலை தோள்மீது கை வைத்து நடந்து செல்லும் இயல்பும், போர்ச் சிறப்பை விளக்கிய அடிகளும், பிறவும் மிகவும் இன்பமுற அமைந்துள. எல்லாவற்றினும் சிறப்பாக, திங்களுடன் சேர்ந்த உரோகிணியை நினைந்து நெடிதுயிர்த்துத் தலைவி துயர் மிகுதியாற் கண்ணீர் சிந்திப் போர் முடிந்து தலைவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதாய்த் தெரிவித் திருப்பது மிகவும் அழகாய் இருக்கிறது. இயற்கை நலம் தோன்றப் பாட வல்லார்க்கன்றிப் பிறர் எவர்க்கும் இத்தகைய சொற்பொருள் அமைதி வாய்ப்பது அருமை யே. அரசே, இதனை யேற்றுக்கொண்ட நீயே புர வலன். நினைக்கு இதனைச் சூட்டிய நக்கீரரே புலவர்.

நெடுஞ்செழியன்:—புலவர் பெருமக்காள், போர்க் களத்திலும் நும்போன்ற பெரியோரொடு பயிலும் பேறு என் மூதாதையர் இயற்றிய நல்வினைப் பயனால் எனக்கு வாய்த்ததேயாம்.

மாங்குடி கிழார்:—அரசே, யானும் இவ்வமயத்துக் கேற்ப அமைத்தபொருள் பற்றி என் செய்யுளைக் கூறு கின்றேன்; ஏற்றுக்கொள்க:

“தாங்கா வுறையுள் நல்லூர் கெழீஇய
ஓம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்விற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!

நின்ற நிலைஇயர்நின் நாண்மீன் நில்லாது
படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே.''*

நெடுஞ்செழியன்:—புலவர்ஏறே, நும் செய்யுளையும் அன்போடு ஏற்றுக்கொண்டேன். இப்பரிசில் பெறுக.

நக்கீரர்:—அரசரே, மாங்குடி கிழார் பாடிய இச் செய்யுள் சுருங்கிய சொற்களால் பெரும்பொருள் விளக்கும் ஆற்றல் வாய்ந்திருப்பது புலமை நலம் படைத்த நுமக்கே விளங்கும். இங்கு வருங்கால் என் அன்பர், இன்னும் பெரிய பாடலாய்ப் பாடக் கருதி யிருந்தார். இங்குள்ள போர் நிலை, பாசறை வாழ்வு முதலியவற்றைக் கருதிச் சுருக்கிக்கொண்டார் என்று எண்ணுகிறேன்.

மாங்குடி கிழார், "முற்பகுதியில் வேள் எவ்வியின் நாட்டின் கடல்வளத்தை விளக்கும் சில அடிகளும், பிற் பகுதியில் வீரரைப் புகழ்ந்து அரசனை வாழ்த்தி நீதி தெரிவிக்கும் சில அடிகளும் இங்கே சுருக்கப்பட்டன. இச்செய்யுளின் பிரதியை அரண்மனைப் புத்தகசாலைக்கு அனுப்பும்போது உள்ளது போல அனுப்புகின்றேன். அரசர் பிரானே, இங்கு யான் இடத்துக் கேற்பச் சுருக்கியது பொருத்தமே யன்றோ? இதுவே முழுச் செய்யுளின் உருவமாகும்,'' என்று கூறிச் செய்யுளில் முன்னும் பின்னும் விடப்பட்ட பகுதிகளைச் சேர்த்துக் கூறினர்.

அரசன் கேட்டு மகிழ்ந்து, இருவர்க்கும் பரிசில் ஈந்து, விடை கொடுத்து அனுப்பினன்.

பின்னர் நெடுஞ்செழியன் தான் சிறை செய் திருந்த சேரரையும் பிறரையும் தக்க காவலோடு பாண்

---

* புறநானூறு -செய்யுள், 24.

டிய நாட்டுக் கனுப்பினன். மேலும் போர் செய்வதி லேயே ஊக்கம் பிறந்ததால், அருகிலிருந்த மணவாயில் உறத்தூர் என்ற ஊர்ப் பறந்தலையில் வேறொரு பெரும் போர் இயற்றி, நீடூர் என்ற சிறு நாட்டைப் பற்றிக் கொண்டு, எதிர்த்த வேளிர் படைஞரைச் சாய்த்துத் தன்னை நெருங்கிய பலர்க்கும் இன்பம் பெருகப் பெரு விருந்து ஒன்று செய்வித்தான். அங்கிருந்து படையோடு புறப்பட்டுக் கோங்கு நாடு அடைந்தான். அங்குத் தலைமை வகித்திருந்த அதிகன் என்பான் மன்னர் பலரைவென்ற மன்னர் மன்னன் பாண்டியனைப் பணிந்து வாழ அறி யாது, போர் எதிர்த்து நின்றான். வாகைப் பறந்தலை என்ற போர்க்களத்தில் அவன் படைஞர்க்கும் பாண்டி யன் படைஞர்க்கும் போர் நிகழ்ந்தது. இறுதியில் அதிகன் மறைந்தான். வீரரெல்லாம் ஓட்டம் எடுத்த னர். இவ்வாறு வெற்றி பெற்றதும் அதிகனுக்குரிய பெரியதொரு மலைமேல் பாண்டியன் தன் யானைகளை ஓட்டி மேயவிட்டுப் பாழ்படுத்தி அவன் நாடுநகரங்களைப் பின் ஆளவுரியார்க்கு அளித்துத் திறையளந்து வாழு மாறு பணித்துத் திரும்பினன்.

போர் முயற்சியிலே சென்ற விடமெல்லாம் சிறப் புப் பெற்று, ஒருவாறு திருப்தியு மடைந்து, செழியர் பிரான் தமிழ்வள நாடாம் பாண்டிய நாட்டுக்குவந்தனன். பல நாட்களாக அயலவர் நாடுகளை வெல்வதே கருத் தாக இங்கும் அங்கும் போய்க்கொண் டிருந்ததால், நாட்டில் நீர் வளம் நில வளம் இருந்த நிலையை நன்கு அறிந்து ஆவன செய்ய அவகாசம் பெறா தயினன். அமைச்சர், அரசனை இணங்கி வேண்டும் முயற்சி கள் எல்லாம் செய்து வந்தும், பாண்டியர் ஆட் சிக்குட்பட்ட பல இடங்களிற் பயிர் வளர்ச்சிக்கு

வேண்டுமளவு நீர் இல்லாத குறை வெளிப்படலாயிற்று இதனை அவன் நேரிற் கண்டு அறிதற்கு முன்பே, புலவர் பலர் அவனிடம் தெரிவிக்க விரைந்தனர். அறக்கள வேள்வி செய்து மழை வளம் சுரக்குமாறு செய்ய வேண்டுமென அவனிடம் அறிஞர் பலர் கூறுவாராயினர்.

தமிழ் நாட்டிற் பல பகுதிகளிலும் இருந்த அந்தணரும் அரசரும் தாந்தாம் செய்தற்குரிய வேள்விகளும் தெய்வ வழிபாடுகளும் செய்து மழைவளம் சுரக்கவென இறைவனை வேண்டி நின்றனர். எல்லாம் வல்ல இறைவனை வேண்டினால் எய்தாத பொருளும் உளதோ? நாடெங்கும் மழை பெய்து எங்கும் நீர் பெருக்காய் ஓடலாயிற்று. அவ்வாறு பெருகிய நீரை நிலங்களுக்குப் பயன்படுத்துமாறு சிறைப்படுத்தத்தக்க நீர் நிலைகள் இல்லாக்குறை பெருங்குறையாய் எவர்க்கும் தோன்றியது. இதனையும் அரசனே நிவர்த்தித்தற்குரியானாகையால், அவனிடம் செய்தி கூறுதற்கெண்ணி அறிஞரும் புலவரும் பாண்டிய நாடு அடைவா ராயினர். அவ்வமயத்தில் நெடுஞ்செழியனும் பாண்டிய நாட்டு மதுரை நகர் அடைந்து, அமைதியோடு செங்கோன் முறை வழுவாது அரசாளுதற்கு வேண்டும் முயற்சிகளோடு அறிவுடையோர் பலர் சூழ அரண்மனையில் வீற்றிருந்தான். உலக நலம் புரிய முன் வந்த பெரியாருட் சிறந்த குடபுலவியனார் அங்கு வந்தார். மாங்குடி மருதனார், நக்கீரனார் முதலிய புலவர் அரசன் அருகில் அமர்ந்திருந்தனர். குடபுலவியனார் நன்கு வரவேற்கப் பட்டார். பிறகு அரசன் அவரை உபசரித்து, மனக் கருத்தைத் தெரிவிக்க வேண்டினான்.

குடபுலவியனார்:—அரசே, என் உரையைச் செவிக் கொள்க. நெடிய கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகம் முழுவதையும் பிறரொடு பொதுமையறத் தாமே தனி யரசாய் ஆண்டு வந்த பண்டையர் வழி வந்துளாய். அவரோ, தம்முயற்சியாலரசும் பெருமையும் படைத்து உலகிலும் தம் புகழை நாட்டினர். அன்னார் வழித் தோன்றலாகிய நின் வாழ்நாள் ஒன்று பத்து நூறு ஆயிரம் பத்தாயிரம் கோடி பதுமம் என்ற அளவில் அடங்காது வளர்க. தண்ணீரிலே தொங்கும் காஞ்சிப்பூவைப் பற்றும் வாளை மீன்களும் நுண்ணிய ஆரல் மீன்களும் பெரிய உடம்பு படைத்த வரால் மீன்களும் அழகிய நிறம் விளங்கும் கெடிற்று மீன்களும் வாழ்ந்து வளரும் ஆழம் மிக்க அகழியும் வானம் அஞ்ச வளர்ந்துயர்ந்த நீண்ட மதிலும் உடைய பெரும்பழ நகராகிய மதுரை வேந்தே, இனிச் செல்லும் உலகத்து வாழ்வு வேண்டினும், அரசாது தோள் வலி கெடுத்து நீயே உலகிற்கு ஒரு பேரரசனாகவேண்டினும், சிறந்த புகழை இவ்வுலகில் நாட்டவிரும்பினும், இம்மூன்றும் பெறற்குரிய வழி யாதெனக்கூறுவேன்: கேள். பெரியோய், உலகில்வாழும் எவ்வகை உயிர்களும் நீரின்றி வாழ்வு பெறா. நீர் இன்றி யமையாத உடம்புகட்கு உண்டி உதவுவோர் உயிர் கொடுப்போரே. உணவினால் அமைந்த பிண்டமாகிய இவ்வுடம்பு, உணவையே முக்கிய ஆதாரமாய் உடையது. உணவு எனப்படுவது எதுவெனில், நிலத்தோடு சேர்ந்த நீரேயாகும். ஆகையால், நிலத்தோடு நீரைச் சேர்ப்பவர் இவ்வுலகில் உடம்பும் உயிரும் படைத்தாராவர். நல்ல விதைகளை விதைத்துவிட்டு நீர் வளம் பெறாது வான் நோக்கி யிருக்கும் நிலம், இடம் அகன்றதாயினும், ஆண்டு வரும் அரசன் முயற்சிக்குப் பயன்

படாது. ஆகையால், இந்நாள்காறும் எதிர்த்து நின்ற போர்களில் எல்லாம் வெற்றி பெற்று மீண்ட மன்னர் பிரானே, விரைவிலே இவ்வறம் விளங்கச் செய்க. இதனை அற்பமெனக் கருதலாகாது. ஏனெனில், நிலம் மிக்க இடங்களில் நீர் வளம் பெருக நீர் நிலைகள் ஆக்கி வைத்த அறத்தகையாளரே இவ்வுலகில் இனிச் செல் லும் உலகவாழ்வும் வெற்றியும் புகழும் பெறுவாராவர். அவ்வாறு செய்யாதவர் இம்முப்பயனையும் இழந்து தம் வாழ்வை வறிதே கழித்தாராவர். அறமே அரசருக்கு ஆக்கம் தருவதாம் என்பதை, ஆன்றோர் பலராற் சூழப் பட்டிருக்கும் நெடுஞ்செழியனே, நினக்கு யான் கூற வேண்டுமோ? நாடெங்கும்வேறு குறையில்லையாயிருக்க இவ்வொரு குறை நினது புகழ்க்கு மாசுவிளைக்கக் கூடி யதாம். ஆகையால், வேண்டும் முயற்சிகள் செய்ய அதி காரிகட்கு ஆணையிட வேண்டுகிறேன்.

நெடுஞ்செழியன்:—புலவரேறே, என் கடமையை இயற்றுவதில் யான் சிறிதேனும் வழுவினால், அதனை யறிந்து திருத்த வுரியார் புலவர் பெருமக்களே யன்றோ? எங்கெங்கு நம் நாட்டில் நீர் நிலைகள் தோண்டுவிக்க லாமோ, அங்கங்கெல்லாம் நாளை முதலே பணி தொடங்க ஆணை யிடுகின்றேன்; இந்நாள்வரை செய்யா திருந்த குறையைப் பொறுக்கவும் வேண்டுகிறேன்.

நக்கீரர்:—அரசரே, நம் புலவர் பெருமான் குடபுல வியனார், எம்மைப்போலப் போர் ஒன்றையே புகழ்ந்து பாடுவர் என எண்ணியிருந்தோம். இன்று இங்கு அவர் பேசிய பேருரையைக் கேட்குங்கால், அது ஒரு செய்யு ளாய் அமையின் தமிழ் நாடும் தமிழ் மொழியும் உள்ள நாள்காறும் அவர்க்கும் நுமக்கும் புகழ் விளங்கத்தக்க உதவியாம் என்று தோன்றுகிறது.

மாங்குடி கிழார்:—இத்தகைய அறச் செயல்களை அரசன் புரிந்தான் என்பதைப் பிற்காலத்தார் அறிய அதுவே சிறந்த ஆதாரவாம். ஆதலால், யானுமவ்வாறே கருதுகிறேன்.

நெடுஞ்செழியன்:—குடபுலவியனு ரென்ற புலவர் பெருந்தகையே, நும் கருத்துக்கள் உரைநடையிலேயே என் உள்ளத்தை உருக்கின. செய்யுளாயிருப்பின், இன்னும் சிறப்பே யன்றோ?

குடபுலவியனார்:—செழியர் பிரானே, அன்பின் செல்வர்களே, நீவிர் எல்லீரும் என்னைப் பொருட் படுத்தி இவ்வாறு ஆணையிடுவதால்யான் கூறியவற்றைச் செய்யுளாய் உரைக்கின்றேன்:

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்,
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயுள் தானே;
நீர்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉம் இனவாளை
நுண்ணாரற் பருவராற்
குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதில்
மல்லல்மூதூர் வயவேந்தே,
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்

தகுதி கேளினி மிகுதி யாள,
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம் ;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரி யோர்ஈண்(டு)
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே ;
வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகல்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்,
அடுபோர்ச் செழிய, இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே ;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.'' *

நெடுஞ்செழியன்:—செய்யுளின் இன்பம் செய்யுட்கே உளது. சொல்லுக்கும் பொருளுக்கும் புலவர் கருத்தைத் தொடர்ந்து செல்லும் ஆற்றல் இருப்பதாலன்றோ, இவ்வின்பம் அமைகின்றது ? இப்பரிசில் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

---

* புறநானூறு—செய்யுள், 18.

## VI

**வா**ழ்வும் தாழ்வும் எவர்க்கும் உள்ளவை. மலை யளவு நிதிபடைத்து வாழ்ந்திருந்தோர் அணுவள வும் இன்றி இழந்து அல்லற்படுவது முண்டு. மன்னர் பணியும் கழலினனாய் முடியும் குடையும் கொடியும் கொண்டு புலவர் புகழ வாழ்ந்திருந்த அரசசெல்வமும் நிலையின்றே! கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறை என்ற மன்னவன், புலவர் பலர் புகழ்ப்பெற்ற சிறப்பினனாய்ச் சோழன் இராய சூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப் போரில் வென்றவனாய் இருந்தும், தன் குடிப்பழியைத் துடைக்க வெண்ணிப் போர்க்கு வந்து தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனிடம் தோல்வி பெற்றதோடு, சிறையி லும் அடைபட்டான். 'சிறை வீடுபெற வழி யேதேனும் உளதோ?' என ஆராய்வதையன்றிச் சிறைக் களத்தில் அடைபட்டுக்கிடந்த அவன் சிந்தையில் வேறு என்ன எண்ணம் இருக்கும் ?

சிறைக்களத்திற் சேரனை அடைத்தபிறகு பாண்டி யன் அவனைப் பற்றிச் சிறிதும் சிந்தை செய்திலன். நெடுஞ்செழியன் சிறந்த குணங்கள் பலவற்றுக்கும் நிலைக் களமாய் இருந்தும், பகைத்து எதிர்த்தாரை ஒறுத்து அடக்கு முறையில் மிகவும் வன்னெஞ்சுடை யவனாகவே யிருந்தான். அவன் மனத்தை அவ்விஷ யத்திற் சிறிது மாறுபடுத்தப் புலவர் பலரும் முயன்று வந்தனர். ஆயினும், பயன் ஒன்றும் பெற்றாரிலர். இங்கு

இங்ஙனம் இருக்கையில், சேர நாட்டிலே யிருந்த குடி மக்கள் தாம் அரசு இன்றி அல்லற்படும் இழிவு பொறாது தம் அரசனை எவ்வாற்றாலேனும் மீட்க முயல் வாராயினர்; சிறைக் காவலரை எநத வழியாலேனும் தம் வசப்படுத்த முயன்றனர். அஃது இயல்வதாயில்லை. தம் அரசர் பிரானுக்குச் சிறையிலிருந்து வெளியேறற்கு ஏற்ற வழி செய்ய முயன்றனர். சென்றவிடங்களில் எல்லாம் போர் வென்று வெற்றித் திருவாற் பெருமித முற்று அமைதி பூண்டிருக்கும் பாண்டியன் படைஞர் அறியா வண்ணம் அம்முயற்சி செய்வது எளிதின் இயலுமோ ?

இறைவன் திருவருள் உளதேல், இயலாததும் உண்டோ ? சேர நாட்டார் சிலர் பாண்டிய நாட்டா ரோடு உறவின் முறையாற் பயின்று, அடிக்கடி மதுரை நகர்க்கு வரப் போகப் பழகிக்கொண்டனர். சேரநாடும் பாண்டியர் வசமாய் இருந்ததால், அயலவர் வருகை அக்காலத்திற் பெரிதும் ஆராய்ச்சிக்கிடமாய் இருக்க வில்லை. சேரநாடு வெல்லப்பட்டதாயினும், பாண்டியன் மறவர், நாடு காவற்பொருட்டு வேண்டுமளவு அங்கு நிறுத்தப்படவில்லை. எங்கும் அமைதி கொண்ட காலத் தில் மறைவான சூழ்ச்சிகள் நடக்குமென எவரேனும் எதிர் பார்ப்பரோ? இந்தச் சந்தர்ப்பம் அறிந்து, அகழி யின் ஓரத்ததாகிய சிறைச்சாலைக்குக் காவற்காட்டில் பெரியதொரு மரத்தடியில் இருந்த முழையிலிருந்து நுழை வழி செய்விக்கும் முயற்சியில் சேர நாட்டார் முனைந்தனர். பாண்டிய நாட்டார் எவரும் அறியா வண்ணம்இரவிலேயே வேலைசெய்து மூன்றுமாத காலத் துக்குள் ஒரு வழி உண்டாக்கி, அஃது அமைந்திருக்கும் ஆற்றையும் தம் அரசனுக்குச் சிறியதோர் ஓலைச் சுரு

ளால் தெரியப்படுத்தி, அவனுக்கு அவசிய மிருப்பின் உதவுமாறு படைக் கலங்களும் உதவினர்.

உதவி அருகில் இருப்பதை அறிந்துகொண்டு, சேரவரசன் தன்னைப் பிணித்துச் சுவரோடு இணைத்திருந்த சங்கிலியைத் தன் புய வலிமையால் முறித்தான்; கால் கைகளிலிருந்த விலங்குகளைச் சுவர்க் கல்லோடு மோதியும் மூச்சடக்கி உடம்பைப் பருக்கச் செய்தும் தகர்த்தான்; படைக் கலங்களைக் கையில் எடுத்துக்கொண்டான். இவ்வளவும் நிகழும் என்பதை எதிர் பாராதிருந்த சிறைக் காவலர் தளைகள் தகர்க்கப்படும் ஓசை கேட்டு ஒருபதின்மர் உள் நுழைந்தனர்.

படைக்கலம் தாங்கித் தனது விடுதலையைப் பெறு முயற்சியில்முன்னிற்கும் ஒரு மன்னனைச்சிறைக்காவலர் பதின்மர் தடுக்க வியலுமோ? புறத்தார் அறியா வண்ணம்சேரன் அப்பதின்மரையும்இடித்தும், துகைத்தும், தூண்களிலும் சுவர்களிலும் மோதியும், வேலாற் குத்தியும், வாளால் வெட்டியும், காலால் மிதித்தும், அரை நாழிகைப் பொழுதுக்குள் கொன்று குவித்துத் தனக்கென அமைத்த நுழை வழியைப்பற்றி வெளியேறினன். காவற்காட்டில் தம் அரசன் வருகையை எதிர் பார்த்திருந்த சேர நாட்டார், அவனுக்கு மாறு வேடத்துக்கு வேண்டிய உடையும் வாயு வேகமுடைய பாய்மா ஒன்றும் உதவி மறைந்தனர். அவற்றின் உதவியால் அவன் எவரும் அறியாமல் தன்னாடு புகுந்தான்.

மறுநாட் காலையிற் சிறைக் கோட்டம் புகுந்த காவலர் அங்கிருந்த கோரக்காட்சியைக் கண்டு, நெடுஞ்செழியன் அத்தாணி மண்டபத்தில் புலவர் பலருடனும் அமைச்சருடனும் கொலு விருக்கையில் வந்து, வாய் குழறித் தெரிவித்தனர். சிங்கவணையில் இருந்த நெடுஞ்

செழியன் கொண்ட சினத்துக்கு எல்லையில்லை. ஆத்திரம் பொங்கப் பின் வருமாறு பேசினன்:

"அறிஞர்களே, இஃது ஆண்மைக்கு அழகோ? போரில் யாம் வென்று சிறைப்படுத்தினல் யாமே சிறை வீடு செய்து அரசு உதவிஞற் பெற்று வாழலாமே யன்றி இவ்வாறு சிறைக்காவலர் பதின்மரைக் கொன்று நுழை வழி ஒன்று உண்டாக்கிக்கொண்டு தம் நாட்டவர் உதவியால் வெளியேறிச் செல்லலாமோ? சேரசிங்காதனத்தில்முன்போலவீற்றிருக்கச்சென்ருர்சேரர். சேரர் குடியிற் சிறப்புற வாழப் பிறந்த இவ்வீரர் சோரர் போல இச்செயல் செய்தது மிகவும் இழிவேயன்ருே? இவரும் புலவராற் புகழப் பெற்றவர்தாமே! இச்சிறை நீக்கமும் இவர்க்கு ஒரு சிறப்பாகப் புலவராற் புகழப்படுமென்ருே? என்னே இவர்தம் திறமை! என்னே இவர் சூழ்ச்சி! என்னே இவர் செய்த செயல்! சிறைக்காவலர் பதின்மரைப் போர் செய்து வென்ற இவரே வீரர்! என் ஏவலர்பதின்மரைக் கொன்ற இவரை நான் மறு முறையும் சிறை செய்து அறிவு புகட்டுவேன். என் நாட்டு வீரர் பதின்மர்க்கு இணையாக இவர் நாட்டுவீரர் நூற்றுவரைக் கொல்வேன். 'போர் புரிந்தது போதும்; இனி அமைதியொடு வாழலாம்' என்றுஎண்ணியிருந்த என்னை இவ்வாறு போர் புரியத் தூண்டிய சேரர்க்கு என் நன்றி உரியதே!

இதைக்கேட்ட அமைச்சர் தலைவர் எழுந்து நின்று, பின் வருமாறு சில சொல்லலாயினர்:

"அரசர் பெருந்தகையீர், நுமது சினத்தின் முன் நிற்க வல்லார் எவரே! ஆயினும், எவர்க்கும் சுதந்தரம் உயிரினும் பெரிதன்ருே? வேந்தனய் வாழ்ந்த வீரனெருவன் எத்துணைக் காலம் சிறையில் அடைபட்டுக் கிடப்பான்? அவன்

குணக்கேடனு மல்லன்; நாட்டை நன்கு ஆளத் தெரியாத வனுமல்லன்; தன் குடிப்பழியை நீக்கக்கருதி நம்மோடு எதிர்த் தான்; இறைவன் செயலால் தோல்வியுற்றான். நாமே அவ னுக்கு அரசை நல்கி விடை கொடுத்திருப்போமாயின், நன் றாய் இருந்திருக்கும். இனியும் ஒன்றும் குறையில்லை. இனி நம் அரசுக்கு அடங்கித் திறையளந்து வாழுமாறு தூதனுப்பு வோம். அவன் அறிவுடையானாயின் நம் சொல்லுக்கு இணங்கு வான். மேலுமவனைப் பகைத்தல் நமக்குப் பெருமையன்று.''

மாங்குடி மருதனார்:—யானும் அதுவே கூற நினைத் தேன். தமிழ்ப் பெருந்தொண்டனும் தமிழ்நாட்டிறையே, கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும் பொறை சிறை வீடு பெற்றது அவனுக்குச் சிறப்பே அளிக்கும்; இழிவு தராது. சிறையினுள் அடங்கிக் கிடப்பவனினும், எவ்வழியாலேனும் அதினின்று புறம் போந்து சுதந்தரம் பெறுவோன் சிறந்தவன் அன்றோ? அவன் நாட்டுக் குடிகள் அவனுக்கு உதவி செய்திருப்ப தால், அவர்களை ஆள அவனே தகுதியுடையான் என்ப தும் விளங்கவில்லையா? போரில் வென்ற நாடுகளை அழித்துப்பாழாக்கிவருவதே தம் கடமையாகக்கொண்ட புரவலர் பின் அந்நாடுகள்நன்கு வாழவேண்டுவன செய்வ துண்டோ? சேரனைச் சிறையிட்டு ஆறு மாத காலத் துக்கு மேல் ஆகியும், அந்நாட்டின் அரசின் நிலை என் னாயிற்று என்று அறிய நமக்கு அவகாச மில்லையே! ஆகையால், குடிகள் நன்மையைக் கருதும் போதும் அவன் செயல் இகழ்ச்சிக்குரிய தாகாது. ஆனால், அர சர்க்கரசே, விடுதலைச்சீட்டை நின்னிடம் அவன் நேரிற் பெற்றிருப்பானாயின், நினக்கு அது பெருஞ்சிறப்பை விளைத்திருக்கும். நம் நாட்டுக்கு அக்குறை யொன்றே யுளது. அவ்வேந்தன் ஐங்குறு நூறு என்ற தொகை

நூலைப் புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரைக் கொண்டு தொகுப்பித்துளானுகையாலும், புலவரை ஆதரிக்கும் குணம் வாய்ந்தவனுகையாலும், செங்கோல் நெறியிற் சிறிதும் பிறழாதவனுகையாலும், விளங்கில் என்னும் ஊரார்க்குப் பகைவரால் விளைந்த துன்பத்தைத் தீர்த்தானுகையாலும், புலனழுக்கற்ற அந்தணாளராகிய பொய்யாநாவிற் கபிலர்க்கு நண்பனுகையாலும், எம்மால் இகழத் தக்கவனுகான். யான் நின் முன்னிலையில் இவ்வாறு அவனைப் புகழ்ந்ததுபற்றி மனம் வருந்தாதொழிக. வாழ்வும் தாழ்வும் வெற்றியும் தோல்வியும் உடம்பும் உயிரும் அரசும் நாடும் படையும் குடியும் அமைச்சும் செல்வமும் அரணும் அகழியும் என்னுமிவற்றுள் ஒன்றும் நிலையாய் நிற்பதில்லை. இவ்வுண்மையை உணர்ந்த நினக்கு யான் கூற வேண்டுவதும் ஒன்று உண்டோ? அறமே விழுத்துணையாம்.

நெடுஞ்செழியன்:—ஆசிரியப் பெருந்தகையீர், இந்நாள்காறும் எனக்குப் புகட்டாத ஓர் அருங்கருத்தை இன்று இங்குப் புகட்டுவீராயினீர். இனி எனக்கு எவர் மேலும் பகையில்லை. சேரன் சுதந்தரம் பெற்று இன்புற்று வாழ்க.

அமைச்சர்:—இதுவே யாம் எதிர் பார்த்திருந்த அரசராணையாம்.

மாங்குடி மருதனுர்:—அரசே, இன்று யான் நினக்குத் தெரிவிக்க எண்ணிய செய்திகள் பல. எல்லாம் வெளிப்படப் புகலுதலும் முறையன்று. புலவர் அவைக்களத்துக்குப் போவோமாயின், அங்குச் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கருதுகிறேன். மதுரைக் காஞ்சி என்றதொரு செய்யுள் இயற்றியிருக்கின்றேன்.

அதனை அவ்வவைக்களத்தின்கண்ணே அரங்கேற்றம் செய்ய விரும்புகின்றேன்.

நெடுஞ்செழியன்:—அவ்வாறே செய்வோம். இனி இச்சபை கலையலாம்.

# VII

"மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே!"

**பா**ண்டியன் நெடுஞ்செழியன் அரசுரிமையை யேற்றுப் பல ஆண்டுகள் ஆயின. அறப் போர் பல விளைத்தனன்; அறக்கள வேள்விகள் பல செய்தனன்; மறக்கள வேள்விகள் பல செய்தனன்; புலவர் புகழும் பேறு பெற்றனன்; எண்ணிறந்த செய்யுட்களைத் தோளிலே சூடினன்; நாடெங்கும் கல்விச்சாலை, அறச்சாலை, மருந்துச்சாலை அமைத்தனன்; சோலைகள் செய்வித்தனன்; குளங்களும் சிற்றாறுகளும் வயல் வளம் பெருகத்தொட்டனன்; உலகம் புகழுமுத்தமக் குணங்கள் பல தன்னையே தேடியடைய வாழ்ந்து வந்தனன்.

மாங்குடி மருதனார், நெடுஞ்செழியனது ஆதரவு பெற்றிருந்த புலவருட் பெரியா ராவர். அவர் அவனுக்கு இனிச் செல்லும் உலகத்து வாழ்வைப் பற்றியும் இவ்வுலக வாழ்வின் நிலையாமையைப் பற்றியும் போதிக்கக் கருதினார். அக்கருத்தை யெல்லாம் அடக்கி மதுரைக்காஞ்சி என்றதோ ரகவல் செய்தார். அஃது எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளில் அமைந்தது. அரசன் அதனை அமைதியுடன் செவியேற்று, தாம் அதன் கண் அமைத்துள்ள கருத்துக்களை அறிந்து பயன் பெற வேண்டும் என்பது புலவர் நோக்கம். அத்தாணி மண்டபத்தில் சேரனைப்பற்றிய பேச்சு நிகழ்ந்தபோது

அதனைப்பற்றிச் சிறிது குறிப்பித்தார். அதனால், நல்ல தொரு நாள் அமைத்து, நல்லோரையில் புலவர் அவைக் களத்திற் புகுந்து, நெடுஞ்செழியன் அரியணை யமர்ந்து நக்கீரர், கல்லாடர், மாங்குடி கிழார், குடபுலவியனார், கபிலர், பரணர் முதலிய புலவர் பலர் புடைசூழவிருக்க அச்செய்யுளைக் கேட்கச் சித்தமா யிருந்தான்.

மாங்குடி மருதனார் அங்கு உயர்ந்ததோர் ஆதனத் தில் வீற்றிருந்து தம்செய்யுள் முழுவதையும் முறையே வாசித்து உரை விரித்தார். அவற்றைக் கேட்ட அரசன் பெரிதும் உவகை கொண்டான். கருத்து இன்னதென அவனுக்கு ஒருவாறு விளங்கியதாயினும் புலவர் வாய்ப் படக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, "ஆசிரியரே, இப்பெருஞ்செய்யுளில் தாம்அமைத்திருக் கும் உட்கருத்து யாதென அறிகிலேன். அதைத் தெரி விக்க வேண்டுகிறேன். அன்றியும் நயமுடைப் பகுதிகள் சிலவற்றை மறு முறையும் எடுத்து விளக்க வேண்டுகி றேன்," என்று கேட்டுக்கொண்டான். புலவர் பின் வரு மாறு பேருரை நிகழ்த்தினர் :

"நாடெல்லாம் நலம்பெருக நிலவளம் நீர்வளம் கொழிக்க, மெய்ம்மொழியே எக்காலமும் கூறும் புகழ் பெற்ற நல்லமைச் சரோடு ஊழிக்காலம் அடிப்படப் பல வெள்ள ஆண்டுகள் அரசாண்ட உலகமன்னவர் குடித்தோன்றல், இராவணனைத் தென்றிசையாளா வண்ணம் கந்தருவத்தாற் பிணித்துக் கடற் கப்பாற் படுத்திய அகத்திய முனிவர் வாழும் பொதிய மலைக் குரிமையுடைய புரவலரேறே, அம்முனிவர் பிரான் தந்த தமி ழணங்கைத் தாங்குந் திருப்பணியில் அவர் வழி வந்தோய், இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப் பொருது வென்றும் அமையாமற் பிற குறிஞ்சி நில வேந்தரை வென்று தலைமை படைத்த அரசே, ஆழி வடிம்பலம்ப நின்றபாண்டியன் குலத்

துப்பிறந்த குரிசிலே, நீ சினத்தால் மரங்களைச்சுட்டு மலைகளை நீறாக்கும் பெரிய இடியை யொப்பாய்; தெற்கண் குமரியும், வடக்கண் இமயமும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் எல்லை யாக உள்ள பாரத நாட்டில் வாழ்வோ ரெல்லாம் ஏவல் கேட்டு அடங்கி நடக்க வெற்றியோடு சிறந்து விளங்கிய வேந்தர் வேந்தன் ஆவாய்; கடற்கரையையும் நாவாய்கள் வந்து தங்கும் துறைமுகத்தையும் உடையதும், கடல் அகழியே சூழ்ந்ததும் ஆகிய வடநாட்டகத்ததாகிய நெல்லூரைக் கைக்கொண்ட கொற்றவ, கல்வி சிறந்த பாணர்க்குக் களிறுகளைக் கொடுத் தும் பொற்றாமரைப்பூச் சூட்டியும் அணிகலங்களை வாரிக் கொடுக்கும் வேந்தே, குட்ட நாட்டவரை வென்ற அரசர் பெருந்தகையே, உழவு வாணிகம் என்ற இருபெருந் தொழி லாற் சிறப்புற்ற குடி மக்கள் ஏவல் கேட்கத் தலையாலங்கா னத்து எதிர்த்தார்க்கு அச்சம் வர நின்று சேரன், செம்பியன், திதியன்,எழினி, எருமையூரன்,இருங்கோ வேண்மான்,பொரு நன் என்பாரை வென்று களங்கொண்டு களவேள்வி இயற்றிய புகழ் வேந்தே, நின்னுடைய நண்பர் குடியை உயர்த்துவை; எதிர்த்தார் அரசினைப் பெயர்க்குவை ; முத்து விளையும் கடற் கரை யருகாகிய கொற்கையோர் தலைவ, போர்ச்சிறப்பும் ஆண்மையும் வஞ்சினங் கூறும் ஆரவாரமும் உடைய தென் றிசையில் வாழும்பரதவர் போரேறே, பிறர்க்கு அரியபொருளை யெல்லாங் கொண்டு உரிய பொருள்களைப் பலர்க்கும் கொடுத்து, நாட்டில் வாழ்ந்தனை ; அவ்வாறே அமைதியோடு உள்ளூரில் உறைய விரும்பாது, மேலும் பகைவரைத் தேடி அயல் நாடுகட்குப் புறப்பட்டாய். நீ போர் செய்து அழித்த நாடுகளில் பல யாண்டுகள் தங்கி, அந்நிலங்களைப் பண்படச் செய்த பண்டையர் குலக் கொழுந்தே, பகைவர் நாடுகளை அழித்துக் காடாக்கிப் பசுத்திரள் தங்கின வழிகளிலே புலி கள் குடிபுகவும், சான்றோர் இருந்த அம்பலங்களிலே பேய்கள் ஆடவும், மனையகங்களில் மகளிர் அழவும், அவர்கள் தத்தம் கேளிர் வாழும் ஊர்களிற் சென்று வாழவும், பொய்கைகளில்

கோரைகள் வளரவும், வயல்களிலே பன்றிகள் திரியவும் இவ்வாறு பல வழிகளாலும் குடிகள் வாழ்வின்றிக் கெட்டுப் பாழாய்க்கிடக்கச் செய்தனை. சோழமண்டலத்தையும் தொண்டைமண்டலத்தையும் நினக்குரியவையாய் வளைத்துக்கொண்டு அரசியல் நெறி பிழையா வண்ணம் பெரியோர் சென்ற வழி பின் பற்றி அவற்றை ஆண்டனை. மேற்றிசையில் தோன்றிய நினது குல முதலாகிய பிறையைப்போல நினது வெற்றித் திரு வழிவழிச் சிறப்பதாக. கிழக்குத்திசையில் தோன்றிய பூரணச் சந்திரன்போல நின் பகைவர் ஆக்கம் நாடோறும் கெடுக. உயர் நிலை உலக வாழ்வும் அமுதும் பெறுவதாயினும், பொய் கூறு வாய்மையாய், மக்களும் தேவரும் ஒருங்கு வந்து எதிர்ப்பினும் பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து நடத்தல் செய்கிலாய்; தென்திசையில் மலைகளினிடையில் வாணன் வைத்த பொன்னும் பொருளும் பெறுவதாயினும், பழி வரும் நெறி செல்கிலாய்; பொருளைப் பிறர்க்கு உதவும் கருத்தோடு இசை நாடுவை; நினது சேண் விளங்கு நல்லிசை ஒரு காலமும் கெடாது நிலைக்க. இரு சுடர் தோன்றிய காலமுதல் இன்றுகாறும் வரும் நினது குலத்தோர் புகழைப் பாடி நின்னை மகிழ்விக்கும் சூதர்க்கு வைகறைக் காலத்தே அவர் பணியைப் பாராட்டித் தேரும் குதிரையும் கொடுத்தும் வாழ்வாய். சீரிய படைத் தலைவர் துணையால், பணிந்தோர் நாடுகளை நன்கு ஆண்டு, பணியாதவர் நாடுகளை அடக்கும் பொருட்டுப் பல நிலங்களுக்கும் சென்ற பல வேல் மன்னர், முன்னாளிலே புகழ் பரவ உலகம் ஆண்டு கழிந்தோர் கடல் திரை எறியும் மணலினும் பலராவர். நீர் வள மிகுதியால் ஆறுகள் பெருகிச் செழித்துவளர உதவிய யானைமறையும் கதிர்களையுடைய கழனிகளிலும் மடுக்களிலும், மீன் முகந்து விற்பார் ஓதையும், கரும்பாட்டும் எந்திர ஓதையும், பெண்டிர் நீராடும் ஓதையும், ஆகாயத்தில் நிரம்ப மருதத் திணை வளம் சிறந்த நாடு ஒருபாலும்; தினையை யறுக்க, வரகு முதிர, குழிகளிலே மணிகள் கிடந்து இமைக்க, மான்கள் துள்ளி விளை

யாட, முல்லைத் திணை வளம் சிறந்த காடு ஒருபாலும்; நறிய அகிலையும் சந்தனத்தையும் வெட்டி ஐவன நெல்லும் இஞ்சியும் மஞ்சளும் மிளகும் பிறவும் குவியத்தினைப்புனத்துக் கிளி கடியும் ஆரவாரமும், அவரை இலையைத்தின்னும்ஆமாவை யோட்டும் கானவர் ஆரவாரமும், குறவர் குழிகளிலே பன்றி யைக் கொன்ற பூசலும், வேங்கைப் பூப்பறிக்கும் மகளிர் புலி புலி என்று கூவும் கூச்சலும், புலியின் முழக்கொடு பிறவும் உடையதாயுள்ள குறிஞ்சித் திணை நலஞ் சான்ற மலைகள் ஒரு பாலும்; கோடை வெயில் மிக்கு ஆறலைப்போர் வாழும் பாலைத் திணை சான்ற பாலை நிலம் ஒருபாலும்; கடல் முத்தும் சங்கும் செட்டிகள் கொணரும் பல வேறு பண்டங்களும் கழிக்கரை யில் உப்பளங்களில் ஆக்கிய வெள்ளுப்பும், மரக்கல மீகாமர் வாழும் இடங்களும் பிறவும் உடைய நெய்தற்றிணைக்கு அமைந்த கடற்றுறை யிடங்கள் ஒரு பாலும் ஆகிய இவ்வைந் திணை வளங்கள் பொருந்திய பாண்டிய நாட்டுப் பேரரசே, பாடல் சான்ற இந்நாட்டின் நடுவண், நிலனும் வளனும் கண்டு அமையாத மான விறல் வேள் என்னும் குறுநில மன்னனது அழும்பில் போன்ற நாடு இழந்தவர்களும், செல்வ மிக்க பல வூர்களிற் குடியிழந்தவர்களும், பழம்பகை யுடைய போர்த் தொழில் மிக்க அரசருமாகிய பிறர் நுழையலாகா வண்ணம் அமைக்கப்பட்ட அகழியினையும், உயர்ந்த அரணகத்து வாயிலை யும், பல பெரிய வீடுகள் அமைந்து யாறு கிடந்ததுபோலிருக் கும் பல அகன்ற தெருக்களில் பல் வேறு மொழி பேசும் மக் கள் வாழும் இடங்களையும் உடைய மதுரை நகர்த் தலைவ, பல வகைத் தொழிலாளரும் வியாபாரிகளும் வந்து வந்து போய்க்கொண்டிருக்கும் நகர்ச் செல்வ, பௌத்தப் பள்ளி களும், மூன்று வேதங்களைப் பொருள் விளங்க வோதி யாகங் கள் செய்து ஒழுக்கஞ் சிறந்து உயர் நிலையுலகம் இங்கே பெறி னும் அறம் பிழையா அன்புடை நெஞ்சினராய் வாழும் அந்த ணர் பள்ளிகளும், சாவகர் பூவும் புகையும் ஏந்தித் தொழச் சென்ற காலமும் வருங்காலமும் உணர்ந்துரைக்கும் இயல்

பொடு வானமும் நிலமும் முழுவதும் உணரும் விரதத்துக் கிளையாத உடம்புமுடைய ஆன்றடங்கிய அறிஞராகிய அமணர் வாழும் ஆசீவகப்பள்ளியும், அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச் செற்றமும் உவகையும் செய்யாதுகாத்துத்துலாக்கோல் ஒத்த செம்மை உடையதாய்ச் சிறந்த கொள்கையுடன் அறங்கூறும் அவையகமும், யாகாதிகள் செய்த பெரியாரும், காவிதி முதலிய பட்டங்கள் பெற்ற அமைச்சரும் பிறரும் வாழும் இடங்களும், பல வகை மக்கள் இனத்தார் சஞ்சரித்தலாலும் தத்தம் தொழில் இயற்றுதலாலும் எழும் முழக்குப் பலவகைப் புள்ளொலி போலத் தோன்றும் மதுரை மூதூர் மல்லல் வேந்தே, நின் நாட்டகத்தே நள்ளிராப் பொழுதிலே நினது ஆணை மேற்கொண்டு, கருஞ்சட்டை அணிந்து கல்லும் மரமும் அறுக்கும் கூர்மையுள்ள நிலம் அகழும் உளியுடன் தூக்கிட்ட வாள் தாங்கிச் செருப்புத் தொட்டு நடந்து, நீலக் கச்சையும் கருநுண்டுகிலும் பூண்டு நூலேணியை அதனுள் மறைத்துக் கொண்டு பிறரது பொருளைக் கவர்வதே பிழைப்பாய்த் திரியும் கள்வரைப் பிடிக்கும்பொருட்டு, அவர் செல்லும் வழியெல்லாம் மறைவாய்ச் சென்று யானையைத் தேடும் புலியைப் போலத் தூங்கா விழிப்போடும் அஞ்சாக் கொள்கையோடும் களவு நூல் நெறியறிந்து பின் பற்ற முயல்கின்ற காவலர் காவல் செய்வர். இராப்பொழுது இவ்வாறு கழியப் பகற்பொழுது நூலாராய்ச்சியிலும் இசையின்பம் துய்த்தலிலும் கழிகின்றது. இன்னும் இவை போன்ற பல வகை வளங்களும் அமைந்த நகர்க்கண் நெடுஞ்செழிய, நீ அரண்மனையில் அமர்ந்திருந்து, பாணர் பாடினியர் புலவர் வயிரியர் மழவர் படைஞர் முதலியோர்க்கெல்லாம் ஈந்துவப்பாய்.

"நண்பராயினோர் பலர்க்கும் சிறப்புச்செய்து மகிழ்ந்தனை; இந்நாட்டில் அரியவையாய்ப் பிற நாடுகளில் எளிதிற் பெறலாகும் பொருள்களைக் கொணர்ந்து எல்லாருக்கும் கொடுத்து, நற்பொருள்களை விளக்கி யுரைக்கும் நூல்களை ஆராய்ந்துணர்ந்து நின்புகழே எவ்வுலகிலும் பரவ நிறுத்திக் கடல் நடு

விலே தோன்றும் ஞாயிறு போலவும் பன்மீன் நடுவண் நிறை மதி போலவும் மிக்க சுற்றத்தாரோடு பொலிந்து விளங்கிப் பொய்யா நல்லிசை படைத்த மாறன் முதலாகப் பகைவரை வெல்லும் வாட்படையினராகிய இளங்கோசரும் ஐம்பெரு வேளிரும் பிறரும் முறைப்படி நின் வாய்மொழி கேட்ப அழகு விளங்கும் அறங்கூறவையத்தார் நெருங்கி நின்று நினது அறச்சிறப்பைப்புகழ்ந்து வாழ்த்த உலகில் துய்த்தற்குரிய பல வகை யின்பங்களும் அடைந்து, இனிது நினக்கென இறைவன் அருளிய ஊழிக்காலம் வாழ்வாயாக. உலகிலே இன்ன பல வகை வாழ்வும் பெற்று இறந்து மறைந்தோர் பலர் என முன்னமே கூறினேன். அவ்வாறு நின் வாழ்வு மறையா வண்ணம் யான் கூறுவதற்குச் செவி சாய்ப்பாயாக. அஃது என்னுற் காட்டுதல் அரிது. புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதி நல்லாசிரியரையடுத்துக் கேட்டுத் தெளிந்ததுபோல நீயும் நல்லாரை அடுத்துக் கேட்டுத் தெரிந்துகொள்வாயாக. அந்தணர்க்குக் கூறிய முறைப்படி தாம் செய்தற்குரிய கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங்களை ஆராய்ந்து, மெய்ப்பொருளுணர்ந்து, வீட்டின்பம் எய்திய ஆசிரியரிடத்தே தானும் அந்நெறி பற்றிச் சென்று முத்திப்பேறெய்திய நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆகிய நெடியோன்போல நீயும் பேரின்பம் பெற முயல்க. மெய்ப் பொருளைத் தெளிவுறுத்த வல்லவர் யாரெனில், கீதையருளி உலகினை உய்யக் கொண்ட கண்ணனைப் போன்ற பெரியாரே யாவார். அவ்வாறு பெரியோரை யடுத்து மெய் துணிந்து நீ பெற்ற கந்தழியின் அதிசயமும் பின்பு பெற்ற மனவமைதியும் குற்றமற்ற சிறப்பினை யுடைய சான்றோர் பலரால் எடுத்து விளக்கப்பட்டுப்பேரின்பப்பெரும் பேற்றில் வைகுவாயாக. அவ்வரும்பேற்றை நுகராது, நல்லோர் சேர்க்கை பெற்ற நினக்கு அற்பமாகிய ஐம்பொறிகளின் புலனுகர்ச்சிக்கு உதவும் உலகப்பொருள்களோடுளன்ன உறவுளது? நின்னிடம் வந்த மாயை கெடுவதாக. அம்மா

*யையை வெல்லும் வலி பெற்ற தலைவனே, பெரும்பொரு ளாகச் சுட்டுக் கடங்காத செல்வமாய் உள்ள ஆத்மானுபவப் பேரின்பம் பெறுதலே நினது வாழ்வின் நோக்கம் எனக் கொள்வாயாக.*

"பைங்கண் இளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோற்
றிங்கள் நெடுங்குடையின் கீழானை—அங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டும் கூடற் றமிழ்."

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்?"

*"அரசே, என் கருத்தை இன்னதென அறிந்தாயன்றோ? இச்செய்யுளை ஏற்றுக்கொண்டு இதனாற் பெறலாகும் பயனைப் பெற இனி முயல்வாயாக."*

நெடுஞ்செழியன்:—*ஆசிரியர் ஆணையைத் தலைமீது தாங்கினேன்.*

நக்கீரர்—*அரசர் பெருமானே, புலவர் பெருந் தகையீர், மதுரைக்காஞ்சியென்ற இப்பெருஞ்செய்யு ளின் கருத்து இத்துணை எளிதாக விளக்கப்பெறவும், இதனுள் இன்ன அருங்கருத்துக்கள் அமைந்திருத்தலை யறியவும் இன்று அமைந்த புலவரவை என்றும் நினைக் கத் தக்கதே. எப்புலவர் எப்புரவலர்க்கு இத்தகைய பணியை எந்நாட்டில் எக்காலத்திற் புரிந்தார்? யாம் கண்டு கேட்ட வரலாறுகளில் எங்கும் இல்லை. அரசரே, நும் வாழ்நாள் எல்லாம் எம்போன்ற பல புலவர்களிடம் பெற்ற செய்யுட்களையும் இம்மதுரைக் காஞ்சியையும் துலையில் இட்டு ஆராயின், இதுவே சிறப்பெய்தும்*

என்பது எமதுஊறுதியான கருத்தாம். இவ்வாறு எதிர் காலத்தில் இப்புலவர் பெருமான் நுமக்கு இயற்ற விருக்கும் பேருதவியை நினைந்தோ, இறைவன் திரு வருளால் இளம்பருவத்தில் போரின் பொருட்டு வஞ்சினம் கூற நீர் பாடிய செய்யுளில்,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாகப்
புலவர் பாடாது வரைகஎன் னிலவரை."

என்று சூளுரைத்தீர்? இனி நீர் எம் நண்பர்க்குச் செய்யலாம் கைம்மாறு அவர் சொல்லிய நெறி பற்றிப் பேரின்பப் பேறு பெற முயல்வதேயாம்.

பிற புலவர்கள்:—யாமும் அவ்வாறே தெரிவித்துக் கொள்கிறோம்.

நெடுஞ்செழியன் :—அவ்வாறே ஆகுக. இனி நாம் நம்முயற்சியைத் தொடங்க எல்லாம் வல்ல எம்பெரு மான் திருவருள் பெறுவோமாக. எல்லாவுலகும் எல்லா வுயிரும் இவ்வுண்மை யுணர்ந்து பெருவாழ்வு பெற முயல்வனவாக. இனி இச்சபை கலையலாம்.

அன்று அச்சபை கலைந்ததன்மேல் நெடுஞ்செழி யன் தனது அரசியன் முறையிற் பற்று இழந்து, தன் மைந்தன் தோள்மேல் அப்பொறையை அறிஞர் பலர் உவப்ப இறக்கினான்; ஜனகர் முதலிய பெரியார் போல நாட்டின்கணிருந்து சில நாள் அவா என்ற பிறப்பீனும் வித்தை அழிக்க முயன்றான்; அம்முயற்சியிற் சித்தி பெற்றதும், நல்லோர் பலர் முன் சென்ற நெறி பற்றித் தவ வொழுக்கம் பூண்டான்.

'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

'யானெனை தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

'தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

என்ற மெய்ம்மொழிகள் பொய்ம்மொழி யாகுமோ? புறப் பகை பல வென்று புகழ் படைத்த நெடுஞ்செழியன், அகப் பகை வென்று அழியா வாழ்வு அடையத் தகுதி யுடைய னாயினன்.

சுபம்.

The B. N. Press, Mount Road, Madras.